www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 | டிசம்பர் 2005 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 86


## சர்வாதிகாரக் கதிரையில் மஹிந்த




## புதிய ஜனாதிபதியும் சவால்களும்!

தீர்வுத் திட்டம் அடிப்படையொன்றில்லாது பேச முடியாது என்பது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு. தீர்வுத் திட்ட அடிப்படையோ நிபந்தனைகளோ இன்றி பேசலாம் என்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு. அதேவேளை சமாதான நடவடிக்கைகளில் இறங்கும் படி அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் நெருக்கு வாரம் கொடுக்கத் தொடங்கிவிட்டன. இந்தியா அதன் அக்கறைகளை நிலை நாட்டிக் கொள்ள தனது காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளது.

வாழ்க்கைச்செலவு அதிகரித்து பொருளாதார பிரச்சினைகள் உக்கிரமடைந்து நாட்டில் மேலும் வறுமை தலைதூக்கும் நிலையே காணப்படுகிறது. இதற்கு தீர்வு காண்பதற்கு யுத்தமற்ற அமைதியான சூழல் அவசியம். அச்சூழலை ஏற்படுத்த தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். வறுமை ஒழிப்பு விடயத்திலும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்றும் கூறி சமாதான நடவடிக்கைகளினூடாக இலங்கை மீது அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் நோர்வே இந்தியா போன்றவற்றின் பிடிகள் இறுகி இருக்கின்றன.







இந்த நிலைமையில் பதவி ஏற்றிருக்கும் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் வறுமையை ஒழிப்பதிலும் யுத்தத்தை நிரந்தரமாக நிறுத்துவதிலும் அவற்றுக்கான வெளியுறவை பேணுவதிலும் கடும் சவால்களை எதிர் கொள்வார் என்பதனைக் கூறுவதற்கு அதிக அவகாசம் தேவைஇல்லை.

வறுமையை ஒழித்து தேசிய பொருளாதாரத்தை கட்டப் போவதாகக் கூறும் அவர் பழைய ஜனாதிபதிகளைப் போலவே கடன் உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களினதும் நாடுகளினதும் நிர்ப்பந்தங்களுக்கும் நிலைகளுக்கும் அடிபணிய வேண்டிய நிலையே ஏற்படும். அதனால் அவர் வாக்குறுதி கொடுத்துள்ளது போன்று மக்களின் நலன்புரித்

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

## ஜனாதிபதியின் முன்னெடுப்புக்கள் சமாதானத்திற்கா? அல்லது யுத்தத்திற்கா?

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது உயர் மட்ட அதிகாரிகளுடன் புதுடில்லியில் அதிஉயர் நிலை ஆலோசனை நடத்தியிருக்கிறார். அச் சந்தர்ப்பத்தில் இந்திய ஆட்சியின் கொள்கை வகுப்பாளர்கள் சியாம் சரண், நாராயணன் உட்பட முக்கிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இப் பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்டு முடிவாக்கப்பட்ட விடயங்களுக்கு பிரதமர் மன்மோகன் சிங் இறுதிக் கட்டப் பேச்சில் கலந்து கொண்டு ஒப்புதல் வழங்கி இருக்கிறார். இச் சந்திப்பிற்கு முன்னதாக இலங்கையில் இருந்து இந்திய உயர்ஸ்தானிகர் திருமதி நிருபமா ராவ் புதுடில்லி சென்று மந்திராலோசனை செய்திருந்தார். அதேவேளை இலங்கை வர இருந்த நோர்வேயின் இலங்கைக்கான விஷேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கான பயணத்தை ரத்து செய்து விட்டு புதுடில்லி சென்றிருந்தார். அங்கு இவர்களின் சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்ற சமகாலத்தில் இந்திய இராணுவத்தின் தென் மண்டலத்துக்கான கட்டளைத் தளபதி இலங்கைக்கு வந்து இலங்கை இராணுவத் தளபதிகள் உயர் அதிகாரிகளுடன் கலந்து பேசி ஆலோசனை நடாத்தியிருந்தார்.

இவற்றையெல்லாம் நோக்கும் போது புதிய ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் குறிப்பிட்டது போன்று ஆசிய நாடுகளுடனான நெருக்கம் ஒத்துழைப்பு என்பதற்கு இணங்க இந்தியாவுடன் அதிநெருக்கத்திற்குரிய செயற்பாடுகள் நடைமுறையாகி வருவதையே காணமுடிகின்றது. இது ஏற்கனவே மேற்குலகத்தின் பின்னணியில் ஒஸ்லோவில் மையப்படுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தையானது இப்போது புதிய ஜனாதிபதியின் கீழ் புதுடில்லிக்கு மாற்றப்பட்டிருப்பதையே எடுத்துக் காட்டுகிறது. அதனால் இதுவரை அமெரிக்க மேற்குலக யப்பானிய நாடுகளால் கையாளப்பட்ட சமாதானத்திற்கான நடவடிக்கைகள் இனிமேல் இந்தியாவால் கையாளப்படப் போகின்ற சூழலையே புதிய போக்குகள் புலப்படுத்துகின்றன.

அதேவேளை இலங்கையின் ஆயுதப்படைகளின் தலைமைகளில் மாற்றங்களையும் நியமனங்களையும் செய்வதில் ஜனாதிபதி அதி அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். முக்கிய பாதுகாப்புத்துறை ஆலோசகராக தனது சகோதரரான கோயாபாத ராஜபக்ஷவை மேஜர் ஜெனரலாக்கி நியமனம் வழங்கியுள்ளார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக்கியும் உள்ளார். மேலும் பத்தாயிரம் பேரை படையில் சேர்க்கவும் முடிவாகி உள்ளது. இவையாவும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக என்றே கூறப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

## மலையகத்தில் அமைதியை குலைக்கும் கைதுகள் நிறுத்தப்பட வேண்டும்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுனர்களின் போராட்ட பேரணியொன்று 2004 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி அட்டனில் நடைபெற்றது. அட்டன் டன்பார் மைதானத்திலிருந்து பத்தனை ஸ்ரீபாத கல்லூரியை நோக்கி சென்ற பேரணி மீது அட்டன் மல்லியப்பூ சந்தியில் பொலிஸார் தாக்குதல் நடத்தினர். அதனால் பலர் காயமடைந்தனர்.

அந்த பேரணியில் பொலிஸ் வாகனங்களுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தற்போது சிலர் கைது செய்யப்படுகின்றனர். பொலிஸார் கைது செய்வதற்கான கட்டளையுடன் பலரைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றனர். இதனால் கல்வியியல் கல்லூரியில் பயிலும் ஆசிரிய பயிலுநர்களும் வெளியேறியுள்ள ஆசிரிய பயிலுநர்களும் அவர்களது பெற்றோர்களும் அமைதி இழந்து காணப்படுகின்றனர்.

அந்த பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு எதிரான அட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்கொன்றை பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர். அதில் சம்மந்தப்பட்டதாக மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் லோரன்ஸ் மலையக தொழிலாளர் முன்னணியின் முன்னாள் உபதலைவர் அய்யாத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்தோ, பிணையில் விடுதலை செய்யப்பட்டதை அடுத்தோ லோரன்ஸோ அய்யாத்துரையோ கைது செய்யப்பட்டதை ஒரு சமூகப் பிரச்சினையாக கொள்ளவில்லை. அவர்கள் மௌனம் காக்கின்றனர். அவர்களின் கைதுடன் இப்பிரச்சினை நிற்கப்போவதில்லை. பொலிஸார் பெயர்ப்பட்டியலை வைத்துக்கொண்டு இன்னும் பல பேரை கைது செய்ய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிந்து கொள்ள முடிகின்றது.

அன்றைய பேரணியில் தாக்கப்பட்டவர்களுக்கோ காயமடைந்தவர்களுக்கோ இதுவரை எவ்வித நியாயமும் கிடைக்கவில்லை. அதேவேளை கல்லூரி நிர்வாகத்திலுள்ள சிலர் மாணவர்களின் உணவிற்காக ஒதுக்கப்பட்ட பணம் உட்பட கல்லூரியின் சொத்துக்களை மோசடி செய்தனர

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## மேல் கொத்மலைத்திட்டத்தை மறுத்து எதிர்ப்புப் போராட்டங்கள் தொடரும்

மேல்கொத்மலைத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என புதிய நீர்மின் சக்தி அமைச்சர் ஜோன் செனிவரட்னவிடம் வலியுறுத்தப்படவிருக்கிறது. மேல்கொத்மலைத்திட்டத்தை முற்றாக கைவிடும்படி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் பற்றி அவருக்கு விளக்கமளிப்பதுடன் அத்திட்டத்தை கைவிடும்படி அவரை வற்புறுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு நவம்பர் 13ஆம் திகதி நடாத்திய மக்கள் மாநாட்டில் மேல்கொத்மலைத் திட்டத்தை முன்னெடுப்பதென்ற இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைப்பாடு கண்டிக்கப்பட்டது. அத்துடன் யார் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் மேல்கொத்மலைத்திட்டத்தை முற்றாக கைவிட வேண்டும் இல்லாவிட்டால் தொடர்ந்து போராடுவோம் என்றும் அம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி புதிய அமைச்சரிடம் மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதெனவும் அதனை முற்றாகக் கைவிட வேண்டும் என்றும் மக்கள் போராட்டங்களினூடே அழுத்தங்களை கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியிலும் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. பூண்டுலோயா டன்சினனிலும், தலவாக்கொல்லை வோக்கர் சன்ஸ் தொழிற்சாலைக்கு அருகிலும் வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஜப்பானிய பொறியிலாளர்கள் தலவாக்கொல்லையில் அவர்களது வேலைகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இது குறித்து மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் கடுமையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அழிவு நிறைந்த திட்டத்தை தடுத்து நிறுத்த தொடர்ச்சியான போராட்ட நடவடிக்கைகளில் இறங்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

தொடர்ச்சியான எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் இத்திட்டத்திற்கு கடனுதவி செய்யும் ஜப்பானுக்கும் மக்களின் எதிர்ப்பு பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஜப்பான் இத்திட்டத்தில் அதனது பொருளாதார ஏகாதிபத்திய அக்கறைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தை கொண்டிருப்பதால் மக்களின் எதிர்ப்பை கணக்கெடுக்காமல் இத்திட்டத்திற்கு உதவிகளை வழங்கி வருகிறது. இதற்காக மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் ஜப்பானுக்கு மக்களின் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறது.

## சிறிய பாடசாலையை விழுங்க முயற்சி ஸ்கந்தா உபஅதிபர் மும்மரம் ஏன்?

இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பின்பும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்பும் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க பெரும் பாடசாலைகள் வளர்ச்சி கண்டன 'ஏ' தரம் உடைய அப்பாடசாலை வளர்ச்சிக்கு அவற்றின் அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் மணவர்கள் பெரும் பங்காற்றினர். அதே வேளை அப்பிரதேசங்களின் சிறிய பாடசாலைகளும் கல்வித் தரத்தையும் மாணவர் ஒழுக்கங்களைப் பேணியும் பங்களித்தன. தரமான ஆரம்பக் கல்வியை வழங்கிய இச் சிறிய பாடசாலைகள் பெரும் பாடசாலைகளுக்கு ஊட்டமளித்தன. இவ்வாறான ஒரு பாடசாலையே சுன்னாகம்- கந்தரோடை ஸ்கந்தவரதோய கல்லூரி ஆகும். ஸ்கந்தா என்றதும் அதன் அதிபராக இருந்து பெரும் பணியாற்றிய ஒறேற்றர் சி.சுப்பிரமணி யம் நினைவே வரும். மற்றும் பல புகழ்பெற்ற ஆசிரியர்களும் அங்கு கல்வி கற்பித்த ஞாபகம் வரச்செய்யும்.

அத்தகைய கல்லூரியின் நிர்வாகம் குறிப்பாக உப அதிபர் ஒருவரது குறுக்குவழி உபாயத்திற்கு துணைநிற்கும் செயலில் ஈடுபடுகிறது. அதாவது அக் கல்லூரிக்கு அருகில் உள்ள சிறிய க.த.க பாடசாலையை விழுங்கி அதனை இல்லாமல் செய்ய திரை மறைவில் முயற்சிக்கப்படுகின்றது. என அறிய முடிகிறது. காரணம் ஸ்கந்தாவை தேசியப் பாடசாலையாக மாற்றுவதற்கு ஏற்ற விதமாகவே அச் சிறிய பாடசாலையை இல்லாமல் செய்யவேண்டும் என்பதில் குறிப்பாக ஸ்கந்தாவின் உப அதிபர் மும்மரம் காட்டி வருகிறார். ஒரு பாடசாலை தேசியப் பாடசாலையாக மாற்றம்படுவதை எவரும் எதிர்க்க மாட்டார்கள். ஆனால் அதற்குரிய வழிகளில் விதிகளுக்கு அமைய அது நடைபெற வேண்டும். தவிர அன்றிலிருந்து தரமான ஆரம்பக் கல்வியை சாதாரண குடும்பப் பிள்ளைகளுக்கு வழங்கி வந்த சிறிய பாடசாலையை விழுங்கித் தான் தேசிய பாடசாலைக்கான வயிற்றை நிரப்ப காட்டவேண்டியதில்லை. குறுக்கு வழிகளாலும் வெறும் வெற்று வேட்டுத்தனப் பேச்சுக்களாலும் அல்லது செல்வாக்கினாலும் எந்த ஒரு பாடசாலையை செயற்கையாகக் கொண்டு தேசியப் பாடசாலையாக்கி விடமுடியாது. முறையான கல்வித்தரமும் போதிய வளங்களும் தேவையும் இருந்தால் தேசியப் பாடசாலை என்ற தரம் வரவே செய்யும். தற்போது அப்பெரும் பாடசாலையில் மாணவர் தொகைக்கு மேலாக ஆசிரியர்கள் இருப்பதாக அறிய முடிகிறது. இதனை வருடாந்த பரிசளிப்பு விழா அறிக்கையில் ஆசிரிய- மாணவர் தொகை குப்பிடாமல் விட்டதில் இருந்து அறிய முடிகிறது. கல்வித் தரத்தை சீர்செய்து மாணவர் தொகையை அதிகரிக்க வழிமுறைகளை நிர்வாகம் கண்டு பிடிப்பதை வட்டு பக்கத்து பாடசாலை மாணவர் களைப் பறித்தெடுத்து தேசியப் பாட சாலையாக்க நிற்பது அநீதியானதா கும். தமது பெயர் புகழ் அந்தஸ்த்துக் காக சிறிய சாதாரண மக்களது பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியை நசுக்கி தேசியப்பாடசாலை தோற்றுவிக்கப்படக் கூடாது.

இவ்வாறு செயல்படுவதில் மும்மரமாகி உள்ள உப அதிபர் கொஞ்சம் நா வல்லமை கொண்ட சமயப் பிரசங்கியாவார். அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைத்து அடியார்களின் முகத்தில் அப்பி பட்டங்கள் பொன்னாடைகள் வாழ்த்துக்கள் பெறுவது அவரது பிரதான தொழிலாகும். ஆனால் 'பாடுவது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்பது போன்றே கோவில்' குளங்களில் பிரசங்கம் செய்து விட்டு தனது சொந்த பதவி புகழ் அந்தஸ்துக்காகப் பக்கத்தில் உள்ள சிறிய பாடசாலையை இல்லாமல் செய்ய முயற்சிப்பது எத்தகைய சிவ நீதி என்றே அப்பாடசாலையின் ஆசிரியர்கள் பெற்றோர் மாணவர்கள் குமுறுகின்றனர்.

**சுன்னாகம்** **ம.குகநேசன்**

## வவுனியா விவசாயத் திணைக்களம் கவனிக்குமா?

இலங்கை ஒரு விவசாய நாடு. ஆனால் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலைமை அரசின் சாதாரண அதிகாரி முதல் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் வரை எவரும் அக்கறை செலுத்துவதில்லை. சம்பளம் பெறுவதில் மட்டும் அதிக அக்கறை காட்டுவார்கள்.

வவுனியாவில் பிரதான பொருளாதாரம் விவசாயமாக உள்ளது. ஆனால் இன்று அங்கு விவசாய முன்னேற்றம் குறைந்து கொண்டே வருகின்றது. காரணம் விவசாயத்திற்கு எந்த அரச அதிகாரிகளும் பூரண ஊக்குவிப்பு வழங்குவதில்லை அதாவது பெருமளவில் ஏற்படும் நோய்த்தாக்கங்களிற்கு ஆலோசனை வழங்குவதில் அசமந்தப் போக்கே கடைப்பிடிக்கப்படுகிறது.

இன்று வவுனியாவில் பெருமளவில் காடுகளும், குளங்களும் நிர்மூலமாக்கப்படுவதனால் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு காடுகளில் உள்ள நோய்த்தாக்கம் ஏற்படுத்தும் வண்டுகளும், பூச்சிகளும் மக்களின் பராமரிப்பு மரங்களை தாக்குகின்றன. அந்தவகையில் தான் வவுனியாவில் தென்னம் தோட்டங்களில் மிக மோசமான வண்டுகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இதற்கு விவசாய உத்தியோகத்தர்களோ உயர் அதிகாரிகளோ இந்நோய்தாக்கத்தை அங்கு சென்று கேட்டறிந்து எந்த ஆலோசனையும் உதவியும் வழங்குவதில்லை.

வவுனியாவில் ஒவ்வொரு வீடுகளிலும் குறைந்தது 5 தென்னை மரங்களும், இதைவிட அதிக எண்ணிக்கையான தென்னம் தோட்டங்களும்ஏராளாமாக உள்ளன. ஆனால் அவை இன்று வேகமாக பரவிவரும் தென்னம் வண்டின் தாக்கத்தினால் தென்னை மரங்கள் அழிவடைந்து வருகின்றன. இந்நிலை தொடருமாயின் குறிப்பிட்ட காலத்தில் தேங்காயின் விலை மேலும் பலமடங்காகி விடும்.

இந்நிலை வவுனியாவில் மட்டுமன்றி தென்னை மரங்கள் வளரும் நாட்டின் சகல பகுதிகளிலும் இத் தென்னை வண்டுத்தாக்கம், மற்றும் தேங்காயில் ஏற்படும் நோய் போன்றவற்றால் தெங்கு உற்பத்திகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் விரைவில் தேங்காய் இறக்குமதி செய்யும் நிலை வரலாம். இத்தென்னை நோய்கள் திட்டமிட்ட ஒரு வகை சதியாகவும் இருக்கலாம். தாராள இறக்குமதிக்கு முதலில் உள்ளூர் உற்பத்தியை அழிப்பது என்பது ஏகாதிபத்திய சமகால கொள்கையாகும். விவசாயத்தில் பூச்சிகளை பரவ விடுவதும் அதன் மூலம் அழிவுகளை ஏற்படுத்தி தமது உற்பத்திகளை விற்பனையாக்குவது அவர்களது உபாயமாகும். இதற்கு அரசாங்க அதிகாரிகள் துணை போகிறார்கள். எனவே வவுனியாவில் ஏற்பட்டுள்ளதென்னை அழிவுக்கு பரிகாரம் காணவேண்டும். என இப்பிரதேச மக்கள் விவசாய திணைக்களத்தை வற்புறுத்துகிறார்கள்.

**வவுனியா** **வி.அரிச்சந்திரன்**

## நாலும் நடக்கும் உலக'லே

நற்குணன்

### ஏமாறச் சொன்னது. நாமோ?

யூஎன்.பி தலைவர் தன்னை விடுதலைப் புலிகள் ஏய்ந்து விட்டார்கள் என்ற தோரணையில் பேசியிருக்கிறார். உண்மையென்னவென்றால் தமிழ் மக்களை அவர் ஏய்க்க முடியாமல் செய்துவிட்டார்கள் என்பது தான். பகிஷ்கரிப்பு ஆலோசனையைப் புதிய ஜனநாயகக் கட்சி முன்வைத்த பின்னரே விடுதலைப் புலிகள் படிப்படியாகத் தமது பகிஷ்கரிப்பு நிலைப்பாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். இது என்ன காரணத்திற்காக என்றாலும், நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய ஒரு முடிவு. எந்தத் தமிழ் மக்களும் யூஎன்.பியை ஏய்த்ததாகச் சொல்ல நியாயமில்லை. யூஎன்.பியும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் மாறி மாறி ஏய்த்து வந்த கதைகள் புத்தகக்கணக்கில் அடங்கும். பச்சையான பேரினவாதிகளுடன் சேர்ந்து கட்சி நடத்துகிற ரணில் விக்ரமசிங்ஹவுக்குத் தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று என்ன கட்டாயம்?

### இப்படியும் ஆதரவு

கினிகத் ஹேனையில் நவீன் திஸாநாயக்க ஆற்றிய உரையில் ரணில் விக்கிரமசிங்ஹவின் தூண்டுதலாலேயே கருணா விடுதலைப் புலிகள் அமைப்பை உடைத்து வெளியேறினார் என்று சொன்னதன் விளைவாக யூஎன்.பி பற்றிச் சிறிது மயக்கங்களை வைத்திருந்த தென்பகுதித் தமிழர்கள் தமது மனத்தை மாற்றிக் கொண்டனர் என்று தெரிகிறது. நவீன் திஸ்ஸாநாயக்கவின் முக்கிய நோக்கம் ரணிலுக்குச் சிங்களப் பேரினவாத ஆதரவை வென்று தருவது இல்லை என்றே நம்புகிறேன். ரணில் விக்ரமசிங்ஹவை அம்பலப்படுத்தித் தமிழ் ஆதரவைக் குறைத்து அவரைத் தோற்கச் செய்து தலைமையிலிருந்து கழற்றுவதும் அவரது நோக்கமாயிருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. கட்சிக்குள் ரணிலின் போட்டியாளர் நவீனின் மாமனார் ரணிலால் ஒரங்கட்டப்பட்டவர். அடிபட்ட புலி சும்மா இருக்குமா? இந்த நாடகத்தில் மிலிந்த மொறகொட விளக்கமளிக்கிறது. போலப் பேசி நவீன் சொன்னதை உறுதிப்படுத்தியதோடு விடுதலைப்புலிகளி வலிய எதிரியாக யூஎன்.பி யே இருந்து என்றும் சுட்டிக் காட்டியிருந்தார். ரணிலின் நோக்கம் என்னவானாலும் அவரது தேர்தல் தந்திரம் வேறாகவே இருந்தது. அதற்குக் குழிபறித்தவர்களைப் பற்றி முதலில் அவரது ஆதரவாளர்கள் கவனிக்க வேண்டும்.

### கூலிகன்கு மாரடிப்போர்

கூலிப்படைகள் ஆயுதம் தாங்க வேண்டியதில்லை. பேனை தாங்குகிற கூலிப்படைகள் நிறைய உள்ளன. டி.பி.எஸ் ஜெயாராஜ் எழுதிய கட்டுரையை வைத்து அது வெளியான பத்திரிகை எது வென்று சொல்லக் கூடியமாதிரி நாடிபிடித்து எழுதும் வல்லமை அவருக்கு உண்டு. கனடாவில் இருந்து கொண்டே இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையும் போரும் பற்றி ஆங்கிலத்தில் எழுதிக் குவிக்கிறவர் இவர்.

தேர்தலுக்கு நான்கு நாட்கள் முன்பு தமிழ்மக்களும் விடுதலைப்புலிகளும் தமது வாக்குரிமையைப் பிரயோகிப்பதன் அவசியம் பற்றி சண்டேலீடரில் எழுதினார். அதன் நோக்கம் நமக்கு விளங்காமலா போகும். இப்போது தேர்தல் முடிவு வந்த பின்பு அதே ஏட்டில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் சன நாயக உரிமையை மறுத்துவிட்டதாகப் பிலாக்கணம் வைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டாயம் இல்லாமலே வடக்குக்கிழக்கிலும் குறிப்பிடத்தக்க தொகையினர் வாக்குச் சீட்டைப் பழுதாக்கிக் கொண்டனர். தமிழ் மக்கள் ஏன் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று ஜெயராஜிக்குச் சொல்ல முடியுமா?

### ருத்திராட்சப் பூனைகள்

சுதந்திரத் தேர்லுக்கான என்.ஜி.ஒவான ப..்.பரல் அமைப்பின் சார்பில் பாக்கிய சோதி சரவணமுத்துவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் தமிழ்மக்கள் தமது வாக்குரிமையைப் பாவிக்கத் தவறிவிட்டது பற்றியும் விடுதலைப்புலிகளின் நிர்ப்பந்தத்திலேயே இது நடந்தது என்றும் சினந்துள்ளனர். அவர்கள் விரும்பிய முடிவு வராததாலேயே இந்தக் கோபம். யாருக்கு வாக்களிப்பது என்ற சுதந்திரம் யாருக்குமே வாக்களியாமல் விடுகிற சுதந்திரத்தையும் உள்ளடக்குகிறது என்பது இந்தச் சனநாயகக் காவலர்கட்கு விளங்காததா?

தேர்தல் என்பது யாரை நம்பி ஏமாறுவது என்பதைப் பற்றியதாகவே இருக்க வேண்டுமா? யாரையும் நம்பி ஏமாறாமலிருக்கும் சுதந்திரமும் அதற்குள் அடங்கக் கூடாதா? இந்த ருத்திராட்சப் பூனைகளை நம்புவதை விட ஒரு சர்வாதிகாரக் கொடுகோவனை நம்பலாம்.

### ஒரு தரகரின் தகிடுதத்தம்

சந்திர சேகரனுக்கு மலையக மக்களின் பிரச்சனைகளில் உள்ள அக்கறையை விட வடக்கு கிழக்குப் பிரச்சனையில் அக்கறை கூட என்கிற மாதிரி ஒரு தோற்றம் உண்டு. மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து நடக்கிற ஆர்ப்பாட்ட எதிர்ப்புகளில் ஒரு தடவை கூட பங்குபற்றாத இவர், வன்னிக்கு ஒடுவது என்ன வரங் கேட்பதற்கு என்பது இப்போது வெட்ட வெளச்சமாகிவிட்டது.

யூஎன்.பி க்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடைத்தரகராகவே சந்திர சேகரன் செயற்பட்டு வந்திருக்கிறார். நவீன் திஸ்ஸாநாயக்கவின் மூலம் யூஎன்.பி.யின் குட்டு பகிரங்கமானவுடன் யூ.என்.பிக்கு ஒரு மிரட்டல் அறிக்கையை வெளியிட்டு விட்டுக் கிளிநொச்சிக்குப் போய்க் கெஞ்சியும் பயனில்லாமல் திரும்பி வருமுன்னமே பகிஷ்கரிப்பு ஆலோசனையை மலையகத் தமிழருக்கும் பொருந்தும் என்று தமிழிச் செல்வன் அவரிடம் சொன்னதாகக் கதை பரவி விட்டது.

அதைச் சமாளிக்கத் தமிழ்ச்செல்வன் அப்படி எதுவுமே சொல்லவில்ல என்றும் தான் யூஎன்.பியை ஆதரிப்பது சரியென்று சொன்னதாகவும் ஒர் மறுப்பை வெளியிட்டார். பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? விடுதலைப் புலிகளுடன் பேசிய பின்பு தமிழ்த் தேசியக் கூட்டணி விடுத்த அறிக்கை சந்திரசேகரனின் புளுகை இரண்டே நாளில் அம்பலப்படுத்தி விட்டது.

கொட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்கு என்று சொல்வார்கள். எனவே சந்திரசேகரனின் கெட்டித்தனம் எவ்வளவு?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இப்படி யூ.என்.பியை பழிவாங்கியிருக்கக் கூடாது. கூட்டமைப்பு எம்.பி மார் பொருமுகிறார்கள்

அன்று தொட்டு இன்று வரை தமிழர் பாராளுமன்றத் தலைமைகள் யூ.என்.பி சார்பும் விசுவாசமும் கொண்டவர்களாகவே இருந்த வந்துள்ளனர். இதற்கு காரணம் அவர்களது வர்க்க சாதிய மேட்டுக்குடி பழமைவாதப் பின்புலமேயாகும். தமிழ் காங்கிரஸ், தமிழரசு, தமிழர் கூட்டணி என்பனவற்றின் ஊடே அவர்களது நிலை யூ. என்.பி சார்பானதாக நீடித்து வந்துள்ளது. சைவ-கிறீஸ்தவ வேளாள ஆதிக்க கருத்தியல் என்பது எப்போதும் யூஎன்.பி சார்பாகவே இருந்தது. இவர்கள் எல்லோரும் பௌத்த சிங்களப் பேரினவாதம் பற்றி நீட்டி நிமிர்த்திப் பேசி வந்த போதிலும் தெற்கின் அரசியலில் யூஎன்.பி யை கருத்திலும் செயலிலும் முன்நிறுத்தியே செயற்பட்டு வந்திருக்கின்றனர். இரண்டு பேரினவாதத் தலைமைகளைப் பற்றிய கணிப்பில் யூஎன்.பி பற்றி அடக்கி வாசித்து அதன் அகோரத்தை மறைத்துக் காட்டியும் அதே வேளை சி.ல.சு. கட்சியை விரித்துக் காட்டுவதிலும் பின் நிற்பதில்லை. இதற்கு வர்க்க சார்பும் மேற்குலக இந்திய அரவணைப்புகளும் காரணங்களாகும்.

இத்தகைய வழிவந்த தற்போதைய தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலருக்கு யூஎன்.பி.யின் ஜனாதிபதித் தேர்தல் தோல்வியை ஜீரணிக்க முடியவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது உள்ளக் கிடக்கையான யூ.என்.பி சார்பு கருத்துக்களை வெளியிட்டும் வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் எடுத்த நிலைப்பாடும் வடக்கு கிழக்கு மக்களின் தேர்தல் புறக்கணிப்பும் அதன் காரணமான யூஎன்.பி யின் தோல்வியும் சில கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பலத்த சம்மட்டி அடியைக் கொடுத்துள்ளது. ஒரு புறம் அதிர்ச்சி மறுபுறம் ஆத்திரம். "ஒரு காலமும் நிகழாத ஒன்றை நிகழ்த்தி விட்டார்களே. இப்படி யூஎன்.பியை பழிவாங்கியிருக்கக் கூடாது" என்றெல்லாம் தங்களுக்குள் புலம்பிப் பொருமிக் கொள்ள வேண்டியதாயிற்று "மாமியாரின் சேலை உரிந்தால் வாயாலும் சொல்ல முடியாது. கையாலும் காட்ட முடியாது" என்ற பழமொழி நிலையில் இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். எந்த முகத்தோடு சென்று பாரா ளுமன்றத்தில் ரணிலுக்கும் ஏனைய யூஎன்.பி யினருக்கும் பதில் கூறுவது என்று குழம்பிப்போய் நிற்கிறார்கள் இக் கூட்டமைப்பு பா.உ.க்கள். இரண்டு பேரினவாதக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் தகுந்த பாடத்தை வழங்கி உள்ளார்கள் என்று மனசுத் தத்துடன் உரத்துச் சொல்வதற்கு எந்த ஒரு கூட்டணி. வழிவந்த தமிழ் பா.உ வுக்கும் மனம் வரவில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இத்தகையோரின் முகங்களிலும் வடக்கு கிழக்கு மக்கள் கரி பூசியுள்ளனர். இந்நிலையில் வடக்கு கிழக்கு மக்கள் தேர்தல் புறக்கணிப்புடன் மட்டும் திருப்தியடையாது இரண்டு பேரினவாதக் கட்சிகளின் இன மத அடிப்படைகளை மட்டுமன்றி அதற்கும் அப்பால் வேரோடி நிற்கும் வர்க்க அடிப்படைகளையும் அரசியல் பொருளாதார சமூக நிலை நின்று கண்டு கொள்ள வேண்டும். அதன் மூலமே தேர்தல்களுக்கு அப்பாலும் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளை எதிர்கொள்ளவும் தோற்கடிக்கவும் முடியும்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தேர்தல் பரிசு

தெரனியகல, எட்டியாந்தோட்டை, தெனியாய போன்ற பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டள்ளனர். ஜனாதிபதி தேர்தலை அடுத்து அவர்கள் பேரினவாத குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். தாக்கியவர்கள் தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டதாக கூறி தொழிலாளர்களை தாக்கியுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களை மேற்படி பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கும் நோக்கில் திட்டமிட்டு தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். இதனால் அவ்வப்போது சில குடும்பங்கள் அவ்விடங்களிலிருந்து வெளியேறியும் வருகின்றன. ஆனால் எல்லோரும் வெளியேற முடியாது.

வெளியேறாது அங்கு தொடர்ந்து இருந்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அவர்களிடமிருந்து ஓட்டுப் பெற்ற தலைமைகளும் அதைப்பற்றிக் கவலைப்படுவதுமில்லை. தாக்கப்பட்டவுடன் பத்திரிகைகளுக்கு வீராவேசமாக அறிக்கைகளை விடும் ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ்ப் புரோக்கர்களுக்கு தொடர்ந்தும் தாக்கப்படும் தொழிலாளர்கள் பற்றி கவலை இல்லை. தேர்தல் வரும் போதெல்லாம் தோட்டத் தொழிலாளர்கள் மீது அளவு கடந்த பாசம் காட்டுவார்கள். தேர்தல் முடிந்தவுடன் எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள்.

இவற்றுக்கு முடிவு கட்டும் வகையில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் அடையாளத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்கு ஏற்ற சூழல் அதற்குரிய அரசியல் தலைமைத்தவத்தினாலேயே தோற்றுவிக்கப்படும். இனவாத, முதலாளித்துவ கட்சிகளாலும், அவற்றின் அடிவருடிகளாலோ சாயம் வெளுத்துப் போயிருக்கும் பழைய இடதுசாரிகளாலோ எதையுமே செய்ய முடியாது.

# பெத்த திருநாடே!

சண்டை துவங்கவெண்டு பெத்த திரு நாடே- பல
சன்னதங்கள் ஆடி வந்தார் பெத்த திரு நாடே
வெண்டு தருவமெண்டு பெத்த திரு நாடே - பல
வெளிநாடு போயலைவார் பெத்த திரு நாடே

போரின் நிறுத்த மெண்டார் பெத்த திரு நாடே- பின்
பெருங்குழப்பம் பண்ணுகிறார் பெத்த திரு நாடே
ஊரை அணாப்புகிறார் பெத்த திரு நாடே- நல்லா
உறவாடிக் குடி கெடுப்பார் பெத்த திரு நாடே

பேசிக் கதைப்பமென்பார் பெத்த திரு நாடே - தாம்
பேசியது செய்தறியார் பெத்த திரு நாடே
நீசத் தனங்கள் பல பெத்த திரு நாடே - இங்கே
நித்தமும் நடக்கு தெல்லோ பெத்த திரு நாடே

பெட்டியிலே தாள் நிரப்பி பெத்த திரு நாடே - ஒரு
பெரியவரைத் தெரிவ மெண்டார் பெத்த திரு நாடே
தட்டி அடக்கி வைக்கப் பெத்த திரு நாடே - இங்கே
தலைவர் வரத் தேவையென்ன பெத்த திரு நாடே

சருவாதி காரமெல்லோ பெத்த திரு நாடே - சன
நாயகாய் ஆடுதிங்கே பெத்த திரு நாடே
நரிகள் நடுவிருந்து பெத்த திரு நாடே - ஒரு
நாயகரைத் தேருவதோ பெத்த திரு நாடே

போட்டுச் சலிச்சமெணை பெத்த திரு நாடே - எதும்
போடாமல் விட்டமெணை பெத்த திரு நாடே
போட்டதிட்டம் போச்சுதெண்டு பெத்த திரு நாடே - பல
பொல்லாப்பும் பேசுகினை பெத்த திரு நாடே

பாராளுமன்ற மெணை பெத்த திரு நாடே - வெறும்
பகல் வேஷம் போடுமிடம் பெத்த திரு நாடே
சீரான தேசமெங்கள் பெத்த திரு நாடே
உனைச் சீரழியப் பண்ணுமிடம் பெத்த திரு நாடே

தீராத வேதனைகள் பெத்த திரு நாடே - நாம்
தினந்தினமும் தாங்குவதோ பெத்த திரு நாடே
போராட வேணுமெணை பெத்த திரு நாடே - எதும்
பெற வேறே வழியிருக்கோ பெத்த திரு நாடே

-பரதேசிப் பாவாணர்-

# தென்னைமரத்தில் தேள் கொட்டினால்

தென்னைமரத்தில் தேள் கொட்டிப் பனைமரத்தில் நெறி போட்ட கதை மாதிரித்தான் ம.ம.மு.தலைவர் சந்திரசேரனின் சங்கடம், நவீன் திஸ்ஸாநாயக்கவும் மிலிந்த மொறகொடவும் யூஎன்.பி.யின் சூழ்ச்சி வலையைப் பற்றி உளறிக் கொட்டியதும் ரணிலை விடப் பதைத்துப்போனவர் ம.ம.மு.தலைவர். விடுதலைப்புலிகள் இந்தச் சூழ்ச்சியை அறிவார்கள் என்பதால் அலட்டிக் கொள்ளவில்லை. ஆவேசமான கண்டன அறிக்கை வெளியிட்டதோடு யூஎன்.பி யின் முக்கயஸ்தர் ஒருவருடன் தேர்தலுக்கு நாலுநாட்கள் முந்தி அவசர அவசரமாக வடக்குக்கு விழுந்தடித்து ஓடினார். அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது யூஎன்.பி விடுதலைப் புலிகளுக்குக் குழிபறித்தது இதனால் இல்லையென்று ஆகிவிடுமா?

இன்று மலையக மக்களின் அதி முக்கியமான அரசியல் பிரச்சனையான மேல் கொத்மலை திட்டம் பற்றி அவர் இதில் பத்திலொரு பங்கு இல்லை நூற்றிலொரு பங்கேனும் பதை பதைத்திருக்கிறாரா? மலையக மக்களுக்கு ஏற்படும் அழிவு அவருடைய லாப நட்டக் கணக்கைப் பாதிக்கிற விடயமில்லை என்பதாலா?

தென்னிலங்கை அரசியல் வாதிகட்கும் மலையக இளைஞர்கட்கும் தன்னை விடுதலைப் புலிகளின் நண்பராகக் காட்டிக் கொள்ளுகிற ஒருவர் தன் மக்களுக்காகக் குரல் கொடுக்கத் தயங்குவது பற்றி அவரை ஆதரிக்கும் மலையக மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## சகுனங்கள்

காரியம் ஆகும் வரை காலைப்பிடி கையைப்பிடி என்கிறது தான் தேர்தல் அரசியலின் அடிப்படையான தந்திரம். தமிழ் மக்களுக்கு அனுதாபமாகவும் விடுதலைப்புலிகளுக்குப் பகை இல்லாமலும் பேசி வந்த முக்கியப் பிரமுகர்களுள் ராஜித சேனரத்ன ஒருவர். 20-11-05 சண்டே லீடரில் அவருடைய சுயரூபம் வெளியாகிவிட்டது. விடுதலைப்புலிகளை வாங்கு வாங் கென்று வாங்கியிருக்கிறர். இது இனி வருங்காலங் களில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையில் யூஎன்.பி.யின் நிலைப் பாட்டுக்குக் கட்டியங் கூறுகிற ஒரு சிறு நிகழ்வுதான்.

## பயனற்ற பரிந்துரைகள்

பல்கலைக்கழகப் போராசிரியர்களும் கலாநிதிகளும் இன்னமும் யாரையாவது ஆதரித்து அறிக்கை விடத்தான் வேண்டுமா? இவர்கள் சொல்லுகிறவற்றுக்கு மக்கள் என்ன மரியாதை கொடுக்கிறார்கள்? நாட்டின் அரசியல் நிலவரம் பற்றிச் சரிவர அறியாத பேராசிரியர்களும் கலாநிதிகளுமே ஏகப்பெரும்பாலானவர்கள் இவர்களது அறிக்கைகளில் ஒப்பமிடுகிறவர்களது நோக்கம் வெல்லுகிற தரப்பிலிருந்து ஏதாவது சலுகையைப் பெறுகிற நப்பாசை மட்டுமே. உண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களது தேர்தல் ஆலோசனைகளை நம்புகிறவர்களை தெருவோரத்தில் ஜோசியம் சொல்லுகிற சாத்திரக்காரர்கள் சொல்வதை நம்புகிறவர்கள் அதிகம். ஒரு வேளை நம் அறிஞர்களை விட அவர்கள் நேர்மையானவர்களாயும் இருக்கக்கூடும்.

## வாசகர்களே!

### கண்டு பிடியுங்கள்

**1.சில மாதங்களுக்கு முன்பு லண்டனில் வீடு வாங்கிய 'மலையகத் தலைவரின்'பெயர் என்ன?**

**2.சென்னை தியாகராஜ நகரில் புடவைக்கடை வாங்கிய 'இன்னொரு மலையகத் தலைவரின்' பெயர் என்ன?**

**3.இவர்கள் அவற்றை வாங்குவதற்கு எங்கிருந்து லஞ்சப் பணம் கிடைத்தது?**

இதற்கான பதில்களையும், தகவல்களையும் பின்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

புலனாய்வுப் பிரிவு
**புதிய பூமி**
இல.47, 3ஆம் மாடி, C.C.S.M.Complex, கொழும்பு-11

# கசிப்பைக் கட்டுப்படுத்த பியர் விற்பனை!

நாட்டில் கசிப்பு உற்பத்தியும் பாவனையும் அதிகரித்து விட்டதால் அதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. அது என்னவென்றால் நாடு முழுவதும் இருபதினாயிரம் பியர் (Beer Shops) விற்பனைக் கடைகளைத் திறப்பதன் மூலம் மக்களை கசிப்புக்குடிக்காது பியரைக் குடிக்கத் தூண்டுவதாகும். இதனால் கசிப்பை கட்டுப்படுத்தி இல்லாது ஒழித்து விடலாம் என்பதே அத்திட்டமாகும்.

இவ் பியர் விற்பனைக் கடைகள் மாவட்ட ரீதியில் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் மீது மதுபானச் சாலைகள் திறக்கப்படுவது வழக்கம். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது உறவினர்கள் மூலம் மதுபானச் சாலைகளை நடாத்தியும் வந்திருக்கிறார்கள். சிலர் தமக்கு வேண்டியவர்களுக்கு சிபார்சு செய்து அதற்கு 'சந்தோசங்களும்' தாராளமாகப் பெற்றிருக்கிறார்கள்.

இப்போது இந்த பியர் விற்பனைக் கடைகளைப் பெறுவதிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின் நிற்கவில்லை. உதாரணத்திற்கு வவுனியா மூட்டு முறிப்பில் பியர் விற்பனைக் கடைதிறக்கப்பட்டுள்ளது. பெயருக்கு பியர் விற்பனை என்பதே தவிர அங்கு ஏனைய மது பானங்களும் தாராளமாக விற்பனை செய்யப்படுவதாக அறிய முடிகிறது.

இந்த பியர் விற்பனைக் கடையை வன்னி மாவட்டத்தின் ஒரு தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பெற்று அவரது மைத்துனர் அதனை நடாத்தி வருவதாகவும் வவுனியாவில் மக்கள் பகிரங்கமாகவே பேசிக் கொள்கிறார்கள். அண்மையில் வவுனியாவில் மதுபானக் கடை திறப்பதை எதிர்த்து சுவரொட்டிகள் மக்கள் சார்பாக ஒடடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேபோன்று மலையகத்திலும் பியர் விற்பனை கடைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சில் திறக்கப்பட்டும் உள்ளன. அண்மையில் மலையகத்தில் மக்கள் மதுபானக் கடை திறப்பதை எதிர்த்து ஆர்ப்பட்டம் செய்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பியர் விற்பனை மதுவிற்பனையை பாராளுமன்ற உறுப்பினர்களே முன்னின்று சிபார்சு செய்தும் முகவர்களை வைத்தும் நடாத்தும் போது சமூகச் சீரழிவுகளைப் பற்றி பேசுவதில் பயன் இருக்கமாட்டாது என்றே மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

# கோடிகளையும் லட்சங்களையும் கையாடிய மலையகத் தலைமைகள் அம்பலத்தில்!

பொது அரசியல் வாழ்க்கையைப பயன்படுத்தி கூடுதலாகப் பணக் கையாடல் சொத்துச் சேர்ப்பு செய்த மலையகத் தலைவர்கள் யார் என்ற மோதல் இரண்டு வாரமாக தனியார் தொலைக்காட்சி ஒன்றில் விவாதிக்கப்பட்டது. முதலாவது நிகழ்ச்சியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் வீ.புத்திரசிகாமணியும், (கோட் சூட் ரை மின்னும் மோதிரங்களுடனும்) இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் எஸ். சதாசிவமும் கலந்து கொண்டு பேசிக்கொண்டார்கள். இரண்டாவது நிகழ்ச்சியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆர்.யோகராஜனும் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் சதாசிவமும் மோதிக் கொண்டார்கள்.

இதனை அவதானித்த மலையகத் தமிழ் மக்களும் படித்தவர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாகியுள்ளனர். தங்களது தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு பொதுப் பணத்தை கையாடினார்கள் என்பது குறித்து பகிரங்கமாக குற்றஞ்சாட்டிக் கொண்டனர் என்பது மிகவும் வெறுக்கத்தக்கதாகவே இருந்தது.

மலையகத் தமிழ் மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இவர்கள் காட்டிய அரசியல் பாதை என்ன? கொடுத்த அரசியல் தலைமைத்துவம் யாது? அதன் சரி பிழைகள், செய்த சேவைகள் போன்றவற்றைப் பற்றிக் கதைப்பதும், விவாதிப்பதும் தேவையான விடயங்கள். ஆனால் இடம் பெற்றது விவாதமே அல்ல.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்கள் செய்த மோசடிகள், பிற கையாடல்கள் போன்றன பற்றி சதாசிவம் நவம்பர் 20அம் திகதி தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அவற்றுக்கு அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் புத்திரசிகாமணிக்கு எதிர்வினைகளைக் கொடுக்க முடியவில்லை. அதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் யோகராஜன கேட்டுக்கொண்டதற்கு இணங்க 27ஆம் திகதியும் அதே தொலைக்காட்சி சேவையில் நிகழ்ச்சி ஒதுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட யோகராஜன் சதாசிவத்தைப் பார்த்து மிகவும் அநாகரீகமான வார்த்தைகளையே பிரயோகித்துப் பேசினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் சதாசிவமும் அநாகரீகமான வார்த்தைகளை விட்டெறிந்தார். பார்ப்பதற்கே சகிக்க முடியாத கேவலமாக இருந்தது.

நிகழ்ச்சியை நடத்தியவர் அவர்களின் வரம்பு மீறிய வார்த்தைப் பிரயோகங்கள் பற்றி கவலைப்படவே இல்லை. மலையக அரசியல் எப்படியாவது நாறட்டும் என்று இவரும் கைவிட்டு விட்டார் போலும்.

ஆடைத்தொழிற்சாலையில் காசோலை மோசடி செய்ததாகவும், அதில் வேலை செய்த பெண்களை இம்சைப் படுத்தியதாகவும் அவற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்காகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்குள் நுழைந்ததாகவும் யோகராஜன் மீது சதாசிவம் குற்றஞ்சாட்டினார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து பலர் வெளியேறுவதற்கு யோகராஜனே காரணம் என்றும் குற்றஞ்சாட்டினார். நுவரெலியா பிரதேச சபையூடாக பொது மக்களுக்கும் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்களை 3 வருடங்களாக மறைத்து வைத்திருந்த விடயமும் அந் நிகழ்ச்சியினூடாக மேலும் அம்பலமானது.

நுவரெலியா நகரில் நகர அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான மிகவும் பெறுமதியான காணித் துண்டொன்றை சதாசிவம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவரது வீட்டிற்கு பாதையை அமைக்க பொதுச் சொத்தை அவர் பாவித்ததாகவும் மக்களுக்கு விநியோகிக்கப்படவென கொடுக்கப்பட்ட தகரங்களை அவர் விநியோகிக்கவில்லை எனவும் யோகராஜன் சதாசிவத்தின் மீது எதிர்க் குற்றஞ்சாட்டினார்.

ஒன்றுக்கும் வழியில்லாமல் இருந்த சதாசிவம் இன்று கோடீஸ்வரனாகியிருப்பது எப்படி என்றும் தனது சொத்துக்களைப் பிரகடனப்படுத்த தான் தயாரென்றும் கூறியதுடன் சதாசிவம் அவரது சொத்துக்களை பிரகடனப்படுத்த தயாரா என்றும் யோகராஜன் கேள்வி எழுப்பினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைக்கு எதிராக லஞ்ச ஆணையாளர் திணைக்களத்திடம் முறையிடப் போவதாக சதாசிவம் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்த போது தோட்டங்கள் தோறும் கம்பியூட்டர் நிலையங்களை ஏற்படுத்தவென தொண்டமான் மன்றத்திடம் கோடிக்கணக்கான பணத்தை கொடுத்ததாகவும் ஆனால் அதனைப் பயன்படுத்தி எவ்வித வேலைகளும் செய்யப்படவில்லை என்றும் சதாசிவம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீது குற்றஞ்சாட்டினார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென இறக்குமதி தீர்வையற்ற முறையில் இறக்கப்பட்ட வாகனங்களை உரிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்க முன்னர் அவர்களிடமிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை பல லட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றதாகவும் கூறிய சதாசிவம் அப்பணத்திற்கு என்ன நடந்தது என்றும் கேள்வி எழுப்பினார்.


இவ்வாறு பல குற்றச்சாட்டுக்களை சதாசிவமும், யோகராஜனும் மாறி மாறி முன்வைத்தனர். அன்றைய நிகழ்ச்சிகளை பார்த்தமலையக மக்கள் அவர்களது தலைவர்கள் எனப்படுபவர்கள் செய்திருக்கும் திருகுதாளங்கள் ஊழல்கள் மோசடிகள் பற்றி அறிந்திருப்பார்கள்.

இதைப் பார்த்துக் கொண்டு மலையக சமூகம் சும்மா இருக்கும் வரை இன்னும் பல தலைவர்கள் இதே வரிசையில் வந்து நிற்பார்கள். தனிநபர்களன்றி கொள்கை அடிப்படையிலான அரசியல் பாதையும் அரசியல் தலைமைத்துவமும் தேவை என்பது இவ்விவாதம் மூலம் மேலும் உணர்த்தப்பட்டுள்ளது.

இத்தகைய ஊழல் மோசடிகளிலிருந்து புதியவர்களாகக் காட்சிதரும் அருள்சாமியும், திகாம்பரமும் மலையக சமூகத்தை இரட்சிக்க மாட்டார்கள். மாறி மாறி பிற்போக்குவாதிகளை நம்பாது உரிய கொள்கை நடைமுறைத் தலைமைத்துவத்தை பலப்படுத்த வேண்டியது மலையக மக்களின் பொறுப்பாகும்.

## அரசாங்கத்துடன் இணைய போட்டிபோடும் மலையக கட்சிகள் வெட்கம் கெட்ட அரசியல் பிழைப்பு





ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்ஹவிற்கு ஆதரவாக பிரசாரம் செய்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், மலையக மக்கள் முன்னணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளும்படி இந்திய அரசாங்கத்தினூடாக அழுத்தங்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை கொடுத்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவை சநதிதது அரசாஙகத்தில் இணைத்துக் கொள்ளும்படி கோரிக்கை விடுத்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பிரசாரம் செய்து வந்த இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி கடுமையாக சீற்றமடைந்துள்ளது. பாராளுமன்ற பிரதி நிதித்துவங்களை கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், மலையக மக்கள் முன்னணியும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி செல்லாக் காசாகி விடலாம் என்ற பயம் அதன் தலைவர்களை ஆட்டிப்படைக்கிறது. கடந்த மாகாணசபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட்டாலும், அரசாங்கத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து கொண்டதால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நாட்டாண்மையே அங்கு நிலைநாட்டப்பட்டது.

சதாசிவமும், சென்னனும், கணபதி ராஜூம் அறிக்கைகளை விட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும், மலையக மக்கள் முன்னணியைம் அரசாங்கத்துடன் சேரவிடாது எப்படியாவது தடுக்க வேண்டுமென்பதில் மிகவும் முழுமூச்சாக செயற்படுகின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், மலையக மக்கள் முன்னணியும் எப்படியாவது அரசாங்கத்துடன் சேர்ந்து விட வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் போட்டிகள் ஏன்? பட்டங்கள் பதவிகள், பணம் பெற்று மலையக மக்களை மேய்ப்பதற்கேயன்றி சேவை செய்வதற்கல்ல.

## மு. சிவலிங்கத்தின் "ஒரு விதை நெல்" - வீரியமானதா?




மலையக எழுத்தாளர் மு.சிவலிங்கத்தின் "ஒரு விதை நெல்" சிறுகதைத் தொகுதி பதினைந்து சிறுகதைகளுடன் வெளிவந்துள்ளது. இவர் கதை எழுதுபவர மட்டுமல்ல. ஒரு கலைஞன்.மொழிபெயர்ப்பாளர். படைப்பாளி. இவரின் அரசியல் ஸ்தாபனம் பற்றிய விமர்சனங்களுடன் இவரது படைப்புக்களை பார்க்கும் போது உண்மையான சிவலிங்கத்தை எங்கு காண்கிறோம் என்பது பிரச்சினையாகவே இருக்கிறது. இவரது அரசியலும், இலக்கியமும் வேறு வேறாக இருப்பதால் இரண்டு தளங்களிலும் வெவ் வேறானவராக இருக்கிறாரா என்றும் யோசிக்க வைக்கிறது.

கதைகளிலே சமூக அநீதிகளை கண்டு கொதிப்படைகிறார். பிழைப்பு அரசியல்வாதிகளென கிண்டல் பண்ணுகின்றார். கடுமையாக விமர்சிக்கிறார். அரசியல் மேடைகளிலே அதே கதாபாத்திரங்களுடனும் அவர்களின் ஏமாற்று வித்தைகளுடனும் கூடி நின்று சமரசம் செய்து கொள்கிறார்.

இவரது எழுத்துக்களைப் பார்க்கும் போது கூட எழுத்தை மட்டுமன்றி எழுத்தாளனையும் பார்த்தாக வேண்டியிருக்கிறது. அவரது அரசியல் நோக்கு புரட்சிகரமானதல்ல. நிச்சயமாக மனச்சாட்சிக்கு விரோதமானது மல்ல. அப்படியிருந்தும் இவரின் கதைகளில் காணப்படும் விமர்சனம் அரசியல் வாழ்க்கையில் இல்லையே என்பது அவரது வாசகர்களுக்கு பெரிய கேள்வியாகவே இருக்கும். சமூகப் படைப்பாளி இவரினுள்ளே போராட்டம் செய்கிறான். அதன் விளைவே கதைகள எனலாம்.

இவரின் கதை சொல்லும் பாணி வித்தியாசமானதுதான். மலையக சமூகத்தில் பிரயோகத்தில் இருக்கின்ற சொற்களை அப்படியே கொண்டு வருகின்ற போதும் இவர் ஒரு மண்வாசனை எழுத்தாளனல்ல.

சாதியம் பெண்ணடிமை, சமூக அடிமைத்தனம் என்பவற்றினால் பிரசவிக்கப்பட்டிருந்த வார்த்தைகளை அப்படியே வெளிப்படையாக கதைகளில் பாவித்திருக்கிறார். உதாரணமாக நிலைமை கொஞ்சம் உயரும்போது என்ற கதையிலே கொழும்பு தம்பியினை விமர்சிக்கும் அளவிற்கு மரண வீட்டிலே நடக்கும் கிரிகைகள் பற்றி குறிப்பிடுகின்ற போது சாதிய சொற்களை பாவித்திருப்பது விமர்சனத்திற்குரியதென கண்டு கொள்ளத் தவறிவிட்டார்.

ஒரு விதை நெல் என்ற கதையில் ஆறுமுகம் மாஸ்டர் மாணவர்களைத் திட்டும் வார்த்தைகள் சாதாரண சமூகச் சூழலில் விலக்கப்பட வேண்டியவைகளாகும்.

சமூக கதாபாத்திரங்களை கிண்டல் செய்யும், நையாண்டி செய்யும் எழுத்து நடை இவருக்குரியதாக தெரிகிறது. இது சமூகம் பற்றிய அவரது பார்வையாக இருக்கலாம்.

இப்படி விமர்சனங்களை வைத்துவிட்டோம் என்பதற்காக சிவலிங்கத்தின் ஒரு விதை நெல் சிறுகதைத் தொகுதி வெறும் பொழுதுபோக்கு கதைத் தொகுதியோ என்று கருத வேண்டியதில்லை. சமூகத்தின் அசைவை நிச்சயமாக பதிவு செய்துள்ள தொகுதி எனலாம்.

சமூகம் ஏன் இப்படி இருக்கிறது என்பதற்கான காரணங்களையோ, அந்நிலையை மாற்றுவதற்காக செய்ய வேண்டியவற்றையோ இவரது கதைகளில் காண முடியாவிட்டாலும் மலையக சமூகம் இன்னும் இப்படித்தான் இருக்கிறது என்பதை ஒழிவு மறைவின்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தனிமனிதனின் நுண்ணிய உணர்வுகளை மிகைப்படுத்தி புனையப்படும் கதைகளுடன் இவரின் கதைகள் மல்லுக்கு நிற்கின்றன என்பதை கூறியேயாக வேண்டும். சுய ஈடேற்றமும் மத்தி யதர வர்க்கம் நோக்கிய அசைவும் பிரச்சினைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்படுகின்றனவோ என்ற உணர்வு கதைகளை வாசித்து முடித்தவுடன் ஏற்பட்டது.

மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் ஏறக்குறைய எல்லாக் கதைகளிலுமே வெளிப்பட்டிருக்கிறது என்பதை அடையாளம் காணமுடிகிறது. அவை விதை நெல் என்றால் வீரியமானவையா என்பது பற்றிய படிப்பும் மதிப்பீடும் அவசியம்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 12 டிசம்பர் 2005 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 86

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,தொலை நகல்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

# மக்கள் சார்பு பொருளாதாரத்தை முன்னெடுக்க மஹிந்தவிற்கு முடியாது

அவசரகாலச் சட்டத்துடன் அரியாசனம் ஏறிவிட்டார் மஹிந்த ராஜபக்ஷ. தேர்தல் காலத்தில் அவர் முன்வைத்த 'மஹிந்த சிந்தனை' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தபடி உரத்தின் விலையை 350 ரூபா வாக குறைக்கும்படி கட்டளை இட்டுள்ளார். பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப் போகிறாராம். இப்படி பல நலன்புரி சலுகைத் திட்டங்களை முன்னெடுக்கப் போகிறாராம். 5 ரூபாவிற்கு விற்ற பாண் 1994 சந்திரிகா ஆட்சிக்கு வந்த பிறகு 3 ரூபா 50 சதத்திற்கு விற்கப்பட்டது. அவர் பதவி விலகிச் செல்லும் போது தற்போது பாண் 20 ரூபாவிற்கு மேல் பல விலைகளில் விற்கப்படுகிறது என்பதை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இலங்கை மக்களின் ஜீவாதார உணவு அரிசிச் சோறு. 3.7 மில்லியன் மெற்றிக் டன்கள் நெல் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வுற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளினதும், கூலி விவசாயிகளினதும் எண்ணிக்கை அதிகமாகும். அவர்களின் நெல்லுக்கு அரசாங்கத்தின் உத்தரவாத விலை குறைவானதாகும். தனியார் நெல் ஆலைச் சொந்தக்காரர்களும், தனிப்பட்ட வியாபாரிகளும் குறைந்த விலையை கொடுத்து நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர். இதைவிட வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதாலும் எமது உற்பத்திக்கு கூடிய விலை கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகள் உரமானியம் கடனுதவி போன்றவற்றிற்கு அரசாங்கத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அந்த எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதாக ஒவ்வொரு தேர்தலின் போதும் விவசாயிகளுக்கு தேர்தலில் போட் டியிட்டும் அரசியல்வாதிகள் வாக்குறுதி கொடுப்பதுண்டு. தேர்தலில் வெற்றி பெற்றவுடன் சில வாக்குறுதிகளை சில காலத்திற்கு அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுப்பதுண்டு. பல வாக்குறுதிகள் மறக்கப்பட்டு விடும். மீண்டும் தேர்தல் காலங்களில் அதே வாக்குறுதிகள் புதிய மெருகூட்டல்களுடன் வழங்கப்படுவதுண்டு.

எதையும் மக்களுக்கு இலவசமாக வழங்கக் கூடாது என்றும் நலன்புரித் திட்டங்களை இரத்துச் செய்யும்படியும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற கடனுதவி செய்யும் சர்வதேச நிறுவனங்களும், கடனுதவி செய்யும் நாடுகளும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றன. அதனாலேயே இலங்கையிலும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள், சலுகைகள், நலன்புரித்திட்டங்கள் பல கைவிடப்பட்டன. தேசிய உற்பத்திகள் கூட கைவிடப்பட்டன. அரசாங்க புள்ளி விபரங்களின்படி இலங்கையில் 22.7 சதவீதமானவர்கள் வறுமை கோட்டிற்கு கீழான நிலையில் வாழும் வறியவர்கள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர்களின் நிலையை உயர்த்தவும், வாழ்வாதாரத்திற்கு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் ஏனையவர்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்யவும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுயஉற்பத்தி போன்றவற்றிக்கு அரசாங்கம் மானியங்களை வழங்குவதும், நலன்புரித்திட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமாகும்.

தேர்தல் கால வாக்குறுதிகள் எவ்வாறிருந்த போதும் இலங்கையை ஆட்சி செய்து வந்த அரசாங்கங்களின் பொருளாதார கொள்கைகளும், நடைமுறைகளும் பெரும்பாலும் வெளிநாட்டுக் கடனுதவிகளுக்கு ஏற்பவும் முதலாளித்துவ சுரண்டலுக்கு ஏற்பவும் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான சூழ்நிலையில் பெயரளவில் முன்னெடுக்கப்டும் மக்களுக்கான மானியங்கள், நலன்புரித் திட்டங்கள் தோல்வியடைகின்றன. அவற்றை கைவிட அரசாங்கங்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை ஏற்றுக் கொண்ட போட்டிச் சந்தை முறையானது தேவையை விட நுகர்வை திணிப்பதனை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி போன்றவற்றை முன்னெடுக்கும் ஏகாதிபத்தியத்தின் 'வாடிக்கையாளர்' என்ற நிலையில் செயற்படும் அரசாங்கங்களால் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் கடப்பாட்டை கொண்ட பொருளாதார கொள்ளையையும், நடைமுறையையும் முன்னெடுக்க முடியாது.

முதலாளித்துவ அரசியலில் சொல்வதெல்லாம் செய்யப்படுவதில்லை. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதுமில்லை என்பதும் முதலாளித்துவ பொருளாதார முறைமையில் சாதாரண மக்களின் நலன்புரித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது கடினம் என்பதும் தெரிந்த விடயங்களே. மஹிந்த ராஜபக்ஷவிடம் அவற்றை எதிர்பார்ப்பதும் சரியானதாகாது.

இவரின் பொருளாதாரக் கொள்கையும், நடைமுறையும் இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவோ, உறுதி செய்யவோ மாட்டா என்பதை விளங்கிள் கொள்வது அவசியம்.

தற்போதைய ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழுலுக்கு இணங்கி போகிறவராகவே அவர் ஆட்சி நடத்தப் போகிறார். மிகவும் பின்தங்கிய நிலையில் பெரும்பான்மையான மக்கள் வாழ்கின்ற போது அவர் கூறுகின்ற 'சமூக ஜனநாயகத்தை' அவரால் நிலைநாட்ட முடியாது என்பது அவருக்குத் தெரியும். அவருக்குத் தெரிந்து கொண்டுதான் அவர் கூறுகிறார். அவருடைய கிராமிய நிலப்பிரபுத்துவ நிலைப்பாட்டினால் கிராம மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்கு முடிந்தாலும், உலகமயமாதலுக்குரிய சவால்களைஎதிர் நோக்க முடியாது.

சுய உற்பத்தி திட்டங்களுடன் தொழில் முயற்சிகளை வளர்க்க பேரண்டப் பொருளாதார திட்டங்களை முன்னெடுக்கப் போவதாக தெரிவித்திருக்கிறார். பல பாரிய தொழில் முயற்சிகள் இவர் பிரதமராக இருந்ந்போதும், அமைச்சராக இருந்த போதும்தான் தனியார் கம்பனிகளுக்கும் பல்தேசியக் கம்பனிகளுக்கும் விற்கப்பட்டன. இந்நிலையில் புதிய தொழில் முயற்சிகளை எப்படி ஆரம்பிப்பது?.

மஹிந்தவின் பொருளாதார சிந்தனை என்றொன்று கிடையாது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலுடன் இணங்கிப்போகும் பொருளாதாரமா? அதற்கு மாறாக மக்கள்சார்பு பொருளாதாரமா? இதில் மக்கள் சார்பு பொருளாதாரத்தை முன்னெடுக்க மஹிந்தவிற்கு நிச்சயமாக முடியாது.

-ஆசிரியர் குழு-

# பேரினவாதிகளுக்குப் பாடம் புகட்டிய வடக்கு கிழக்கு தேர்தல் பகிஷ்கரிப்பு

**வெகுஜனன்**

> **பேரினவாதிகளுக்கும் தமிழ்ப் பழமைவாதிகளுக்கும் கொழும்புத் தமிழர்களுக்கும் மேற்குலகத்தவருக்கும் பகிஷ்கரிப்பு பலத்த அடியாகும்**

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான 5வது ஜனாதிபதித் தேர்தல் கடந்த நவம்பர் 17ல் இடம் பெற்றது. இத் தேர்தலை வடக்கு கிழக்கு மக்களில் ஏகப் பெரும்பான்மையோர் நிராகரித்து பகிஷ்கரித்துக் கொண்டனர். விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்படி ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு அக்கறை இல்லை என்று கூறிக் கொண்டது. அதன் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என அறிக்கை விட்டது. புதிய ஜனநாயகக் கட்சி மற்றும் ஏனைய பொது அமைப்புகள் தேர்தலை நிராகரித்து பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளுக்குப் பாடம் புகட்டுமாறு மக்களை கேட்டுக் கொண்டன. இவற்றின் ஒட்டுமொத்த விளைவே வடக்கு கிழக்கு மக்களின் ஜனாதிபதித் தேர்தல் நிராகரிப்பும் பகிஷ்கரிப்புமாகும்.

மேற்படி ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்பானது தெற்கின் பேரினவாத ஆளும் வர்க்க முதலாளித்துவ சக்திகளுக்கு உரிய பாடத்தைப் புகட்டிய ஒரு அரசியல் செயற்பாடாக அமைந்து கொண்டது. அதேவேளை வாக்குரிமை தேர்தல் அவற்றின் ஊடான ஜனநாயக விழுமியங்கள் எனக் கூறப்படும் முதலாளித்துவ ஏமாற்று செப்படி வித்தைகளுக்கு விழுந்த பலத்த அடியாகவும் இருந்தது. அதனாலேயே முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகம் பற்றிப் பேசுவோரும் அதற்காகப் பரிந்துரைகள் செய்து அதனைப் பாதுகாக்க நிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கனவான்களும் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளதாக உரத்து ஓலமிடுகின்றனர்.

நடந்து முடிந்த இத் தேர்தல் பகிஷ்கரிப்பானது வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு நிகழ்வு மட்டுமன்றி இரண்டாவது தடவையாக இடம் பெற்ற ஒன்றுமாகும். 1931ம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழு வழங்கிய சர்வசனவாக்குரிமையின் அடிப்படையில் நடைபெற்ற முதலாவது சட்டசபைக்கான தேர்தல் வட புலத்து மக்களால் பகிஷ்கரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது எழுபத்திநான்கு வருடங்களின் பின் அந்த வரலாற்று நிகழ்வு இரண்டாவது தடவையாக வடக்கு கிழக்கு மக்களால் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புலிகள் இயக்கம் மக்களை வாக்களிக்க விடாது தடுத்து வாக்களிக்கும் ஜனநாயக உரிமையைப் பறித்து விட்டதாகக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் தென்னிலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்கத் தலைமைகள் மீது தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக அதிருப்தியும் எதிர்ப்பும் இருந்து வந்துள்ளன. அதன் விளைவாக ஒரு புறம் ஆயுதப் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு தெரிவித்து நிற்பதும் மறுபுறத்தில் தேர்தல் ஏமாற்றிக்குத் தமது எதிர்ப்பைக் காட்ட உரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தும் நின்றமையுமாகும். மக்களின் நாடித்துடிப்பை நன்கு உரியவாறு கண்டு கொண்ட புலிகள் இயக்கம் பகிஷ்கரிப்புக்கான திசையை சுட்டிக் காட்டியது. இம் முடிவு மக்களது அபிலாசைகளுக்கு முழு வடிவம் கொடுப்பதாக அமைந்து கொண்டது. தேர்தல் தினத்தன்று தனி ஒரு துப்பாகி வெடியோ அன்றி வேறு பலாத்கார சம்பவங்களோ இடம் பெறாது வடக்கு கிழக்கு மக்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தமை மக்களது முழுமையான விருப்பத்தையே வெளிப்படுத்தியது. லஞ்சம் ஊழல் மோசடி ஏமாற்று கள்ள வாக்கு என்பனவற்றின் ஊடாகவே "ஜனநாயகத் தேர்தல்" என்பது நடாத்தப்படும் சூழலில் சில மக்கள் சார்பு நிர்ப்பந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏனெனில் பிரதான அரசியல் இலக்கிற்கு பாதகமாக அமையும் எந்தவொரு நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது. காரணம் மக்களின் அறியாமை வறுமை இன்னும் பிற விடயங்களைப் பிற்போக்கு சக்திகள் பயன்படுத்தி அதனையே "மக்கள் ஆனை" "ஜனநாயகத் தீர்ப்பு" எனப் பிரச்சாரம் செய்து தமது பிற்போக்கு கொள்கைகளை நடைமுறைப்படுத்திக் கொள்வார்கள். இதற்குரிய முன் அனுபவம் இலங்கையில் இடம் பெற்றும் வந்துள்ளன.

மேலும் ஜனநாயக வாக்குரிமை தடுக்கப்பட்டதாக ஓலமிடுவது பற்றி கூறுவது அவசியம். முதலாளித்துவ அரசியலமைப்பிலே வாக்களிக்கும் உரிமையை வழங்கி குறிப்பிட்டதினத்தில் குறிப்பிட்ட தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் எனக் கோரப்படுகிறார்கள். குறித்த சின்னங்களில் ஒன்றிற்கு கீறப்பட்டுள்ள கோட்டுப் பெட்டிக்குள் புள்ளடி இடுமாறு அல்லது இலக்கத்தை இடுமாறு மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவ்வாறு வாக்களிப்பது ஜனநாயக உரிமை என்றும் கூறுகின்றார்கள். அவ்வாறெனில் ஒருவர் தனக்குரிய வாக்குரிமையை எவருக்கும் வாக்களிக்காது பகிஷ்கரித்துக் கொள்வதற்கும் உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அவ்வாறே தத்தமக்கும் கட்சிகளுக்கும் வாக்களிக்குமாறு பிரசார விளக்க உரைகள் நிகழ்த்துவது போன்று அவற்றுக்கு எதிராகப் பிரசாரம் செய்து வாக்களிக்காது பகிஷ்கரிக்குமாறு மக்களுக்கு அறிவூட்டுவதும் ஜனநாய கருத்துச் சுதந்திர உரிமையாகும். எனவே தாங்கள் வரையறை செய்து கொண்ட எல்லைகளுக்குள் நின்று தாங்கள் தீர்மானிப்பவர்களில் ஒருவருக்கு வாக்களிக்குமாறு மக்களை நிர்ப்பந்திப்படுத்தி வந்த முறைமைக்கு விரோதமாகச் செயல்பட்டு பகிஷ்கரிப்பில் மக்கள் ஈடுபடும் போதே இந்த ஜனநாயகக் காவலர்கள் பெரும் பீதிக்கு உள்ளாகின்றனர்.

மேலும் வடக்கு கிழக்கு மக்களின் பகிஷ்கரிப்பால் கடும் கோபம் கொண்டவர்களாகக் காணப்படுவர்கள் பழைமைவாத மேட்டுக்குடி உயர் வர்க்கத் தமிழர்கள் ஆவர். இவர்களது பாரம்பரிய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு நிலைப்பாட்டிற்கு பலத்த அடி வீழ்ந்துள்ளமையைப் பொறுக்க முடியாத நிலையிலேயே இருக்கின்றனர். தமிழர் போராட்டத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் ஆதரவு தெரிவிப்பது போன்று நடந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாமரை வீசி தமது உள்ளம் கனிந்த பற்று தலைக் கொண்டிருந்த கொழும்பு வாழ் மத்திய தர உயர் மத்திய தர வர்க்கத் தமிழ்க் கனவான்களுக்கு வடக்கு கிழக்கின் பகிஷ்கரிப்பும் ரணிலின் தோல்வியும் பொறுக்க முடியாத கோப உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை மலையகத்தில் தத்தமது பதவிகள் பணம் ஆதிக்கம் என்பனவற்றுக்காக மக்களின் பெயரால் குத்துக்கரண சந்தர்ப்பவாத அரசியல் தொழிற்சங்கத் தலைமைகளுக்கும் வடக்கு கிழக்குப் பகிஷ்கரிப்பு பிடரி அடியாகியுள்ளது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் முகத்தில் முழிக்க முடியாத கரியையும் அவர்களுக்குப் பூசி விட்டது. அதேவேளை மலையக மக்களை இப்பகிஷ்கரிப்பு அரசியல் ரீதியில் சிந்திக்கவும் வைத்துள்ளது.

இத் தேர்தல் பகிஷ்கரிப்பு பற்றி தென்னிலங்கையின் சிங்கள ஆங்கில ஊடகங்களும் புத்தி ஜீவிகளும் அரசியல் ஆய்வாளர்களும் எத்தகைய வியாக்கியானங்கள் செய்த போதிலும் அதன் தாக்கம் பாரிய தொன்றாகவே இருந்து வருகின்றது. அதனை மகிந்தவின் வெற்றியுடனும் ரணிலின் தோல்வியுடனும் மட்டும் எல்லைப்படுத்திக் குறுக்கிப் பார்த்துவிட முடியாது. அப் பகிஷ்கரிப்பு பேரினவாதத்தால் நச்சுப்படுத்தப்பட்டுள்ள சிங்கள மக்களின் அரசியல் சிந்தனை ஒட்டத்திலும் சில அதிர்வுகளையும் பல கேள்விகளையும் எழுப்பி உள்ளமையை எவ்வகையிலும் மறைக்க முடியாது. பகிஷ்கரிப்புக்காக புலிகள் இயக்கத்தைத் திட்டித் தீர்ப்பதற்குப் பதிலாக வடக்கு கிழக்கு மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்க வைத்த புறச்சூழலையும் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வின்மையின் அடி ஆழத்தையும் சிங்கள மக்கள் உரியவாறு கண்டு கொள்வதே விவேகமானதாகும்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கா இப பகிஷ்கரிப்பின் பாரிய தாக்கத்தை தாங்கமுடியாத அளவுக்கு எதிர் கொண்டிருக்கிறார். அதேவேளை புதிய ஜனாதிபதி மகிந்த அப்பதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் இப்பகிஷ்கரிப்பு உதவி இருக்கின்றமையும் காணக் கூடியதாகும். மேலும் பௌத்த சிங்கள பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தேர்தல் முறைமையின் கீழும் தமிழ் மக்களை தமக்கு இசைந்தவாறு ஏமாற்றி இழுத்துச் செல்லலாம் என்ற அசட்டுத்தனத்தை வடக்குகிழக்கு மக்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கை உடைத்து நொருக்கியுள்ளது.

தென்னிலங்கையின் ஆளும் வர்க்க அரசியல் தளத்திற்கும் அப்பால் அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளுக்கும் வடக்கு கிழக்கின் பகிஷ்கரிப்பு முகத்தில் தெறித்த கடும் பொறிகளாக வீழ்ந்துள்ளன. பல கட்சி ஆட்சி முறை என்ற பெயரில் இருகட்சிகள் மாறிமாறிச் சர்வாதிகாரப் பதவிகளுக்கு வருவதற்கு தேர்தல்களையே ஜனநாயகமாக்க காட்டி வருபவர்கள் மேற்குலக ஆட்சியினர். நமது நாட்டிற்கு பாராளுமன்ற ஜனநாயகத்தையும் தேர்தலையும் அறிமுகம் செய்து என்றென்றும் அதனைத் தற்காத்துக் கொள்ளுமாறு சத்திய வாக்குப் பெற்றுச் சென்ற அந்த வெள்ளைத் திமிர் எஜமானர்களை இத் தேர்தல் பகிஷ்கரிப்பு நெற்றி சுருக்கி நாடியில் கைவைக்க வைத்திருக்கிறது.

இவை அனைத்துக்கும் அப்பால் இப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையானது மக்கள் சக்தியின் ஏகோபித்த பலத்தை வெளிக்காட்டியுள்ளது. இதனை மேலும் உரிய அரசியல் அறிவூட்டல் வழிகாட்டல் மூலம் சாதகமான வழிகளில் முன்னெடுத்துச் செல்வதே சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் வெற்றி நோக்கிச் செல்வதற்குரிய அடிப்படையாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரிகா குமாரதுங்க: அரசியல் அத்தியாயம் ஒன்றின் முடிவு



இந்தச் சனாதிபதி தேர்தல் முடிவுகளின் அறிவிப்புடன் சந்திரிகா குமாரதுங்காவின் சனாதிபதிப் பதவிக்காலம் முடிவுக்கு வருகின்றது. இனி அவரது அரசியற் பங்களிப்பு எப்படி அமையும் என்பதைப்பற்றியும், அதைவிட முக்கியமாக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் பற்றியும் பெரிய கேள்விகள் உள்ளன. இவை இனிவரும் நாட்களில் மெல்லத் தெளிவாகலாம். எனினும் இதுவரை நடந்து முடிந்த சந்திரிகாவின் சனாதிபதி ஆட்சிக்காலமும் அதற்கு முந்திய அவரது அரசியல் வரலாறும் பற்றிய ஒரு நிதானமான மதிப்பீட்டுக்கான தேவை உள்ளது. அதை அவரது அதிகாரபூர்வமான வாழ்க்கை வரலாறு தரப் போவதில்லை. ஏனெனில் முதலாளிய பாராளுமன்ற அரசியலில் ஒரு அரசியல்வாதியின் தனிப்பட்ட பண்புகளுக்கும் நடத்தைக்கும் நடவடிக்கைகட்கும் வழங்கப்படுகிற முக்கியத்துவம் அவரது வர்க்க நிலைப்பாடு, உலக நோக்கு என்பனவற்றுக்கு வழங்கப்படுவதில்லை. எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமா பண்டாரநாயக்க ஆகியோரது வர்க்க நிலைப்பாட்டைக் கணிக்காததாலேயே அவர்களது ஆட்சிகட்குப் பலர் சோஷலிஸ அடையாளம் வழங்கி வந்துள்ளனர். சில தொழில் துறைகளின் தேசிய மயமாக்கலோ, காணிச்சீர்திருத்தமோ, கொலனியத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான நிலைப்பாடோ, சமூகச் சீர்திருத்தமோ அடிப்படையான சமூக மாற்றங்களில்லை. அவை பல நாடுகளிலும் முதலாளிய நலன்களை மனதிற் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியே அவற்றின் மூலம் எந்தச் சமூகமும் சோஷலிஸ சமூகமாக மாறியதுமில்லை. எனினும் அவை வரையறைக்குட்பட்ட முற்போக்கு நடவடிக்கைகளாகும். அதனாலேயே, 1956 முதல் 1977 வரையும் அதற்குச் சில காலம் பின்னரும் ஸ்ரீ.ல.சு.கட்சியை ஓரளவுக்கு ஒரு முற்போக்குச் சக்தியாகக் கருத இடம் இருந்தது. இன்னொரு புறம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் சனரஞ்சக அரசியலின் தேவைகள் அதனுடைய முதலாளியப் பேரினவாதத்தை மிகவும் வெளிவெளியாகவே அடையாளங் காட்டின. அக் காரணத்தால் யூஎன்.பியின் பேரினவாதத்தை விட ஸ்ரீ.ல.சு.கட்சிப் பேரினவாதம் மோசமானது என்ற தவறான எண்ணம் மேலோங்க வழி ஏற்பட்டது. நாட்டின் அரசியல் வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால் யூஎன்.பியின் பேரினவாதம் மிக ஆழமானது என்ற உண்மை விளங்கும். சந்திரிக்காவின் அரசியல் வருகையையும் தடுமாற்றமான வளர்ச்சியையும் விளங்கிக்கொள்ள ஸ்ரீ.ல.சு.கட்சியின் முற்குறிப்பிட்ட சில முற்போக்கான பண்புகளுடைய தேசிய முதலாளியத்தின் சுரண்டும் வர்க்க நிலைப்பாட்டைப் பற்றித் தெளிவாக இருக்க வேண்டும். ஸ்ரீ.ல.சு.கட்சியின் தடுமாற்றங்கள் வெறுமனே ஒரு தனி மனிதரது தடுமாற்றங்களல்ல, மாறாகத் தேசிய முதலாளி வர்க்கம் மாறிவரும் தேசிய சர்வதேசிய நிலவரங்கட்கு முகங் கொடுப்பதில் காணும் தடுமாற்றங்கள் என்பதை உணர வேண்டும். அக் கட்சிக்குள் ஒவ்வொரு பிரச்சினையிலும் முரண்பாடுகளும் சில சமயம் எதிரெதிரான நிலைப்பாடுகளும் இருந்து வந்துள்ளன என்பதையும் நாம் மறக்கலாகாது. எப்போதுமே அக்கட்சிக்குள் காணப்படும் தோற்றப்பாடான இடதுசாரிச் சிந்தனைகள் மிகவும் வரையறைக்குட்பட்டும் கட்சியின் வர்க்க அடிப்படையினதும் நலன்களினதும் எல்லைகளை மீறாமலும் அமைய நேர்ந்தது. பல வேறு எதிர்பார்ப்புக்களுடன் ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் நுழைந்த ஒவ்வொரு இடதுசாரியும் தனது இடதுசாரி அடையாளத்தை இழந்தாரேயொழிய ஸ்ரீ.ல.சு.கட்சியின் வர்க்க அடையாளத்தை அவரால் மாற்ற முடியவில்லை.

சந்திரிகா குமாரதுங்காவின் அரசியல் பிரவேசம் 1971 ஏப்ரல் கிளர்ச்சியை யொட்டி அவரது தாயாரின் ஆட்சியின் கீழ் பல ஆயிரம் சிங்கள இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டதைக் கண்டித்து வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் அவரும் ஒப்பமிட்டதுடன் தொடங்கியதாகச் சொல்லலாம். அப்போது அவர் பாரிஸ் நகரின் அயலில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். 1968ம் ஆண்டில் பாரிஸில் நடந்த மாணவர் எழுச்சி தோற்ற போதும் அதன் தொடர்ச்சியான இடதுசாரி அரசியல் அலை அங்கு வலுவாகவே இருந்த காலம் அது. சில சமயம், தீவிர இடதுசாரிப் பாங்கான சொற்களைப் பேசுவது வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்த சிலருக்குக் கிளுகிளுப்பை ஊட்டியது. எனினும் தங்களுடைய வர்க்க அடிப்படையையோ வாழ்க்கை முறையையோ குடும்ப உறவுகளையோ பாதிக்காமல் ஒரு வகையான தீவிர இடதுசாரி நிலைப்பாட்டைப் பேண இவர்கட்கு முடிந்தது.

சந்திரிகா இலங்கைக்குத் திரும்பிய போது, அரசாங்கம் சிறைப் பிடித்த ஜே.வி.பி கிளர்ச்சியாளர்களில் கணிசமானவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். அவர்களது புனர்வாழ்வுக்கான சில திட்டங்களும் தீட்டப்பட்டிருந்தன. சில இடை நிலை ஜே.வி.பி தலைவர்கள் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் புதிய நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இந்தச் சூழ்நிலையில் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் "ஜன வேகய" என்ற குழு உருவாக்கப்பட்டது. சிறிமாவின் மகளிர் இருவரும், மூத்தமகள் சுனேத்ராவின் கணவராயிருந்த குமார் ரூபசிங்ஹவும் உட்பட, ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள்ளும், வெளியே புரட்சிகர கம்யூனிஸ்ற்றுக்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் நடுவிலிருந்தும் கணிசமானோர் இணைந்து ஜனவேகய என்ற பேரில் சிங்கள ஏடொன்றையும் பின்னர் அதே பேரில் தமிழில் ஒன்றையும் வெளியிட்டனர். இவர்களிற் சிலருக்கு மாஓ சேதுங் சிந்தனை மீது மேலோட்டமான ஒரு கவர்ச்சி இருந்தது. இதன் விளைவாக ஜனவேகய குழு ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைமையைப் பகைக்காமல் புரட்சிகர இடதுசாரித் தோற்றத்தைக் காட்டியது. எனினும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் இருந்த வலது சாரிப் போக்குக்குச் சவாலாக இவர்களது செல்வாக்கு வளரும் என்ற ஆபத்துத் தென்பட்ட போது ஜனவேகய குழுவின் மீது மேலிடத்து அழுத்தங்கள் வந்தன. 1975ல் சமசமாஜக் கட்சி மக்கள் முன்னணி அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

வலுவான கம்யூனிஸ்ற் சமசமாஜக் கட்சித் தொடர்புகள் இல்லாத போதும் ஜனவேகயவால் தொடர்ந்து அதிக நாட்கள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சிறிமா பண்டாரநாயக்கவின் அரசியல் வாரிசு யார் என்ற குடும்பச்சண்டையில் அனுரா பண்டாரநாயக்கவுக்கும் குமார் ரூபசிங்ஹவுக்குமிடையிலான விரிசலும் ஜனவேகயவின் சிதைவுக்குப் பங்களித்தது. எனினும், இந்தச்

**மோகன்**

சில ஆண்டுகள் சந்திரிகாவுக்கு ஒரு இடதுசாரி அடையாளத்தை வழங்கின. இது எவ்வளவு நம்பகமானது என்பதைச் சோதிக்க இயலாதபடி, 1977 தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி படுதோல்வி கண்டது. அதனுடன் பகைத்துக் கொண்டு பழி வாங்கும் நோக்கில் எதிர்த்துப் போட்டியிட்ட இடதுசாரிப் பாராளுமன்றக் கட்சிகள் ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டாம் இடத்தைச் கூட எட்ட இயலாதளவு மோசமான தோல்வியைத் தழுவிப் பாராளுமன்ற ஆசனங்களையெல்லாம் இழந்தன.

ஜே.ஆர்.ஜயவர்தனவின் தலைமையில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வந்த யூஎன்.பி ஆட்சி நிறைவேற்று அதிகாரங் கொண்ட சனாதிபதி முறையை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்ததுடன் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட ஜே.வி.பி யின் துணையுடன் ஸ்ரீ.ல.சு.கட்சியையும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளையும் தாக்கிப் பலவீனப்படுத்தியது. சிறிமா பண்டாரநாயக்கவின் குடியுரிமைகள் பழிவாங்கும் நோக்கத்துடன் 1980ம் ஆண்டு பறிக்கப்பட்டன. இதன் பின்னணியில் ஸ்ரீ.ல.சு.கட்சியினுள் உட்பிளவுகள் வளர்ந்தன. அக்கட்சி பொதுசன அரசியலில் வேகத்துடன் இயங்க முடியாதிருந்தது. 1982ல் முதலாவது சனாதிபதித் தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்க போட்டியிட முடியாது தடுக்கப்பட்டதால். ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் ஹெக்டர் கொப்பேகடுவ போட்டியிட்டுத் தோற்றார். சமசமாஜக் கட்சியின் சார்பில் கொல்வின் ஆர்.டி.சில்வாவும் நவசமசமாஜக் கட்சி சார்பில் வாசுதேவ நாணயக்காரவும் போட்டியிட்டனர். இதன் பின்பு, ஸ்ரீ.ல.சு.கட்சியினுள் பிளவுகள் மேலும் தீவிரமாகின. சந்திரிகா ஸ்ரீ.ல.சு.கட்சியிலிருந்து விலகித் தன்கணவரும் பிரபல நடிகருமான விஜய குமாரணதுங்கவுடன் சேர்ந்து 1984ல் ஸ்ரீ.லங்கா மக்கள் கட்சியைத் தொடங்கினார். நவசமசமாஜக் கட்சி உட்பட்ட பாராளுமன்ற இடது சாரிக்கட்சிகளுடன் அக்கட்சி ஒரு ஐக்கிய இடதுசாரி முன்னணியை அமைக்க முற்பட்டது. எனினும் அந்த ஏற்பாடு நின்றுபிடிக்கவில்லை.

இச் சூழலில் தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான ஒடுக்குமுறை போராக வெடித்தெழுந்தது. அதேவேளை தமிழர் விடுதலை இயக்கங்கள் பல இந்திய ஆதரவுடன் வளர்ச்சி பெற்றன. தேசிய இனப்பிரச்சனையின் அமைதியான தீர்வை 1986 அளவில் வற்புறுத்தியதில் விஜய குமாரணதுங்கவின் பங்களிப்புக்குத் தமிழ் மக்களிடையே மிகுந்த மதிப்பு இருந்தது. எனினும் விஜய குமாரணதுங்க பாராளுமன்ற இடதுசாரிகள் சிலர் போல இந்தியக் குறுக்கீட்டின் நோக்கங்களைச் சரிவர விளங்கிக் கொள்ளாமல் 1987ன் இந்திய - இலங்கை உடன்படிக்கையை நிபந்தனையின்றி ஆதரித்தார். பேரினவாத ஜே.வி.பி யின் கொலைக் கரங்களுக்கு அவர் பலியான பின் சந்திரிகா நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் 1990முதல் 1992வரை வாழ்ந்து வந்தார். விஜய குமாரணதுங்க ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு மாற்றான யூஎன்.பி எதிர்ப்புச் சக்தியாக வளருவதைத் தடுக்கவே இக்கொலை அப்போதைய சனாதிபதி பிரேமதா சவின் அங்கீகாரத்துடன் ஜே.வி.பி யால் மேற் கொள்ளப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் நாட்டில் பிரேமதாஸவுக்கு எதிரான சக்திகளின் கைகள் வலுப்பெறத் தொடங்கிய நிலையில் நாடு திரும்பிய சந்திரிகா, மீண்டும் ஸ்ரீ.ல.சு.கட்சியில் இணைந்து குடும்ப அரசியலின் வலிமையால் பாராளுமன்ற அரசியல் தலைமையைப் பிடித்தார். அநுர பண்டாரநாயக்க கட்சிமாறி யூஎன்.பிக்குப் போயிருந்ததும் இதற்குத் துணையாயிற்று.



1993ல் பிரேமதாசவின் படுகொலைக்குப்பின்பு 1994ல் தென்மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி வெற்றி பெற்றது. 1977க்குப் பின்பு யூஎன்.பியைச் சிங்கள மக்கள் நிராகரித்த முதல் நிகழ்வு இதுவாகும். யூஎன்.பியின் பதினேழு வருடச் சர்வாதிகார ஆட்சியும் பேரினவாதப் போரின் பின் விளைவுகளும் 1989-90 கால இடைவெளியில் தெற்கில் அரச படைகள் நடத்திய படுகொலைகளும் யூஎன்.பி ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டிய நிலைக்கு மக்களைக் கொண்டு வந்திருந்தன. இந்தச் சூழ்நிலையிலேயே ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் பாராளுமன்ற இடதுசாரிக்கட்சிகளும் எம்.ஈ.பி போன்ற பேரினவாத இடதுசாரிகளும் ஒன்றுபட்டுச் சனாதிபதி தேர்தலில் சந்திரிகாவை வெற்றிபெறச் செய்யவும் பாராளுமன்றத்தில் ஆட்சியைக் கைப்பற்றவும் முடிந்தது.

சந்திரிகாவின் வர்க்க அடையாளம் 1994சனாதிபதி தேர்தலுக்கு முன்னரே தெரியத்தொடங்கிவிட்டது. 1978ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் தொடர்ச்சியாகவும் இன ஒடுக்குமுறைப் போரின் விளைவாகவும் நாட்டின் பொருளாதாரத்தின் மீது ஏகாதிபத்தியத்தினதும் இந்திய மேலாதிக்கத்தினதும் பிடி இறுகிய சூழ்நிலையில், அதற்கு மாற்றாக ஒரு வழியைக் காட்ட இயலாத தேசிய முதலாளியம் அந்நிய முதலாளிய ஆதிக்கத்துடன் சமரசம் செய்யத் தொடங்கிய பின்பு தேசிய பொருளாதாரத்தை முன்னெடுக்கும் தென்போ துணிவோ அதற்கு இருக்கவில்லை. சுரண்டப்படும் மக்களின் அதிருப்தியை அறிந்து அதற்கு ஏற்றபடி, திறந்த பொருளாதாரத்தை விமர்சித்து வந்த சந்திரிகா, தேர்தல் நெருங்கியதும், அந்நிய மூலதனத்தையும் உலக நிதி நிறுவனங்களின் ஆதிக்கத்தையும் விமர்சிப்பதை நிறுத்தி விட்டு அவற்றுடன் ஒத்துழைப்பது பற்றிப் பேசத்தொடங்கினார்.

சந்திரிகாவின் நிலைப்பாடு அவர் சார்ந்திருந்த வர்க்கமான தேசிய முதலாளி வர்க்கத்தின் தோல்வி மனப்பான்மையையும் ஏகாதிபத்தியத்திற்குப் பணிந்து போக அது ஆயத்தமாயிருந்ததையுமே அடையாளப்படுத்தியது. அது போலவே, தனிப்பட்ட முறையில் தன்னை ஒரு பேரினவாதியாக அடையாளப்படுத்தாத சந்திரிகாவால் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வில் சிங்கள தேசிய முதலாளி வர்க்கத்தின் பேரினவாத நிலைப்பாட்டை எதிர்த்து நிற்க இயலவில்லை. ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாகவே அரசியல் அதிகாரத்தைப் பெற்ற சந்திரிகா அந்த வர்க்கத்தின் நோக்கங்கட்கு மாறாகச் செயற்பட்டிருக்க முடியாது. கடந்த பதினொரு வருடப் பதவிக்காலத்தில் நாட்டின் பொருளாதாரக் கொள்கையிலும் அயல் விவகாரங்கிளிலும் தேசிய இனப்பிரச்சனையிலும் சந்திரிகாவின் கொள்கைகளும் நடைமுறையும் அவரது வர்க்கச் சார்பின் அடிப்படையினின்று எழுவனவே.

சந்திரிகா தேசிய இனப் பிரச்சனையினதும் போரினதும் வர்க்கப் பரிமாணங்களை எவ்வளவு தெளிவாக அடையாளங் கண்டாரென்று சொல்வது கடினம். தேசிய இனப்பிரச்சனையின் தீர்வின் தேவையை வற்புறுத்தியும் அதிகாரப் பரவலாக்கத்தை ஆதரித்தும் பேசிய அளவிற்கு அவரால் ஒரு தெளிவான தீர்வு ஆலோசனையை வெளி வெளியாக முன்வைக்க இயலவில்லை. அது போலவே, ஆயுதப்படைகளின் அத்துமீறல்களையும் அவரால் முற்றிலுங் கட்டுப்படுத்த இயலவில்லை. 1994ம் ஆண்டு அவர் பிரதமராகப் பதவியேற்ற போது தொடக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் அடிப்படையான பிரச்சனைகளைத் தொடவில்லை என்பது போக, பொறுப்பான முறையில் மேற்கொள்ளப்படவுமில்லை. விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை முறித்துத் தமது ஆயுதப் போராட்டத்தை மீளவும் தொடங்கி

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மஹிந்த சிந்தனை - உள்ளும் புறமும்

-சண்முகம்-

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை என்பது புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது கொள்கைப் பிரகடன உரையாக விரிவு பெற்று நிற்கிறது. ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக விளிம்பு நிலை வெற்றி பெற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ "றுகுணு புத்திரன்" என்ற தோற்றப்பாட்டுடன் அதிகாரத்திற்கு வந்துள்ளார். 1988இல் "ஏழை பங்காளன்" என்ற தோற்றத்துடன் ஜனாதிபதியாகிய ஆர்.பிரேமதாசாவின் வருகையை இவ்வேளை நினைவு கூற முடிகின்றது. பிரேமதாசாவின் அன்றைய வெற்றி சேனநாயக்க, ஜெயவர்த்தனா குடும்பங்களின் மேட்டுக்குடி ஆண்ட பரம்பரைத் தொடர்ச்சியை உடைத்திருந்தது. அவ்வாறே மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியும் பண்டாரநாயக்கா, ரத்வத்தை ஆண்ட பரம்பரையின் தொடர்ச்சியை அறுத்தெறிந்திருக்கிறது. ஆனால் றுகுணு புத்திரனான மஹிந்த ராஜபக்ஷ பிரேமதாசாவைப் போன்று அடிமட்ட சாதாரண குடும்பத்திலிருந்து வந்த ஒருவர் அல்லர். அவரும் தெற்கின் வளவுக்கார குடும்பத்திலிருந்து வந்த பௌத்த சிங்கள மேட்டுக்குடி மேலாண்மைக்கு முதன்மை கொடுக்கும் ஒருவராகவே உள்ளார். இத்தகைய மஹிந்த ராஜபக்ஷவின் "மஹிந்த சிந்தனை" என்பது உள்ளும் புறமும் எவற்றை உள்ளடக்கி இருக்கிறது என்பதைக் கண்டு கொள்வது தேவையானதாகும். குறிப்பாகப் பார்ப்போமாகில் மூன்று முக்கிய விடயங்களை கவனத்திற்கு எடுத்து நோக்குதல் வேண்டும்.

1. நாட்டின் பிரதான பிரச்சினையாக நீடித்து வரும் தேசிய இனப் பிரச்சினை பற்றிய நிலைப்பாடு.

2. நாட்டின் அடிப்படைப் பிரச்சினையாக இருந்து வரும் பொருளாதாரக் கட்டமைப்பு நிலை.

3. நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைப் போக்கு. இவை மூன்றையும் மையப்படுத்தியவைகளாகவே ஏனையவைகள் கையாளப்படவும் நடைமுறைப்படுத்தப்படவும் கூடியனவாகும்.

முதலாவதாக, நீண்ட காலத் தீர்வின்றி அதன் மூலம் யுத்தமாக மாற்றப்பட்ட நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு மஹிந்த சிந்தனை கூறும் பரிகாசம் சிந்திக்கப்பட வேண்டியதாகும். ஒற்றையாட்சி அதிகார வரம்பிற்குள் பிரிவினை அற்ற வகையில் அதிகாரப் பரவலாக்கம் என்ற அடிப்படையில் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துதல் என்றே கூறப்பட்டுள்ளது. அதே வேளை ஒரு இனத்துக்கான தாயகப் பிரதேசம் சுயநிர்ணய உரிமை தன்னாட்சி என்பன பெயர் சுட்டி மறுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அம்சங்கள் கடந்த கால் நூற்றாண்டு கால தேசிய இன விடுதலைப் போராட்டத்தினால் முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கைகளுக்கு நேரெதிரானவையாகவும் எவ்வகையிலும் அண்மித்துக் கூடவர முடியாத சிந்தனைகளாகவே காணப்படுகின்றன.

இவ்விடத்திலே ஒற்றையாட்சியா அல்லது சம்ஷ்டியா என்பதல்ல பிரச்சினை. தீர்வின் கூறுகளும் நடைமுறை அம்சங்களுமே அடிப்படையானவைகளாகும். சமஷ்டி என்பதன் பேரில் முழுமையான அதிகாரப் பகிர்வு இடம் பெறாத நாடுகள் உண்டு. அதேவேளை ஒற்றையாட்சியின் கீழ் ஆகக் கூடிய அதிகாரப் பகிர்வும் அதிக பட்ச சுயாட்சி அமைப்பும் இருந்து வரும். நாடுகளையும் காண முடியும். இவை ஒரு நாட்டின் அடிப்படையான சமூக அமைப்பின் தன்மையில் இருந்தே தீர்மானிக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம். அவர்களுக்கு பாரம்பரிய பிரதேசம் உண்டு. அவர்களது பொருளாதார மொழி சமூக கலாசாரத் தனித்துவங்கள் நீடித்தவையாக இருந்து வருகின்றன என்பது இன்று மறுக்க முடியாத யதார்த்தங்களாகும். எனவே இவற்றைக் கவனத்தில் கொள்ளாது ஒற்றையாட்சியின் கீழோ அன்றி சமஷ்டி என்ற பெயரிலோ அரசியல் தீர்வு தேடப்படுவதற்கு குறுகிய பாதைகள் தேடப்பட்டால் கௌரவமான சமாதானம் என்பதை மஹிந்த சிந்தனையால் நிலை நாட்ட முடியாது. யுத்தமல்ல பேச்சுவார்த்தை தான் வழிமுறை எனக் கூறும் மஹிந்த சிந்தனையானது பேச்சுவார்த்தைக்கு எத்தகைய அரசியல் தீர்வு என்பதை வெளிப்படுத்தவில்லை. கடந்த காலங்களில் சர்வ கட்சி மாநாடு, வட்ட மேசை மாநாடு, இலங்கை இந்திய ஒப்பந்தம் மாகாணசபையை நடைமுறைப்படுத்தல் போன்ற தோற்றுப்போன பயன்தராத விடயங்களை மீளவும் தூசு தட்டி பேச்சுவார்த்தை மேசையில் வைக்க மஹிந்த சிந்தனை முற்படுமாயின் கடந்த காலங்களின் அனுபவங்களையோ பட்டறிவையோ கவனத்தில் கொள்ளாது குருட்டுத்தனமாக அல்லது மலட்டுத்தனமாக வழிநடக்க முற்படுவதாகவே இருக்கும்.

இரண்டாவது, நாட்டின் பொருளாதார அமைப்பின் அடிப்படைகளுக்கு மஹிந்த சிந்தனை திட்டவட்டமான தெளிவான முன் மொழிவுகளை வெளிப்படுத்தவில்லை. பொத்தம் பொதுவான சொற்றொடர்களின் மூலம் பொருளாதார அம்சங்கள் பூசி மெழுகப்பட்டுள்ளன. தாரா ளமயம் தனியார்மயம் என்பவற்றால் கடந்த கால் நூற் றாண்டு காலத்தில் நாட்டின் தேசிய பொர்ருளாதாரம் சிதை க்கப்பட்டு வந்துள்ளது. சுயசார்புப் பொருளாதார முயற்சிகள் சாகடிக்கப்பட்டு வணிக வர்த்தக நுகர்வுப்பொருளாதாரம் திணிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்ளுவழிகாட்டும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு என் பவற்றின் ஆலோசனை வழிகாட்டல்கள் முழு ஆதிக்கம் செலுத்தி நிற்கின்றன. ஏகாதிபத்திய உலகமயமாதலின் பன்முக நச்சுத்தனங்கள் பரப்பி வரும் கருத்தியல் சிந்தனை என்பன நடைமுறை வாழ்வின் ஊடாகப் புற்று நோய் போன்று சமூகத்தில் பரவி வருகின்றன. இவற்றுக்கு மஹிந்த சிந்தனை மாற்றுக் கொள்கையாக எதையுமே முன்வைக்கவில்லை. அவற்றுக்குத் தெளிவான மாற்றுத் திட்டம் இல்லாத நிலையில் தேசிய பொருளாதாரம் என்ற சொற்றொடர் அர்த்தமற்றதாகும். மேலும் வெளிநாட்டு மூலதனத்தை வரவழைக்கும் தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்யப் போவதாகவும் கூறப் பட் டுள்ளது. அத்துடன் மக்களது கடும் எதிர்ப்பைப் பெற்று ள்ள மேல்கொத்மலை நீர் மின் திட்டம், நுரைச்சோலை அனல் மின் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவது பற்றியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு மாற்றுத் திட்டங்கள் வெளிப்படுத்தப்படாது உரத்திற்கு ரூபா 350 நிர்ணயித்திருப்பது தேர்தல் வாக்களிப் பிறகாக விவசாயிகளுக்கு ஒரு சிறிது கால பிரதி உபகாரமேயாகும். எனவே பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மஹிந்த சிந்தனையால் உருப்படியான மாற்றுத் திட்டமோ நடைமுறைகளோ முன்வைக்கப்படாத சூழலில் 27 வருடப் பாதையே தொடரப்பட இருக்கிறது என்பதே உண்மையாகும்.



மூன்றாவதாக, வெளிநாட்டுக் கொள்கையில் ஆசிய நாடுகளுடனான அதி கூடிய ஒத்துழைப்பும் நெருக்கமும் கொள்வது என்றே மஹிந்த சிந்தனை கூறுகி றது. அதன் மூலம் இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்றவற்றையே சுட்டிக் காட்டப்படுகிறது. மேற்குலக சார்பு போக்கு சற்று தூரத்தே வைக்கப்பட்டிருக்கிறது. இந்திய ஆளும் வர்க்கம் தமது பிராந்திய மேலாதிக்கத்தை இலங்கையின் அரசியல் பொருளா தார விடயங்களில் அழுத்திச் செலுத்தக் கூடியவாறான ஒரு சூழலையே மஹிந்த சிந்தனை முன்நிறுத்தி நிற்கின்றது. ரணிலின் வெற்றி மூலம் இலங்கையை மேலும் தமது முழு மையான செல்வாக்கிற்கு உட்படுத்தக் காத்திருந்த அமெரிக்க ஐரோப்பிய ஆதிக்க சக்திகளுக்கு மஹிந்த சிந்தனையின் அடிப்படையிலான ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை உள்ளார்ந்த கோபத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இதனால் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டி உள்ளார்ந்த ரீதியில் மும்மரம் பெறப்போகிறது.

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜாக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் விரோதி மட்டுமன்றி தனது சொந்தக் கட்சி யான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பரம்பரைத் தலைமைத்துவத்தின் பிரதிநிதியாக இருந்து வரும் சந்திரிகா அம்மையாரினதும் விரோதியாகி நிற்கிறார் அதனால் தனக்குரிய தனி வழியில் செல்ல இருப்பதையும் மஹிந்த சிந்தனை வெளிப்படுத்துகிறது. இதனால் மஹிந்த சிந்தனை மிகக்கடுமையான சவால்களையே சந்திக்க இருக்கிறது. ஆனால் அவர் அதிகாரத்திற்கு வருவதற்காக ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய, பாரம்பரிய பாராளுமன்ற இடதுசாரிகள் போன்றவர்களுடன் கையாண்ட தந்திரோபாயத்தை தொடர்ந்தும் கடைப்பிடிப்பாரா? அல்லது சர்வ அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி யாய் பதவியைப் பெற்றுக் கொண்ட பின் அதனைப் பயன்படுத்தி தனது தனி வழிப் பயணத்தை மேற்கொள்வாரா?

எவ்வாறாயினும் உள்ளார்ந்த ரீதியில் பல்வேறு முன் பின் முரண்களையும் வெளியே மக்களுக்கு ஓரளவுக்கு கவர்ச்சிகரமானதாகவும் காணப்படும் மஹிந்த சிந்தனையின் போக்கை தெளிவாக எடை போடுவதற்கு ஜனாதிபதியின் மூன்று மாத வேலைத்திட்டத்தின் முடிவுவரை சற்று பொறுத்திருந்தே பார்க்க வேண்டி உள்ளது.

---

## சந்திரிகா குமாரதுங்கா:

6ம் பக்க தொடர்ச்சி.......

மீண்டும் போர் மூண்ட பின்னரே சந்திரிகா அரசியல் பரவலாக்கம் பற்றிய தனது யோசனைகளை முன்வைத்தார். இந்த யோச னைகளை எப்போது நடைமுறைப் படுத்துவது என்ற தெளி வுடன் அவர் முன் வைத்தாரா என்பது பற்றி மிகுந்த ஐயங்கள் உள்ளன. விடுதலைப் புலிகளுடன் பேசியபோது முன்வைக்காத யோசனைகள் அமைதி குலைந்து போர் மூண்ட பின்னரே முன்வைக்கப்பட்டன. அந்த யோசனைகள் சர்வதேச சமூக த்தை மனதிற் கொண்டு முன்வைக்கப்பட்டவை என்ற கரு த்தை வலுப்படுத்தின.

1995ம் ஆண்டு படையினர் யாழ் குடாநாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றி விடுதலைபுலிகளை யாழ்ப்பாண நகரத்திலிருந்து பின் வாங்கச் செய்த பின்பு, போர் மூலம் விடுதலைப் புலிகளை வெல்லலாம் என்ற எண்ணம் வலுப்பெற்றது. இதன் விளைவாகவே "சமாதானத்திற்கான போர்" என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுப் போர் மேலும் தீவிரமடைந்தது. 2000 ஏப்ரல் முடிவில் ஆனையிறவு முகாம் விழுந்த பின்னர், இந்தியாவின் மறைமுகமான ஆதரவையும் ஊக்குவிப்பையும் கொண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை மீட்கும் முயற்சியில் அரச படைகள் இறங்கின. யாழ் குடா நாட்டின் பல பகுதிகளில் பேரழிவை விளைவித்த பின்னரே, அமைதிக்கான போரின் பயனின்மை விளங்கியது.

இந்தச் சூழ்நிலையிலேயே, நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகட்கான முயற்சிகள் தொடங்கின. எனினும் 2001ம் ஆண்டு கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல் நிகழும் வரை அரசபடைகள் தமது போர் முயற்சிகளில் தீவிரமாகவே இருந்தன. அரசாங்கம் தேசியப் பிரச்சனைக்கான தீர்வு பற்றிப் பேசியபடி அமைதிக்கான பிரசாரம் ஒன்றை முன்னெடுத்துக் கொண்டே போரையும் நடத்திக் கொண்டிருந்தது. ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான பொதுசன முன்னணி அரசாங்கம் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு ஆலோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது அதை யூஎன்.பி குழப்பியது. அதே யூஎன்.பி 2001ல் பாராளுமன்றப் பெரும்பான்மையை வென்று அடுத்த ஆண்டு அமைதிக்கான முயற்சிகளை எடுத்தபோது, அதைக் குழப்புகிற விதமாகச் சனாதிபதியும் ஸ்ரீ.ல.சு.கட்சியினரும் நடந்து கொண்டனர்.

2003ம் ஆண்டின் இறுதியில் யூஎன்.பி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் தீவிரமாகச் செயற்பட்டு, அதில் வெற்றிகண்டு, ஜே.வி.பி யுடன் ஒரு தேர்தல் உடன் படிக்கை மூலம் "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி" அரசாங்கத்தை அமைக்க முடிந்த சந்திரிகாவால், தேசிய இனப் பிரச்சனையின் தீர்வுக்கு முற்றிலும் எதிரான ஒரு சக்தியாக இருந்த ஜே.வி.பி யைச் சமாளிக்க முடியவில்லை. ஜே.வி.பியுடனான கூட்டு ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் இருந்த குத்து வெட்டுக்களைத் தீவிரப்படுத்தியது. சுனாமிக்குப் பின்பு கிடைக்க இருந்த உதவியைக் கொண்டு அரசாங்கத்தையும் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்தலாம் என்ற கணிப்பில் முன்வைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஆலோசனையை ஜே.வி.பி எதிர்த்து வெளியேறிய பின்னர், ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் சந்திரிகாவுக்கு எதிரான சக்திகள் மும்முரமாகின. தனது ஆட்சிக் காலத்தை 2006 இறுதி வரை நீடிக்கும் நோக்கம் தோல்வியடைந்த பின்னர், வேறு வழியின்றி மஹிந்த ராஜபக்ஷவைச் சனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டி வந்தது.

ராஜபக்ஷ ஜே.வி.பி யுடனும் ஹெல உறுமயவுடனும் தேசிய இனப்பிரச்சனை பற்றிச் செய்து கொண்ட உடன்படிக்கைகள் சந்திரிகாவின் நிலைப்பாட்டின் மறுதலிப்பாக அமைந்தன. யூஎன்.பியும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் ஒற்றுமையாகத் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்காகவும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் செயற்படுவது என்று ரணில்விக்ரமசிங்ஹ தனது தேர்தல் பிரசாரத்தின் போது பேசி வந்துள்ளார். இது இரண்டு கட்சிகளதும் வர்க்க நலன்கள் கடந்த இருபது ஆண்டுகளுள் நெருங்கி வந்துள்ளதை அறிவோம். இக்கால இடைவெளியில் இரண்டு கட்சிகளும் அடிப்படையில் ஒரே கொள்கையையே கடைப்பிடித்து வந்ததன் காரணமும் இதுவே.



மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியையடுத்து, நாட்டின் அரசியல் நிலவரத்தில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. எனினும், ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் உட்பிளவுகட்கான அடித்தளம் தேர்தலுக்கு முன்னமே இடப்பட்டுவிட்டது. சந்திரிகாவைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் அவரது சனாதிபதிப் பதவி போன பின்பு மேலும் வலுவடையும். ஜே.வி.பி தனது தளத்தை மேலும் வலுப்படுத்துகிற முயற்சிகளில் இறங்குவதன் விளைவாக, சந்திரிகாவின் அரசியல் முக்கியத்துவம் அவர் பிளவுபடாத ஒரு ஸ்ரீ.ல.சு. கட்சியின் தனிமைப்படுத்தப்பட்ட தலைவியாக்கித் தொடர்ந்தாலும் வீழ்ச்சி காணும் இல்லாமல் பிளவுபட்ட ஒரு கட்சியின் தலைவியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டாலும் வீழ்ச்சி காணும். நீண்ட காலத்தில் என்ன நடக்கும் என்பது பற்றிக் கூறுவதுகடினம். மறுபுறம், சந்திரிகாவின் இப்போதைய அரசியல் வீழ்ச்சியை யூஎன்.பி வெற்றி பெற்றிருந்தாலும் தடுத்திருக்க முடியாது. அவரது வீழ்ச்சிக்கான அதி முக்கிய பங்களிப்பு அவருடையதே. சரியானது போலத் தெரிகிற முடிவுகளை அவர் எடுப்பது போலத் தோன்றிய சூழ்நிலைகளிலும் அவரது தடுமாற்றம் அவரது சொல்லப்பட்ட நோக்கத்தை எதிர்ப்பவர்கட்கே வசதியாகியுள்ளது. சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் ஒப்பமிடுவதைத் இழுத்தடித்ததன் மூலம் அதற்குப் பேரினவாத ஜே.வி.பி.யும் ஹெல உறுமயவும் காட்டிய எதிர்ப்பு ஊக்குவிக்கப்பட்டது. முன்னைய சமாதான முயற்சிகளிலும் அவரது தடுமாற்றமும் தயக்கமும் போருக்கான சூழலை வலுப்படுத்தின. விடுதலைப் புலிகளை மேலைநாடுகளில் தடை செய்விப்பதில் அவர் காட்டிய தீவிரமான அக்கறையும் கதிர்காமர் மூலம் அதைச் செயற்படுத்தியதும் அமைதியான நியாயமான தீர்வு பற்றி அவரது நம்பிக்கையை மிகவும் ஐயத்திற்குள்ளாக்கியிருக்கிறது.

ரணில் விக்ரமசிங்ஹ அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போதே விடுதலைப் புலிகளிடையே பிளவை ஏற்படுத்தியதையும் நாம் கணிப்பில் எடுப்போமானால், இரண்டு பெரிய கட்சிகட்குமிடையே அடிப்படையில் வேறுபாடில்லாதது போல அவற்றின் தலைவர்களது பேரினவாத அரசியலும் தந்திரோபாயத்தில் மட்டுமே வேறுபட்டது என்றும் அறிவோம்.

இந்தவிதமான பேரினவாதம் ஆழமான இன உணர்வால் உந்தப்பட்டது என்பதை விட ஒரு குறிப்பிட்ட வர்க்க நலன்களால வழிநடத்தப்படுவது என்பதே உண்மை. அவ் வர்க்க நலன்களைப் பேணவும் அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கவும் பேரினவாதத்தை வளர்க்கிற இதே தலைமைகள் அதே வர்க்கத்தின் நலன்களைப் பேண வேண்டி இன்னொரு சூழ்நிலையில் தமது பேரினவாத நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கியும் வரலாம்.

தேசிய முதலாளித்துவத்தின் சீர்குலைவினதும் தடுமாற்றத்தினதும் உருவகமாக நாம் சந்திரிகாவை அடையாளங் காண முடிகிறது. அவரது தனிப்பட்ட ஆளுமைகளையும் குணவியல்புகளையும் மீறி அவர் சார்ந்த வர்க்கமும் அதன் முகவரான கட்சியும் ஒரு சூழ்நிலையில் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்பதற்கான எல்லைக் கோடுகட்கிடையிலேயே அக் கட்சியின் தலைவர் எவரும் நடந்து கொள்ள இயலும். அவர்கள் தமது நடத்தையை மாற்றுவதற்கான தேவை நாட்டின் அரசியற் சூழலால் முடிவாகிறது. இன்றைய நிலைமைகளில், சந்திரிகாவிடமிருந்து அவர் செய்ததை விடச் சிறப்பாகவோ மோசமாகவோ நாம் எதிர்பார்த்திருக்க இடமில்லை. ஏனெனில் அவர், எல்லாவற்றுக்கும் மேலாகத், தனது சுரண்டும் வர்க்கச் சிந்தனையின் பிடிப்பிற்குள் நின்றே சிந்திக்கவும் செயற்படவும் முடிந்தது. முடிவாகச் சந்திரிகாவுடைய அரசியல் வாழ்வைப் பற்றிய ஆய்வு எதுவும் அவரது வர்க்க நிலைப்பாடு பற்றிய தெளிவுடன் மேற்கொள்ளப்படுமாயின், அவரது அரசியலின் சிக்கல்களும் முரண்பாடுகளும் பற்றி விளக்குவது இலகுவாகும். அத்துடன் அது எங்கே தொடங்கி ஏன் எங்கே வந்து நின்றது என்று விளங்கிக் கொள்ளவும் உதவும். அந்த முக்கியமான இழையைத் தவற விட்டால், மிகவும் அகச்சார்பான முடிவுகளையே நாம் வந்தடைவோம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்





# நக்சல்பாரிகள் பயங்கரவாதிகளா?

அண்மையில் இந்திய ஆளும் வர்க்கத்தின் மத்திய அரசாங்கம் முதல் மாநில அரசாங்கங்கள் வரை ஒன்று கூடி நக்சல்பாரிகளின் ஆயுதப் போட்டத்திற்கு எதிராகப் பல தீர்மானங்களை எடுத்தன. அதில் முக்கியமானது நக்சல்பாரி இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் இரண்டு கம்யூனிஸ்ட் அமைப்புகளையும் அவற்றோடு இணைந்த வெகுஜன அமைப்புகளையும் தடை செய்துள்ளமையாகும். இந்திய ஆளும் வர்க்கத்தின் கொடிய அரசு யந்திரம் இத்தடைகளின் ஊடே இந்தியாவின் குறிப்பாக 12 மாநிலங்களின் 118 மாவட்டங்களில் தம்மை நிலைப்படுத்தியுள்ள நக்சல்பாரி புரட்சிகரப் போராளிகளின் மீது தாக்குதல் தொடுத்து நிற்கிறது. இது லட்சோபலட்சம் நிலமற்ற ஏழை விவசாயிகளையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் தொழிலாளர்கள் மற்றும் புரட்சிகரப் புத்திஜீவிகளையும் ஒடுக்கும் நடவடிக்கைகளாகவே காணப்படுகின்றன. தமக்கெனத் தனிப் படைகளை வைத்திருக்கும் பெரும் நிலப்பிரபுக்களையும் அவர்களது இரக்கமற்ற சுரண்டலையும் அரசியல் அடாவடித்தன அதிகாரத்தையும் உயர் சாதிவெறித்திமிர்த்தனங்களையும் தட்டிக் கேட்காத இந்திய ஆளும் வர்க்கம் விவசாயிகளும் தொழிலாளர்களும் தமக்கேயுரிய நக்சல்பாரிப் போராட்டப் பாதையில் வீறு பெற்று எழுந்துள்ள நிலையில் அதனை ஒடுக்க முன்வந்துள்ளது.

அன்று "வசந்தத்தின் இடி முழக்கம்" என வர்ணிக்கப்பட்ட நக்சல்பாரி எழுச்சியையும் அதன் ஆயுதப் போராட்டத்தையும் நசுக்கி விட்டாதாகவே இந்திய ஆளும் வர்க்கமும் அதன் துணையாளர்களான பாராளுமன்ற கம்யூனிஸ்டுகளும் ஆறுதல் அடைந்தனர். ஆனால் அன்று மூட்டப்பட்ட புரட்சித் தீ அணைந்தது போன்று தோற்றம் காட்டியதே தவிர அற்றுப் போய் விடவில்லை. அது தணிந்து மீண்டெழுந்துள்ள புரட்சித் தீயாகக் காணப்படுகிறது.

"சுரண்டுவது நியாயமானது சுதந்திரத்தை மறுப்பது நீதியானது ஒடுக்குவது சரியானது கிளர்ச்சி செய்வது நியாயமற்றது என்ற நடைமுறையே இருந்து வந்தது. ஆனர்ல் மாக்சிசத்தின் தோற்றத்துடன் சுரண்டுவது அநியாயமானது. சுதந்திரத்தை மறுப்பது தவறானது ஒடுக்குவது அநீதியானது கிளர்ச்சி செய்வது நியாயமானது என்ற புது விதி நடை முறைக்கு வந்தது." இதன் அடிப்படையிலேயே பழைய சமூக அமைப்புகளைத் தகர்த்தெறிந்து புதிய சமூக அமைப்புகளைத் தோற்றுவிக்கும் புரட்சிகரப் போராட்டங்கள் தொடர்ந்தன. வெற்றிகளையும் பெற்றன. அந்த மாக்சிச லெனினிசப் புரட்சிகர மார்க்கத்திலேயே இந்தியப் புரட்சிவாதிகள் நக்சல்பாரிப்போராட்டப் பதையில் முன்னேறி வருகிறார்கள்.

இந்தியாவின் வறுமை உணவின்மை உடையின்மை வீடின்மை வேலை இன்மை கல்வி சுகாதாரம் இன்மை போன்ற அடிப்படை வசதிகள் பெற முடியாது இந்திய சனத்தொகையில் அரை வாசிக்கு (50 கோடிக்கு ) மேல் மக்கள் அடி நிலை வாழ்வுக்குள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களது வாழ்வை நாளாந்தம் உறுஞ்சுவதில் நிலவுடமையாளார்கள் முதலாளிகள் ஏகாதிபத் திய வாதிகள் அவர்களது அரசியல் அதிகாரப் பிரதிநிகள் முன் நிற்கிறார்கள். அரசு யாந்திரமான ஆயுதப் படைகளும் சிறைச்சாலைகளும் நீதிமன்றங்களும் அவர்களுக்கு துணையும் பாதுகாப்பும் வழங்கி வருகின்றன. இவர்களே நக்சல் பாரிகளைத் தீவிரவாதிகள் பயங்கரவாதிகள் எனப் பட்டை நாமச் சூட்டுகிறார்கள் தமது அன்றாட வாழ்வைப் பறித்து. நிற்கும் உடைமை வர்க்கத்தையும் அவர்களது ஆளும் அதிகார சக்திகளையும் எதிர்த்து தமது வாழ்வுரிமைக்காக இரத்தம் சிந்திப் போராட மக்கள் எழுந்துள்ள இயக்கமே நக்சல்பாரிப் போராட்டமாகும். இது தீவிரவாதமும் அல்ல. பயங்கரவாதமும் அல்ல. சமூக மாற்றத்தைக் கோரி முன் செல்லும் மக்களின் புரட்சிகரப் போராட்டமேயாகு[illegible]

## தணிந்து மூண்டு எழும் புரட்சித் தீ!

இந்தியாவிலும் உலக நாடுகளிலும் மாக்ஸிய லெனினியவாதிகள் பெருமையுடன் கூறிக்கொள்ளும் நக்சல்பாரி இயக்கத்தை "நக்சலைற்றுக்கள்" என்று முதலாளிய வர்க்கமும் 'இடதுசாரிகள்' உட்பட்ட அதன் பாராளுமன்ற அரசியல் பங்காளிகளும் வக்கிரத்துடன கொச்சைத்தனமாக அழைக்கின்றனர். மேற்கு வங்காளத்தின் நக்சல்பாரி கிராமத்தில் 1967 மே மாதம் நிலவுடைமையாளர்கட்கெதிராக ஒடுக்கப்பட்ட விவசாயிகள் நடத்திய ஆயுதப் போராட்டமே இந்தியக் கம்யூனிஸ்ற் கட்சியின் திரிபுவாத பாராளுமன்றப் பாதை பற்றிய கேள்வியை நடைமுறையில் எழுப்பியது. 1963ம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ற் கட்சியிலிருந்து பிரிந்த மாக்ஸிய கம்யூனிஸ்ற் கட்சி (சி. பி. எம்) இன்னொரு திரிபுவாதக் கட்சியே என்பதை இந்த விவசாயிகள் போராட்டம் தொடர்பாக அக்கட்சியின் தலைமை எடுத்த நிலைப்பாடு தெளிவாக்கியது. விவசாயிகளின் போராட்டம் 1967 முடிவிற்குள்ளேயே முறியடிக்கப்பட்டபோதும் அது எழுப்பிய அரசியற் கேள்விகள் சி.பி.எம். மில் இருந்த நேர்மையான கட்சித் தொண்டர்கள் பலரின் நெஞ்சங்களைத் தொட்டன. இதன் விளைவாக 1968ம் ஆண்டு அகில இந்திய கம்யூனிஸ்ற் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக்குழு உருவானது. பாராளுமன்ற அரசியலை நிராகரித்து ஆயுதப் புரட்சியை முன்னெடுப்பதுபற்றிப் பொதுவான உடன்பாடு இருந்த போதும் தந்திரோபாயங்கள் பற்றிய கருத்து வேறுபாடுகள் இருந்தன. 1969 ஏப்பிரல் 22ம் நாள் இந்திய கம்யூனிஸ்ற் கட்சி (மா. லெ) உருவானது. அதன் முதலாவது மாநாடு1970ல் கல்கத்தாவில் நடந்தது. சாரு மஜும்தார் அதன் பொதுச் செயலாளரானார். 1969 செப்ற்றெம்பரில் மாஓவாத கம்யூனிஸ்ற் மையம் உருவானது.

அடுத்த இரண்டு ஆண்டுகளாக இந்த இரண்டு அமைப்புக்களும் போராட்ட அரசியலில் தீவிரமாகச் செயற்பட்டன. மஜும்தாரின் தலைமையின் கீழ் மா. லெ கம்யூனிஸ்ற்றுக்கள் நடத்திய போராட்டம் 1972ம் ஆண்டு ஜுலையில் மஜும்தார் பொலிசாரால் பிடிக்கப்பட்டுச் சிறையிலேயே கொல்லப்பட்ட பின்பு கட்சியின் உள் நெருக்கடிகளால் பலவீனப்பட்டது. 1974 அளவில் பல பிளவுகள் ஏற்பட்டன. 1976ம் ஆண்டு இந்திராகாந்தியின் அவசரகாலச் சட்டத்தின் கீழ் 'நக்ஸலைற் வேட்டை' தீவிரமாக நடந்தது. எவ்வாறாயினும் நக்ஸல்பாரி போராட்டம் மூட்டிய போராட்டத் தீ அணையவில்லை. தந்திரோபாயமாக இந்தியாவின் மாக்ஸிய லெனினியவாதிகள் செய்த தவறுகளை 1970 அளவிலேயே இலங்கையின் மாக்ஸிய லெனினியவாதிகள் சுட்டிக்காட்டினர். எதிரியுடனான பகை முரண்பாடுகட்கும். தமக்கிடையிலான சினேக முரண்பாடுகட்குமிடையே வேறுபாடு காண்பதில் ஏற்பட்ட தவறுகளும் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்குக் கேடு செய்தன. அதே வேளை தங்களைக் கம்யூனிஸ்றுக்கள் என்று அழைத்துக் கொண்ட திரிபுவாதிகள் இந்திராகாந்தியின் அவசரகால ஆட்சியை ஆதரித்த சி.பி.ஐயும் மாநில மட்டத்தில் புரட்சிவாதிகளை அடக்கவும் காட்டிக் கொடுக்கவும் செயற்பட்ட சி.பி.எம் மும் முதலாளிய சீர்திருத்தவாத அரசியலுடன் தம்மை மேலும் நெருக்கமாகப் பிணைத்துக் கொண்டன.

இந்திய மாக்ஸிய லெனினிய இயக்கத்தின் மிகப்பெரிய பலவீனம் அதில் ஏற்பட்ட பிளவுகளின் விளைவாகச் சில பிரிவுகள் புரட்சிகரப் போராட்டத்தைக் கைவிட்டது போக மக்கள் யுத்தம், மாஓவாத கம்யூனிஸ மையம் போன்றவை உட்பட்ட பிரிவுகள் ஆயுதப் போராட்டத்தையும் வெகுசன அரசியலையும் முன்னிறுத்திப் பாராளுமன்றத்தை முற்றாக நிராகரிக்கிற நிலைப்பாட்டிலும் சி.பி (எம்.எல்) (விடுதலை) உட்பட்டவை பாராளுமன்ற அரசியலில் தந்திரோபாயமாகப் பங்கு பற்றினாலும் ஆயுதப் போராட்டமே இறுதியானதும் தீர்மானமானதும் என்ற நிலைப்பாட்டிலும் ஒன்றோடொன்று முரண்பட்டு நின்று வந்தது தான். இந்தப் பிளவுகள் வெறுமனே கருத்து மோதல்களாக மட்டுமில்லாமல் கடுமையான ஆயுதத் தாக்குதல்களாகவும் இருந்தன. இது புரட்சிகர இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்குப் பல வகைகளிலும் தடையாகவே இருந்து வந்தது.

எவ்வாறாயினும் மாக்ஸியத்தின் முடிவை முதலாளிய உலகம்

**-நரசிம்மா-**

அறிவித்த 1990க்குப் பின்பு இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களில் மாக்ஸிய லெனினிய அமைப்புக்கள் துரிதமான வளர்ச்சி பெற்றுள்ளன. அதைவிட முக்கியமாக வெவ்வேறாகச் செயற்பட்டுவந்த மக்கள் யுத்தக் குழுவும் மாஓவாத கம்யூனிஸ மையமும் இந்திய கம்யூனிஸ்ற் கட்சி (மாஓவாதிகள்) என்ற கட்சியாகச் சென்ற வருடம் ஒருங்கிணைந்துள்ளனர். அத்துடன் ஒரிஸ்ஸாவில் சி.பி (எம்.எல்), (விடுதலை) கட்சியினருடன் மோதுவதில்லை என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. நக்சல்பாரி இயக்க வழி வந்த கட்சிகளில் முக்கியமானவையாகவுள்ள மாஓவாதக் கட்சியும் சி.பி (எம்.எல்) விடுதலை கட்சிக்குமிடையேயுள்ள கருத்து வேறுபாடுகள் புறக்கணிக்க இயலாதவை. எனினும் இவை இரண்டு கட்சிகளையும் ஒன்றுடன் ஒன்று மோதி மக்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்தாமலிருப்பது முக்கியமானது.

பாராளுமன்றப் பாதையை நிராகரிப்பது இந்தியாவின் சகல மாநிலங்களிலும் ஒரே விதமாகக் கடைப்பிடிப்பது இயலாது. பாராளுமன்றத்தைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்துவது என்ற நிலைப்பாடு பாராளுமன்றத் தேர்தலில் கட்சியை மூழ்கடிக்கும் அபாயம் உண்டு. அதே சமயம் வெறுமனே ஆயுதப்போராட்டத்தை மட்டுமே முதன்மைப்படுத்துகிற அபாயம் பற்றியும் கவனமாக இருக்க வேண்டும். வெகுசன அரசியலையும் மக்கள் போராட்ட மார்க்கத்தையும் கைவிடாதவரை தவறுகள் திருத்தப்படக் கூடியவை. மக்களிடமிருந்து தனிமைப்படும் ஒரு தலைமை ஒரு புறம் முதலாளியப் பாராளுமன்ற அரசியலில் மூழ்கலாம். மறுபுறம் வெறுமனே ஒரு சுத்த ராணுவக் கண்ணோட்டத்தைக் கொண்ட ஒரு ஆயுதக் குழுவாகச் சீரழியலாம். புரட்சிகர அரசியலையும் வெகுசன மார்க்கத்தையும் இறுகப் பற்றிக் கொள்ளும் வரை அந்த ஆபத்து இல்லை.

இன்று மாஓவாதக் கம்யூனிஸ்ற் கட்சி ஆந்திரம், ஜார்கண்ட், சட்டிஸ்கார்ஹ், ஒரிஸ்ஸா பிஹார் ஆகிய மாநிலங்களில் வலியதாக உள்ளது. மேலும் மகாராஷ்ட்டிரம், கர்நாடகம், மத்தியப் பிரதேசம் என்பன உட்பட எல்லாமாக இந்தியாவின் 12 மாநிலங்களின் 118 மாவட்டங்களில் மாஓவாதக் கம்யூனிஸ்றகட்சியின் செல்வாக்கு கணிசமான அளவில் உள்ளதாக இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. சென்ற ஆண்டு பிஹார் மாநிலத் தேர்தலில் மூன்று ஆசனங்களை வென்று சி.பி.ஐ, சி.பி.எம் ஆகிய இரண்டு திரிபுவாதக் கட்சிகளையும் விட வலிய கட்சியாகத் தம்மை நிலைநாட்டிக் கொண்டனர். ஜார்கண்ட்டிலும் அவர்களது செல்வாக்கு வலியதாக உள்ளது. இதற்கும் மேலாக மூன்று லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அகில இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய மன்றம் என்ற தொழிற்சங்க சம்மேளனத்தின் மூலமும் மாணவர், மாதர் அமைப்புக்கள் மூலமும் தமிழகம் உட்பட பல வேறு மாநிலங்களிலும் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தியாவில் அயல் மூலதனமும் பெருமுதலாளியமும் இணைந்து நிலமில்லாத ஏழை விவசாயிகள் வாழுகிற பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைத் தமதாக்கும் போதும் கொக்கா கோலா போன்ற கம்பனிகள் மண்ணின் நீர்வளத்தைப் பறிக்கும் போதும் அயல் மூலதனம் இந்திய மண்ணில் வேரூன்றும் போதும் அதற்கெதிரான காத்திரமான அரசியற் குரலாக ஒலிப்பது மாக்ஸிய லெனினியர்களது குரலே. அது மட்டுமில்லாமல் அரச அடக்குமுறைக்கெதிரான வெகுசனப் போராட்டங்களையும் மாக்ஸிய- லெனினியவாதிகளே முன்னெடுக்கின்றனர்.

மாஓவாதக் கம்யூனிஸ்ற்றுக்களின் வளர்ச்சி ஆட்சியாளர்களை மட்டுமன்றித் திரிபுவாதிகளையும் (குறிப்பாக சி.பி.எம் தலைமையை) கலங்கச் செய்துள்ளது. எனவே மாற்று நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது. வீரப்பனைப் பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட விசேட அதிரடிப் படைகள் தமிழகத்தின் தர்மபுரி, கிருஸ்ணகிரி, திருவள்ளுர், வேலூர் மாவட்டங்களிலும் கர்நாடகத்திலும் தமது இலக்கை மாஓவாதக் கம்யூனிஸ்ற் போராளிகளை நோக்கித் திருப்பியுள்ளன. மக்களிடையே வீரப்பனின் செல்வாக்குக்கு எந்த விதமான பொலிஸ் நடத்தை காரணமாயிருந்ததோ அதே நடவடிக்கைகள் தொடர்வதன் விளைவாக அம் மக்கள் போராட்டப்பாதையை நோக்கித் தள்ளப்படுவர் என்ற உண்மையை அதிகார நிறுவனங்கள் உணர்வதில்லை. அதற்கும் மேலாக மாஓவாதக் கம்யூனிஸ்ற்றுக்களை அடக்கக் குண்டர் படைகளும் 'பயங்கரவாத விரோத' வெகுசன

தொடர்ச்சி 10ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய இனப்பிரச்சினையில் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் அணுகுமுறை பற்றிய புரிதல்

கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து இயங்குபவர்கள் எவருமே அர்த்தமற்ற வாழ்வு வாழ்ந்ததில்லை. தத்துவம் நடைமுறை என்பவற்றை பிறர் சொல்லக்கேட்டு கண்மூடித்தனமாக நடந்து கொள்வதுமில்லை. கட்சியின் முடிவுகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது என்பது கருத்து வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்ட உழைப்பல்ல. தலைவர் எனப்படுவரின் ஆணையை அப்படியே ஏற்று நடப்பது என்பதுமல்ல. கட்சி அமைப்பு வாயிலாக கூட்டு முடிவினை எடுத்தலும் தனிமனித பொறுப்பும் கொண்டவரே கட்சியின் உறுப்பினர் ஊழியர் தலைமைத்துவம் வழங்குபவர்.

தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) 1978 ஆரம்ப பொதுச் செயலாளராவார். அவர் காலமாகி 16 வருடங்களாகின்றன. தோழர் என்.சண்முகதாசனின் தலைமையிலிருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீங்கி புதிய கட்சியைக் கட்டுவதற்கான காரணங்களில் தேசிய இனப்பிரச்சினை பற்றிய நிலைப்பாட்டிலிருந்த முரண்பாடும் ஒன்றாகும். இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் கூட ஒரு தேசிய இனமல்ல என்பது அன்று சண்முகதாசனின் நிலைப்பாடாக இருந்தது. (அந்நிலைப்பாடு பின்னர் மாற்றமடைந்திருந்தது).

மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகளிடையே தமிழ் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் பற்றிய கருத்து நிலை பலமாக வளர்க்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை தமிழ் மக்கள் மத்தியி

லாதாரத்தடை என்பவற்றை எதிர்த்து வெகுஜன போராட்டங்களை முன்னெடுத்தது. மனிதஉரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் போன்றன கட்சியின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டன.

ஆயுதப் போராட்டத்தின் இலக்காக இருந்த "தனிநாடு" இலங்கை மீது ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் பிடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்ற நோக்கு கட்சியிடம் இருந்தது. இயக்க மோதல்கள் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மனித உரிமை மீறல்கள் பற்றியும் விமர்சனங்களைக் கட்சி கொண்டிருந்தது.

அதேவேளை பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க எதிர்ப்புப் போராட்டமாகவும் வளர்க்கப்பட வேண்டும் என்பதை கட்சி சுட்டி



அதன் வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கவை ஆதரித்து வேலைகளை முன்னெடுத்தது. வடபுலத்தில் நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தை அடுத்து தோழர் மணியம் உட்பட கட்சியின் தலைமைத் தோழர்கள் மரண அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டனர்.

தேசிய இனப்பிரச்சினை பேரினவாத ஒடுக்குமுறை பற்றிய கணிப்பு மேலும் கட்சிக்குள் பிரதான நிகழ்ச்சி நிரலாக விவாதிக்கப்பட்டு தெளிவான அடிப்படைகள் ஏற்றுக்கொள் எப்பட்டன. சுயநிர்ணய உரிமை சுயாட்சி பிரிவினை பேரினவாத ஒடுக்கு முறை ஏகாதிபத்தியம் பிராந்திய மேலாதிக்கம் போன்றவற்றைக் கணிப்பீடு செய்வதில் தோழர் மணியத்தின் பங்களிப்பு கட்சியை முன்னோக்கி வழி நடத்த வழி காட்டியது. இவற்றின் அடிப்படைகள் 1989 ல் தோழர் மணியத்தின் மறைவிற்குப் பின் மேலும் கட்சித்தலைமையால் வளர் த்தெடுக்கப்பட்டு நடைமுறைகளாக் கப்பட்டன.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கட்சி புதிய-ஜனநாயக கட்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அடக்கு முறைகள் அதற்கு எதிரான போராட்டத்தின் வளர்ச்சி பேரினவாதம் ஏகாதிபத்தியம் பிராந்திய மேலாதிக்கம் என்பவற்றின் சூழ்ச்சி போன்றவற்றின் பின்னணியில் இன ஒடுக்கலுக்கு எதிரான தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி அரசாங்கத்தின் இன அழிப்பு யுத்தத்திற்கு எதிரான இயக்கமாக முன்னெடுக்கப்பட்டது. சிங்கள மக

## தோழர் மணியம் மறைவின் 16ஆவது ஆண்டு நினைவாக

த. உதயதீபன்

லான போராட்டங்களில் நிலவுடமை வழிவந்த தமிழர் பழமைவாதம் முதலாளித்துவ சார்பு இந்திய மேலாதிக்க அரவணைப்பு போன்றவற்றின் செல்வாக்கு செலுத்தி வந்த சூழலில் மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் தமிழ்மக்களின் போராட்டங்களில் முக்கிய பங்காளிகளாக இருக்க முடியவில்லை. இலங்கை மக்களின் விடுதலைக்குரிய பாதை புதிய ஜனநாயகப் புரட்சி. சோஷலிஸ புரட்சி என்ற இரண்டு புரட்சிகர காலகட்டங்களையும் கொண்டதெனவும் அவற்றை பாட்டாளி வர்க்க கட்சியே முன்னெடுக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டதே புதிய கட்சி கட்டப்பட்டது.

1. தேசிய இனங்களின் விடுதலை புதிய ஜனநாயகப் புரட்சியின் நிகழ்ச்சி நிரலாக முன்வைக்கப்பட்டபோது தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டமும் தேசிய இனப்பிரச்சினைக்குரிய குறைந்தபட்சத் தீர்வும் உடனடி தேசிய ஜனநாயக வேலைத்திட்டத்திக்குள் அடக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை புதிய கட்சி ஏற்றுக்கொண்டது. இதற்கு தோழர் மணியம் செய்த பங்களிப்பு முக்கியமானதாகும்.

தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான இலங்கை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தை (**ARMED RESISTENCE FROM TAMILS**) வர்க்கப் போராட்டப் பார்வையில் புரட்சிகரமானதாக கொள்ள முடியாவிட்டாலும் அது இன ஒடுக்கலுக்கு எதிரான தேசிய ஜனநாயகப் போராட்டமே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையிலே பு.ஜ.கட்சி தமிழ் மக்கள் மீதான அரசின இராணுவ நடவடிக்கைகள் பொரு

க்காட்டியது.

இவை மணியம் தோழர் தலைமையிலான புதிய கட்சி கொண்டிருந்த தேசிய இனப்பிரச்சினை பற்றிய அடிப்படைகளாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யின் 1984 இல் நடைபெற்ற முதலாவது தேசிய மாநாட்டில் மாகாண சுயாட்சி குறைந்தபட்ச தீர்வாக முன்மொழியப்பட்டது. கிழக்கு மாகாண மக்களின் விருப்பின் பேரில் வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் இணைக்கப்படலாம் என்பது வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் முஸ்லிம்களுக்கும் மலையகத் தமிழ் மக்களுக்கும் சுயாட்சி உள்ளமைப்புகளும் உப உள்ளமைப்புகளும் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியது.

1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக மாகாணங்களுக்கு சிறிதளவு அதிகாரம் பங்கிடப்பட்டதையும் வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்பையும் சில விமர்சனங்களுடன் ஏற்ற போதிலும் இந்தியத் தலையீடு இந்தியப்படைகளின் வருகை என்பவற்றை கட்சி எதிர்த்தது. இந்தியப் படைகளை வெளியேறும்படி இயக்கங்களை நடாத்தியது. சுதந்திரக் கட்சி தலைமையிலான "பொது மக்கள் சக்தி" என்ற கூட்டமைப்பு முன்வைத்த வேலைத்திட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண சுயாட்சி வழங்கப்படுவது பற்றியும் இந்தியப் படைகளை வெளியேற்றுவது பற்றியும் குறிப்பிட பட்டிருந்ததால்1988 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில்

கள் மத்தியில் யுத்த எதிர்ப்பு இயக்கம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடுகள் பற்றி சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி வலியுறுத்தப்பட்டது. முஸ்லிம் மக்களுக்கும் மலையகத்தமிழ் மக்களுக்கும் சுயாட்சி உள்ளமைப்புகள் வலியுறுத்தப்பட்டன. தேசிய இனப்பிரச்சினை பிரதான பிரச்சினையாக இனம் காணப்பட்டது. யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தை சமாதானத்தீர்வு என்னும் அடிப்படையிலேயே 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் சந்திரிகா குமாரண துங்காவை கட்சி ஆதரித்தது.

1997ல் இடம் பெற்ற கட்சியின் 3வது தேசிய மாநாடு தேசிய இனப்பிரச்சினை பற்றியும் பேரினவாத ஒடுக்குமுறை முரண்பாடு பிரதான இடத்தில் இருப்பதையும் சுட்டிக்காட்டியது.

2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற கட்சியின் 4வது மாநாட்டில் இலங்கையில் சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லிம்கள் மலையகத்தமிழர்கள் என நான்கு தேசிய இனங்கள் இருப்பதாகவும் அவற்றில் தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் தேசிய இனங்கள் அடக்கப்படும் தேசிய இனங்களாகவும் காணப்பட்டது. தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான சுயாட்சியை பிரதானமாக உறுதி செய்வதாக இருப்பதுடன் முஸ்லீம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் தேசிய அபிலாஷைகளை உறுதிசெய்யப்

படக் கூடிய விதத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த அடிப்படையிலேயே புதிய ஜனநாயக கட்சி தமிழ் மக்களுக்கு மத்தியிலும் அதற்கு வெளியிலும் வேலை செய்து வருகிறது. மணியம் தோழரினால் தொடக்கி வைக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினை பற்றியதும் சுயநிர்ணய உரிமை பற்றியதுமான கட்சியின் மாக்சிச லெனினிச அணுகுமுறை இன்று விரிவடைந்து வளர்ச்சியடைந்துள்ளது. இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டங்கள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் போராட்டங்களாகவே வளர்ச்சியடைந்துள்ளன. அத்துடன் அவை ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலுடன் இணைந்தும் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

கொலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்களில் போலன்றி இன்று ஏகாதிபத்திய உலகமயமாதலிலிருந்து நாடு விடுதலை பெறுவதற்கு அடக்கப்படும் தேசிய இனங்களும், பெரும் தேசிய இனம் ஏனைய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து நிற்பதும் முக்கியமான முன்நிபந்தனையாகி விட்டது. அதே போன்று ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலின்றி அடக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் முன்னேறுவதும் வெற்றிபெறுவதும் இயலாததாகும்.

புரட்சிகரக் கட்சியைக் கட்டுவதிலும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் மாக்சிசம் லெனினிசம் மாஒசேதுங் சிந்தனையை நமது நாட்டின் சூழலுக்கு உரியவாறு பொருந்தச் செய்வதிலும் தேசிய இனப் பிரச்சினை பற்றிய புரிதலிலும் தோழர் மணியம் சுட்டிக்காட்டி வலியுறுத்திச் சென்ற ஒவ்வொரு அடிப்படைகளையும் வளர்த்துச் செல்வதே அவரை நினைவு கூர்வதன் அர்த்தமாகும்.

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## ஜே.வி.பி. மீண்டும் முருங்கையில்

2005 ஆம் ஆண்டிற்கான 5வது அதிமேதகு ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் முடிந்தது. பாதிக்கப்பட்டவர்கள் வாய் திறக்க முடியாத நிலையில் மஹிந்த ராஜபக்ஷ அதி உத்தமராக பதவி ஏற்றாயிற்று. சூட்டோடு சூடாக புதிய அமைச்சரவையும் அமைத்தாயிற்று. அமைச்சரவைப் பொறுப்பு உள்ள அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் என்று எண்பது பேர் வரையில் நியமித்தாயிற்று.

ஆளுக்கு 12 நிபந்தனைகள் விகிதம் முன்வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உள் முரண்பாடுகளையும் கணக்கெடுக்காது செய்து மஹிந்த சிந்தனையை வடிவமைத்து பிரச்சார மேடைகளில் உரத்துப் பேசி ஜனாதிபதி முடியை மஹிந்த சூடும் வரை காய் நகர்த்தி வந்த இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி யும் ஜாதிக ஹெல உறுமயவும் அமைச்சர் பதவிகளை நிராகரித்து விட்டன. என்ன காரணம்?

1. கடந்த சந்திரிகா அரசில் ஆட்சியைப் பிடிப்பதற்காக கூட்டமைப்பு ஏற்படுத்தி பேரங்கள் பேசி, ஆட்சியைப் பிடிக்க தோள் கொடுத்தவர்கள் ஜே.வி.பியினர்.

அமைச்சர்கள் பதவிகளையும் பெற்றுக் கொண்டனர். ஆனால் எதையும் சாதிக்கவில்லை. தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

குறைந்த பட்சம் ஆயிரம் குளங்களை தூர் அகற்றுகிறோம் என்று புறப்பட்ட வேலை கூட பாதியில் நின்றுவிட்டது. குழத்தைக் கலக்கி பின் குட்டையைக் குழப்பிக் கொண்டு வெளியேறி விட்டனர்.

பின் மஹிந்தவைப் பிடித்து வாலை முறுக்கி நிபந்தனைகள் கொடுத்து அதனை உரத்துப் பேசி (தேர்தல் இடாப்புகளில் கூட தில்லுமுல்லுப் பண்ணி) ஜனாதிபதி ஆக்கிய கையோடு எட்ட நிற்கத் தொடங்கி விட்டனர்.

2. ஊடகங்களிலும் சரி, மேடைகளிலும் சரி ஜே.வி.பி யினர் விவாதங்களில் பங்கு பற்றும் போதும், கருத்துத் தெரிவிக்கும் போதும் சுவாரசியமாகப் பேசுவார்கள். புள்ளிவிபரம், ஆவணப் பிரதிகள் எல்லாம் ஆயத்தமாக வைத்துக் கொண்டு அக்கு வேறு ஆணி வேறாக நடந்து முடிந்தவைகளை அம்பலப்படுத்துவார்கள். இதை எப்படி இல்லாமற் செய்யலாம் எப்படி மக்களுக்கான சேவையை வழங்கலாம் என்று மறந்தும் சொல்ல மாட்டார்கள். அமைச்சர் பதவிகள் கிடைத்த போதும் கூட எதையும் அவர்களால் சாதிக்க முடியவில்லை. மக்களிடம் தமது செல்வாக்கு இழக்கப்படாது இருப்பதற்காகவே பல குத்துக்கரணங்களை அடித்தார்கள். தனியே ஜே.வி.பி வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் நின்றால் தமது பொட்டுக் கேடு அம்பலம் ஆகிவிடும் என்ற அச்சத்தால் யானை புலி விரோத கோசங்களுடன் வெற்றிலைக்கு கை கொடுத்தனர். மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டனர்.

3. இந்த அரசியல் வாதிகள் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தப் போவதாகச் முரசறைவார்கள் பதவிக்கு பாராளுமன்றத்துக்கு வந்ததும் பழைய சுதிரை பழக்கப்பட்டுவிடும்.

பழகிய அமைச்சர்கள், பழகிய ஊழியர்கள், பழகிய கறுப்புச் சந்தை, பழகிய ஊழல், இலஞ்சம், மோசடி சுத்து மாத்து எல்லாம் தொடரும். அதையே இந்த புதிய அமைச்சரவையிலும் காண முடிகிறது.

அமைச்சரவைக்கு வெளியே நிற்கும் முட்டுக்கால்கள் என்ன செய்யப் போகின்றன? என்பதே தற்போதைய கேள்வி

எட்ட நின்று மஹிந்தவின் குடுமியைப் பிடித்து ஆட்டப் போகிறார்களா? யானையையும் புலியையும் பூச்சாண்டி காட்டிக் காட்டி அரசுடன் பேரம் பேசப் போகின்றார்களா?

நடை முறையில் உள்ள அரசியல் கலாசாரத்துள் தம்மீதான சிங்கள பௌத்த மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் விதத்தில் எதுவும் செய்து விட முடியாது என்ற தெளிவுடன் பேரினவாதப் பேச்சு வீரர்களாகவே காலம் கடத்தப் போகின்றனரா?

மேலும் தமது பாராளுமன்ற ஆசனங்களைக் கூட்டிக் கொள்வதற்கான செயற்பாட்டை முடுக்கி விடப் போகிறார்களா?

அந்த வழியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சிதைத்துக் கொள்ள புதிய ஜனாதிபதியை இந்த ஜே.வி.பி வீரர்கள் பயன்படுத்தப் போகிறார்களா? ஜனாதிபதி மகிந்தா அதற்குபலியாவாரா? அல்லது ஜே.வி.பி க்கு ஆப்பு வைப்பாரா?

எனவே தான் ஜே.வி.பி அமைச்சரவைக்குள் புகுந்து கொள்ளாது இருப்பதில் உள் நோக்கம் இருக்கவே செய்கிறது. இது ஜனாதிபதிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் விளங்காத ஒன்றல்ல.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# பின்தங்கிய-வறிய நாடுகளை அழுக்கிவரும்

## ஏகாதிபத்திய அமைப்புகள்

வறிய நாடுகள் செல்வந்த நாடுகளால் சுரண்டப்பட்டு வந்துள்ளன. இந்தச் சுரண்டலானது பல வேறு வடிவங்களில் மென்மேலும் தொடரப்படுகின்றன. ஆரம்பத்தில் செல்வந்த நாடுகள் கொலனித்துவ குடியேற்ற நாடுகள் என்ற நிலையில் வறிய நாடுகளை நேரடியாகச் சுரண்டி செல்வங்களைக் கொள்ளையிட்டு வந்தன. ஆனால் நாடுகள் அரசியற் சுதந்திரத்தைப் பெற்ற பின்பு உள்நாட்டு உயர் வர்க்க வசதி படைத்தவர்களின் துணையுடன் செல்வந்த நாடுகள் தமது பொருளாதார ஆதிக்கத்தை தக்க வைத்தே வந்துள்ளன.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அமெரிக்கா தலைமையிலான செல்வந்த நாடுகள்- பிரிட்டனும் சேர்ந்து உலகப் பொருளாதாரத்தை தமது ஆதிக்கத்தில் வைத்திருப்பதற்காக சர்வதேச அமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டன.

அவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்புக்களாவன- உலக வங்கி (WB), சர்வதே நாணய நிதியம் (IME), உலக வர்த்தக அமையம் (WTO) (GATT) தீர்வைக்கும் வர்த்தகத்திற்குமான பொது உடன்படிக்கைக்கான அமைப்பு காட் என்பன முக்கிய மானவையாகும்.

உலக வங்கி- அதில் 11,000 பேருக்கு அதிகமானவர்கள் வேலை செய்கின்றனர். 181அங்கத்துவ நாடுகளுக்கு கோடிக்கணக்கான டொலர் கடன்களை வருடாவருடம் வழங்குகிறது. அந்த வங்கிக்கு அங்கத்துவ நாடுகள் நிதி வழங்குகின்றன. அத்துடன் உலக வங்கி முறிகளை சர்வதேச மூலதன சந்தைக்கு விற்பதன் மூலமும் நிதியைப் பெற்றுக் கொள்கிறது.

மிகப் பிரமாண்டமான பொருளாதாரத்தை கொண்டுள்ள அமெரிக்கா ஆகக் கூடுதலான நிதியை வங்கிக்கு வழங்குவதன் மூலம் அதன் தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்துகிறது. உலக வங்கியின் தலைவர் ஒரு அமெரிக்கராக இருக்க வேண்டுமென்பது எழுதப்படாத விதியாகும். இந்த வங்கியானது வறிய நாடுகளுக்கு 'வளர்ச்சி' கடன்களை வழங்குகிறது. வங்கியின் இலட்சியம் உலக நாடுகளில் அன்னிய முதலீட்டை ஊக்கிவிப்பதாகும். அதனால் எங்கும் தனியார்மயத்தை முன்னிறுத்தி கடன்களை வழங்குவது அதன் குறிக்கோளாகும். இதன் காரணமாக செல்வந்த நாடுகளின் இராட்சத கூட்டுத்தாபனங்களுக்கு மிகப் பெரிய அதிஸ்டம். பெரிய திட்டங்களுக்கு உபகரணங்களையும் அறிவுஜீவிகளையும் வழங்குவது என்ற போர்வையில் திட்டங்களில் வரும் இலாபத்தின் மிகப் பெரும் பகுதியை அந்தக் கூட்டுநிறுவனங்கள் பெறுகின்றன. உலக வங்கி வழங்கும் ஒவ்வொரு டொலருக்கும் அமெரிக்க கூட்டு நிறுவனங்களுக்கு 1.30 டொலர் கிடைக்கின்றது. இந்தத் திட்டங்களால் வறிய மக்களுக்கு எதுவித நன்மையும் கிட்டுவதில்லை. உள்ளூர் அரசியல்வாதிகளும்- பெரு வர்த்தகர்களும் மட்டுமே நன்மை அடைகின்றனர்.

அண்மைக் காலங்களில் உலக வங்கியானது வர்த்தக பிரச்சிகைகளை எதிர்நோக்கும் நாடுகளுக்கு கடன் வழங்கி வருகிறது. இந்த வகையான கடன்களை வழங்குவ தில் சர்வதேச நாணய நிதியம் நீண்ட காலமாகவே நிபுணத்துவம் பெற்று வந்துள்ளது. உதவிசெய்வதென்பது நல்ல விடயம் தான். ஆனால் கடந்த 25 வருடங்களாக இந்த இரண்டு அமைப்புகளும் கடன் வழங்கும் போது கடுமையான நிபந்தனைகளை விதித்து வந்துள்ளன என்பது தான் முக்கியமானதாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் செல்வந்த நாடுகள் சர்வதேச வர்த்தகத்திற்கு தடைகளான இறக்குமதி செய்யும் பண்டங்களுக்கும் உள்ள தீர்வை, கோட்டா முறை என்பவற்றை அகற்றும்' பணியில் ஈடுபட்டு வந்துள்ளன. இதன் பொருட்டே காட் (GATT) என்கின்ற தீர்வைகள், வர்த்தகம் என்பவற்றிற்கான பொது உடன்படிக்கையை ஏற்படுத்தும் முறைமை கொண்டுவரப்பட்டது. GATT ன் செயற்பாடு செல்வந்த நாடுகளைப் பொறுத்த மட்டில் தீவிரமாகச் செயற்படவி ல்லை. எனவே 1995ல் உலக வர்த்தக அமைப்பு-WTO- ஏற்படுத்தப்பட்டது.

இந்த உலக வர்த்தக அமைப்பில் 11 வர்த்த நிபுணர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் சுவிற்சலாந்தின் தலைநகரான ஜெனிவாவில் இரகசியமாகக் கூடி இந்த வர்த்தகப் பிணக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவார்கள்.

இந்த WTO விற்கு ஆகக் கூடிய அதிகாரம் உண்டு. சுதந்திர வர்த்தகத்திற்கு எந்த நாடு தடையாய் இருந்தாலும் அதற்கு எதிராக கடினமான தண்டனையை WTO நிபுணர் குழு விதிக்கும். அதனைஅதில் இணைந்த நாடுகள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

### உலகப் பார்வை




# உலக வர்த்தக அமையம் மற்றும் கெட்ஸ் (GATS) உடன்படிக்கைக்கு எதிராக பொதுமக்கள் அணிதிரள வேண்டும்

2005 டிசம்பர் 13ம் திகதி ஹொங் கொங்கில் உலக வர்த்தகநிறுவனத்தின்(WTO)அமைச்சர் குழுக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. 148 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றும் இக் கூட்டத்தின் போது கெட்ஸ் (GATS) தீர்வைக்கும் சேவைக்குமான பொது உடன்படிக்கை தொடர்பான பாரதூரமான ஆலோசனைகள் பல அங்கீகாரம் பெறப்படவிருக்கிறது. இவையாவும் பன்னாட்டு நிறுவனங்களின் வியாபாரத்திற்காக சகல நாடுகளையும் திறந்து விடுகின்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உடன்படிக்கைகளாகும்.

இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது போன்றே, இலங்கை அரசாங்க மற்றும் வர்த்தக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதில் பங்குபற்றும் நபர்கள் அங்கே அங்கீகரிக்கப்படுகின்ற பத்திரங்களில் கையொப்பமிடுவர். உலக வர்த்தக மாநாட்டில் அங்கீகரிக்கப்படுகின்ற உடன்படிக்கையில் இலங்கை உட்பட 148 அங்கத்துவ நாடுகள் உள்ளன. பன்னாட்டு வர்த்தக சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப சகல உடன்படிக்கைகளும் தயாரிக்கப்படுகின்ற ஓர் நிலையினுள் எம் நாட்டைப் போன்ற வறிய மூன்றாம் உலக நாடுகளுக்கு அதனால் ஏற்படுகின்ற அழிவுகள் எல்லையற்றவையாகும்.

அதற்கிணங்க சுதந்திர வர்த்தகத்திற்கு தடை ஏற்படுகின்றது என்ற விடயத்தை அடிப்படையாக வைத்து, நாட்டின் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படுகின்ற கொள்கைகள் மற்றும் சட்டங்கள் பன்னாட்டு நிறுவனமொன்றின் நஷ்டத்திற்கு ஏதுவானதாக அமையுமாகில் உலக வர்த்தக உயர் நீதிமன்றத்தில் அச் சட்டத்தையோஅல்லது கொள்கையையோ செயலிழக்கச் செய்து, அதன் வியாபார நடவடிக் கைகளில் மேற்கொண்டு ஈடுபடுவதற்கு அந்நிறுவனத்திற்கு இடமளிக்கப்படும். மக்களினால் இது வரை காலமும் போராட்டம் செய்து பாதுகாத்த பொது மக்கள் சேவைகள் (சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்றவை) சர்வதேச வர்த்தக சமூகத்தின் அதிகாரத்திற்குக்கீழ் கொண்டுவரப்படும். உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பு நாடுகளில் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் அதிக இலாபத்தை நோக்காகக் கொண்டு நடாத்துகின்ற வர்த்தக நடவடிக்கை நாட்டிற்கு பாதகமாக அமையும் தருணத்தில் அந்த அரசு எடுக்கின்ற பாதுகாப்பு படிமுறைகள் (வரி நியமித்தல் அல்லது நீதிமன்ற ஆணை போன்றவை) உலக வர்த்தக உயர்நீதிமன்றத்தில் தண்டனை பெறுவதற்கும் தண்டம் கட்டுவதற்கும் ஏதுவாக அமையும்.

சுருங்கக் கூறுவதாயின் எமக்கு மேன்மேலும் நாடொன்று என்ற ரீதியில் சுதந்திரமாக மற்றும் சுயேட்சையாக நாம் செயற்படுவதற்கு உரிமையில்லை.

உலக வர்த்தக நிறுவனத்தின் இவ்வாறான மனிதத்தன்மையற்ற கொள்கைகளுக்கு எதிராக உலகம் பூராவும் மக்கள் மற்றும் மக்கள் பற்றுள்ள நாட்டுத் தலைவர்கள் பற்பல போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களின் அழுத்தத்தின் காரணமாக கடந்த பல வருடங்கள் பூராவும் நடைபெற்ற அமைச்சர் சபைக் கூட்டங்கள் தோல்வியடைந்ததுடன் அதேபோன்று இம்முறைக் கூட்டம் உலக வர்த்தக நிறுவனத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தீர்மானக் கூட்டமாக அமைந்துள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் இம்முறை அமைச்சர் குழுக் கூட்டத்திற்கு எதிராக தற்போதே உலகின் பல பாகங்கிளிலும் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கெட்ஸ் உடன்படிக்கைக்கு எதிராக பாரிய உலக மக்கள் எதிர்ப்புக்கள் உருவாகிவருகின்றன.

இலங்கையினுள் மக்கள் எதிர்ப்புக்களை கட்டியெழுப்புதல் உலக வர்த்தக நிறுவனம் மற்றும் கெட்ஸ் உடன்படிக்கைகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து உலக மக்கள் செயற்பாடுகளுடன் ஒன்று திரள்வதற்காகவும் மக்களுக்குப் பாதிப்பை விளைவிக்கும் உடன்படிக்கைகளுக்கு கையொப்பமிடுதலைத் தவிர்த்துக் கொள்ளும்படி இலங்கை அரசை வற்புறுத்துவதற்க்காகவும் இலங்கையினுள் "பொதுமக்கள் சுற்றுலாவொன்றை" ஆரம்பிப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தேசிய வளங்களையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஒன்றியத்தின் தலைமையில் இவ் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.




ஈராக்கில் இருந்து ராணுவத்தை வாபஸ் பெறும்படி புஷ்சை வற்புறுத்தி முன்று லட்சம் அமெரிக்க மக்கள் செப்றம்பர் மாதத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் காட்சியை காணலாம்.

# கியூபாவிற்கு எதிரான தடையை நீக்க ஐ.நா.சபையில் 182 நாடுகள் தீர்மானம்

கடந்த நவம்பர் மாதத்தில் இடம் பெற்ற ஐ.நா.சபையின் பொதுக் கூட்டத்தில் கியூபா மீது அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பொருளாதார வர்த்தக நிதி தடையை நீக்குமாறு கோரும் தீர்மானத்தை 182 நாடுகள் ஆதரித்து வாக்களித்துள்ளன. 191 அங்கத்துவத்தைக் கொண்ட ஐ.நாடுகள் சபையில் மேற்படி தீர்மானத்தை அமெரிக்கா, இஸ்ரேல், பலாஊ, மாஷல் தீவுகள் ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே எதிர்த்தன. இவ்வாறு ஏகப்பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட மேற்படி தீர்மானம் ஐ.நா. சபைக்கு முதற் தடவை அல்ல, இது 14வது தடவையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அமெரிக்கா இப் பெரும்பான்மை தீர்மானத்தை உதாசீனம் செய்து தனது கியூபா மீதான ஏகாதிபத்தியத் திமிரைக் காட்டியே வருகின்றது. அமெரிக்காவின் இப்பொருளாதார வர்த்தக நிதி தடையானது கடந்த 45 வருடங்களாக கியூபா மீது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் கியூபா நாடும் அதன் மக்களும் பாரிய நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் எதிர் கொண்ட போதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முன் அடி பணியாது தமது சொந்தக் கால் களில் எழுந்து நின்று சோஷலிச நிர்மாணத்தின் ஊடாக செயலாற்றி வருகின்றனர். இதற்கு கியூப கம்யூனி ஸ்ட் கட்சியும் அதன் தலைவரும் நாட்டின் ஜனாதிபதியுமான தோழர் ஃபிடல் காஸ்ரோ வழி காட்டி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். அவரைக் கொல்வதற்கு அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. சுமார் 45 தடவைகளுக்கு மேல் முயற்சி எடுத்தது. ஆனால் நிறைவேற்ற முடியவில்லை. அண்மையில் காஸ்ரோ விற்கு கடுமையான நோய் ஏற்பட்டிருப்பதாக கதை கட்டிக் கொண்டது சி.ஐ.ஏ. ஆனால் அதன் பின்பே அண்மையில் தோழர் ஃபிடல் காஸ்ரோ ஹவானா பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நின்ற நிலையில் ஐந்து மணிநேரத்திற்கு மேல் நீண்ட முக்கிய உரையினை ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அவருக்கு தற்போது வயது 79 ஆகும். அமெரிக்க ஏகாதி பத்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சிற்கும் ஃபிடல் காஸ்ரோ சிம்ம சொப்பனமாகவே இருந்து வருகின்றார்.

### தணிந்து மூண்டு......

8ம் பக்க தொடர்ச்சி........

அமைப்புக்கள் என்பனவும் அரசாங்கத்தினரின் பெருஞ் செலவில் பொலிஸ் ஆதரவுடன் ஜார்கண்ட் உட்பட்ட மாநிலங்களில் நிறுவப்படுகின்றன. இது போன்ற முயற்சிகள் வியற்நாம் முதல் எல்சலவடோர், நிக்கரஹறஹீவா ஊடாக கொலம்பியா வரை மேற்கொள்ளப்பட்டு நேரெதிரான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன. இதில் வினோதமென்னவென்றால் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதனை அவர்களது உரிமை மீறல் என்று ஆரவாரம் செய்யும் இந்தியாவின் பொலிஸ்படை மாஓவாத கம்யூனிஸ்ற் கட்சிப் போராளிகளை எதிர்த்துப் போராட 12 வயதுப் பையனுக்கு ஏ. கே. 47 துப்பாக்கிப் பயிற்சி கொடுப்பதைப்பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளுவது தான்.

புரட்சி என்பது ஒரு நாட் கூத்தல்ல. ஒரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டியெழுப்புவது பல நெளிவு சுழிவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் எதிர்கொண்டேயாக வேண்டும். எனினும் இன்றைய தென்னாசியச் சூழல் உற்சாகமூட்டுவதாயுள்ளது. நேபாளத்தில் முடியாட்சிக்கு எதிரான மாஓ வாதக் கம்யூனிஸ்ற்றுக்களின் வெற்றிகரமான ஆயுதப் போராட்டமும் முடியாட்சிக்கு எதிரான ஒரு பெரிய பரந்துபட்ட முன்னணி உருவாகியுள்ளதும் இந்தியப் போராளிகட்கு மேலும் ஊக்கமளித்துள்ளது. இந்த வளர்ச்சியை வெற்றிப் பாதையிற் கொண்டு செல்வதானால், மக்களின் ஆயுதமேந்திய, போராட்டப் பாதை பரந்துபட்டளவில் ஏகாதிபத்தியம்- மேலாதிக்கம்- பெரு முதலாளிய- நிலவுடைமை வர்க்கங்கள் என்ற ஒடுக்குமுறைக் கூட்டணிக்கு எதிரான மக்கள் ஐக்கிய முன்னணியாகி வலுப்பெற வேண்டும்.

நக்ஸல்பாரி இயக்கத்தினின்றும் பின்னையகாலத் தோல்விகளினின்றும் அவற்றினின்று மீளும் முயற்சிகளினின்றும் மாக்ஸிய லெனினிய வாதிகள் கற்றுள்ள பாடங்கள் வீண் போகமாட்டாது.

டிசம்பர் 2005 புதிய பூமி 11

# மறைந்த சுந்தர ராமசாமி மாக்ஸிய விரோதிகளின் இலக்கிய விக்கிரகம்

சுந்தர ராமசாமியின் சாவையடுத்து அவரது ஆளுமை பற்றியும் தனிப்பட்ட பண்புகள் பற்றியும் பலர் எழுதியுள்ளனர். பொதுவாக ஒரு படைப்பாளி என்ற வகையிலேயே அவரைப் பற்றிய மதிப்பீடுகளும் விமர்சனங்களும் இது வரை முன்வைக்கப்பட்டாலும் அனைத்தினூடும் தவிர்க்கவியலாத படி ஒரு சமூக அரசியல் நோக்கு இழையோடுவதையும் நாம் காணலாம். அவரை மெச்சுகிறவர்களும் அவர் மெச்சுகிறவர்களும் சில முக்கியமான கருத்தொற்றுமைகளைக் கொண்டிருப்பதை நாம் காணலாம். அக் கருதொற்றுமைகட்கு ஆதாரமான அர்சியல் ஆழமானது மாக்ஸிய விரோதம் அதன் ஒரு முக்கியமான அடையாளம். அதே வேளை எல்லா வலது சாரிகளும் அவரை மெச்சியதில்லை. எல்லா இலக்கியத் தூய்மைவாதிகளும் அவரை மெச்சியதுமில்லை. எனினும் அவரை மிகவும் மெச்சுவோரிடையே குறிப்பாக ஈழத்துப் படைப்பாளிகளிடையேயும், வாசகர்களிடையேயும், பரவலாக உள்ள மாக்ஸிய விரோத வன்மம் தற்செயலானதல்ல.

சுந்தர ராமசாமியை ஒரு இலக்கியச் சிகரம் என்று சிலர் எண்ணத் தூண்டப்பட்டிருக்கலாம். அவர்களிற் சிலர் அவரே அதி உயர்ந்த சிகரம் என்று நம்பவும் விரும்பலாம். அவர் பல நல்ல சிறுகதைகளை எழுதியிருக்கிறார். அவரது கதை சொல்லும் ஆற்றலும் தெளிவான, நெகிழ்வான மொழிநடையும் வாசிப்புக்குத் துணைசெய்வன. மனித நடத்தை பற்றிய கூரிய அவதானிப்பு அவரது எழுத்தில் அடையாளம் பெறுகிறது. எனினும் அந்த அவதானிப்பு பக்கச் சார்பற்ற, அரசியலற்ற அவதானிப்பல்ல. அவர் எழுதிய மூன்று நாவல்களில் முதலாவதான 'ஒரு புளியமரத்தின் கதை' ஒரு ஊரில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய ஒரு பதிவு. அதுவே அவரது சிறந்த படைப்பெனலவாம். அவரது அர சியலை மிகவும் தெளிவாக முன்வை த்ததும் படைப்பு வடிவத்தில் வழ மைக்கு மாறுபட்டும் அமைந்த "ஜே. ஜே. - சில குறிப்புக்கள்" பற்றிய விமர்சனங்களில் ஒவ்வொரு விமர்சகரும் தமது அரசியலை அடையாளப்படுத்தினர் என்றால் மிகையாகாது. சுந்தர ராமசாமியின் அரசியலை அடையாளங்காட்டிய சில விமர்சனங்கள் அவரது எழுத்தின் நேர்மையைக் கேள்விக்குட்படுத்தின. அவ்வாறான விமர்சனங்களை அரசியல் நோக்குடையனவாக அவரும் அவரது நெருங்கிய ஆதரவாளர்களும் புறந்தள்ளிய போதும், எழுப்பட்ட கேள்விகட்கு நிறைவான பதில் இது வரை கிடைத்ததில்லை. இறுதியாக வெளியான "ஆண்கள், பெண்கள், குழந்தைகள்" என்ற நாவல் அவரது சிறுபராய வாழ்வின் பதிவாகவே பலராலும் கொள்ளப்படுகிறது. குறிப்பிடத்தக்களவு நல்ல படைப்பு எனினும், அவரைத் தமிழகத்தின் சிறந்த ஒரு நாவலாசிரியராக்குவதற்கு அது உதவியதாகச் சொல்ல மாட்டேன்.

கவிஞர் என்ற வகையில் அவர் வெகு சராசரியான ஒரு கவிஞரே. இதை அவரே ஏற்றுக் கொண்டுள்ளார். இங்கே தான் அவரது உரைநடை கவித்துமானது, வாசிக்கக் கவிதை போல இருக்கும் என்று விளம்பரம் செய்கிறவர்களது சிந்தனைக் கோளாறு தெளிவாகிறது.

இலங்கையில் சுந்தர ராமசாமிக்குக் கிடைத்தள்ள முக்கியத்துவத்தின் பெரும் பகுதி அவரது ஜே.ஜே சில குறிப்புக்களுக்குப் பிற்பட்டது. அதற்கு முன்பு அவர் அறியப்பட்டிருந்த அளவுக்குப் பேசப்பட்ட படைப்பாளியாக இருக்கவில்லை. அதை விட முக்கியமாக சமூகச்சார்பான, சமூக மாற்றத்துக்கான இலக்கிய நிலைப்பாடுகளை மறுக்க இலக்கியத் தூய்மைவாதத்தை ஒரு ஆயுதமாக உயர்த்தியவர்கட்கு வெங்கட்சாமி நாதனின் வெறுமை அம்பலமாகிப் போன பிறகு சுந்தர ராமசாமியின் உறவும் ஆசிகளும் மிகவும் பயன்பட்டன. அனைத்தினும் முக்கியமாக இலக்கியம் பற்றிய அவரது பிரகடனங்களை இவர்களிற் பலர் இலக்கியத்தின் அளவுகோல்களாகவும் கருதத் தலைப்பட்டனர். உண்மையில் சுந்தர ராமசாமியின் பயன்பாடு, அவரை ஒரு இலக்கியச் சிகரமாக உயர்த்தி அதன் மூலம் இலக்கியம் பற்றிய அவரது வரையறுக்கப்பட்ட பார்வையைப் பயன்படுத்துவதாகவே இருந்துள்ளது.

படைப்பாளிகளை வகைப்படுத்தி, உயர்ந்த படைப்பாளிகள் எனப்படுவோரை, ஒரு குறுகிய வட்டத்திற்கு உட்பட்டு, உண்மையைத் தேடுகிற



ஞானியராக்குவதும் அதன் துணை விளைவாய் தங்களையும் அந்த அபூர்வப் பிறவிகளுக்குள் சேர்த்துக் கொள்வதும் புதிய உபாயங்களல்ல. இவர்கள் இப்படி யார் யாரை அங்கீகரிக்கிறார்கள், ஏன் அங்கீகரிக்கிறார்கள், எத்தகைய தகுதிகளை வழங்குகிறார்கள் என்பதைக் கவனித்தால் எல்லா அங்கீகாரங்களுக்குள்ளும் தனிப்பட்ட கோபதாபங்களும் போட்டி பொறாமைகளும், உபகாரம் பிரதி உபகாரங்களும் மறைந்திருக்கக் காணலாம்.

சுந்தர ராமசாமியால் வெங்கட்சாமி நாதனின் அபத்தங்களைச் செல்லமாகக் கண்டிக்க முடிந்தளவு சாமிநாதனின் வன்மத்தை விமர்சிக்க மனம் வந்ததில்லை. இங்கே இலக்கியத்தின் அரசியல் மட்டுமில்லாமல் தனிப்பட்ட நட்புக்கும் ஒரு பங்குண்டு. காலச்சுவடு சஞ்சிகையின் மீள்பிறப்பும் வணிக எழுச்சியும் அந்த நிறுவனத்தின் மூலம் இளைய தலைமுறைப் படைப்பாளிகளை வேண்டிய போது தட்டிக் கொடுக்கவும் புறக்கணிக்கவும் வாய்ப்புக்களை உருவாக்கியது. மொழி பெயர்ப்பின் செம்மை பற்றி வற்புறுத்துகிற சுந்த ராமசாமி தனக்கு நெருக்கமான சிலரது குழறுபடியான மொழிபெயர்ப் புக்களை அறிந்தும் அறியாதது மாதிரி மெச்சியிருக்கிறார். சேரன் இலங்கையின் தலை சிறந்த கவிஞராகத் தெரிவதற்கு அவருடைய கவியாற்றலை விடக் காலச்சுவட்டுடனான நெருக்கத்துக்குப் பெரிய பங்கு இருக்கிறது.

இது தமிழக இலக்கியச் சூழலுக்கு ஒன்றும் புதியதல்ல. தமிழகத்துச் சிற்றேடுகளின் இலக்கிய அரசியலின் தொடர்ச்சியாகவே காலச்சுவடு செயற்படுகிறது. சுந்தர ராமசாமி இடையிடையே கம்யூனிஸ்ற் கட்சிகள் பற்றி நல்ல வார்த்தைகள் நாலு சொன்னாலும், அவரது எழுத்தை ஊன்றிக் கவனித்தால் அவரது அக்கறை சமூக மாற்றம் பற்றியது இல்லை எனவும் அதிலும் முக்கியமாகச் சமூக மாற்றத்திற்கான செயற்பாடும் அதில் இலக்கியத்தின் பங்கைப் பற்றியதும் இல்லை எனவும் விளங்கும். சமூகத்தில் நடக்கிற பலவேறு தவறுகளையும் சீரழிவுகளையும் காணுகிற ஒரு படைப்பாளி, அவற்றின் வேர்கள் பற்றி ஆழமாகத் தேடாமல் அவற்றைக் களைவது படைப்பாளிக்குத் தேவையற்றது என்று கூறுவாரானால் அவர் நிச்சயமாக சமூக அக்கறையுள்ள ஒரு படைப்பாளியல்ல. இது தான் செய்யத் தவறுவதை மற்றவர்கள் செய்யாமல் மறிக்கிற ஒரு செயலுங்கூட.

கூட்டு முயற்சிகள் பற்றி மிக ஏளனமாகவும் சுந்தர ராமசாமி எழுதியிருக்கிறார். ஒரு ஓவியத்தை எப்படிக் கூட்டாக வரையலாம் என்று கிண்டல் செய்திருக்கிறார். உண்மையில் உன்னதமான கூட்டுப்படைப்புக்களான ஓவியங்கள் சென்ற நூற்றாண்டில் வந்துள்ளன. கூட்டு முயற்சியாகவே கவிதைப் பட்டறைகளை உருவாக்கியவர் நிக்கராஹுா வாவின் ஏர்னெஸ்றோ கார்தினால் என்ற வத்திகானால் மதகுருப் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பாதிரியார். அவர் போன்றோருக்குத் தங்களின் உலக உன்னதம் பற்றிய மயக்கங்களை விடச் சக மனிதரை உயிர்ப்பிப்பது முக்கியமானது.

எதையும் எழுது என்று ஒரு படைப்பாளியைக் கேட்பது சுந்தர ராமசாமிக்கு ஏற்க இயலாதது. ஒருவர் இன்னொருவரை ஏன் கேட்கிறார் என்பது பற்றிய அக்கறை அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இது அவர் மெச்சி ஊக்குவிக்கும் தனிநபர் வாதத்தின் ஒரு வெளிப்பாடு தான். ஒரு கட்டுரையில் ஒரு சிறுகதையை மெச்சி எழுதியிருந்தார். அக்கதையில் மிகவும் இக்கட்டான நிலையில் இருந்த ஒருவனுக்குத் தென்பை அளித்த ஒரு உண்மையான தகவல் இடம் பெற்றது. உதைபந்தாட்டப் போட்டியில் தன் தரப்பு சரியாக விளையாடாததால் 'கோல் கீப்பர்' தானே பந்தை உதைத்துக் கொண்டு போய் ஒரு கோல் அடித்துத் தன் தரப்பை வெற்றி பெறச் செய்த சம்பவம் இது. சுந்தர ராமசாமியை அக்கதை மிகவும் கவர்ந்தது. ஒரு வகையில் இது இலக்கியம் பற்றியும் ஒவ்வொரு சமூகத் துறை பற்றியும் அவரது பார்வையின் வெளிப்பாடாக இருக்கலாம்.

மனித சமூக வாழ்க்கை என்பது தனி மனித வீரசாகசங்களாலானதல்ல. தனி மனிதர்கள் இடையிடையே, உண்மையில் அரிதாகவே, தனிமனிதர்கள் சமூகத்தின் சார்பாக இத்தகைய வெற்றிகளை ஈட்டுகின்றனர். பல சமயங்களில் தனி மனிதச் சாதனைகளின் பின்னாலுள்ள கூட்டு முயற்சி யாருக்கும் தெரியாதபடி மறைக்கப்பட்டு விடுகிறது.

எந்தக் கருத்தையும் வற்புறுத்தாமல் படைப்பாளி எழுத வேண்டும் என்ற தூய அழகியல்வாத நிலைப்பாடு இன்னொரு.விதமாகப் படைப்பாளி மீது நிர்ப்பந்தங்களைத் திணிக்கிறது. ஒரு கருத்தை வற்புறுத்துவதற்கு ஒரு படைப்பாளி வலிந்து எதையும் புனைய வேண்டியதில்லை என்பதை இந்தத் தூய்மைவாதிகள் ஏற்கத் தயாராக இல்லை. மறுபுறம், சில வகையான பிரசாரங்கள் இவர்களுக்கு உறுத்துவதில்லை. வேறு சில வகையானவை மிகவும் உறுத்தும். சுந்தர ராமசாமிக்கு மாக்சியம் பற்றிய கிறக்கம் கலைந்து 'தூய கலை இலக்கியப்' பார்வை அவரை ஆட்கொண்ட காலத்தில் தான் "என் கவுண்டர்" போன்ற ஏடுகள் மூலம் வலது சாரிகள் தீவிரமாகத் தூய இலக்கியப் பிரசாரம் மேற்கொண்ட காலம். அந்தக் குழிபறிப்பு அரசியலின் முகவர்களில் ஒருவரான ஸ்ற்றீ·பன் ஸ்பென்டர் இறுதிவரை சுந்தர ராமசாமியின் அபிமானத்துக்குரியவர். சுந்தர ராமசாமியால் புதுமைப் பித்தனின் அரசியற் பார்வையை வடிகட்டி ஒரு தூய இலக்கியவாதியாக முன்னிறுத்த முடிவதும் வெறுமனே தூய இலக்கியம் பற்றிய அபிமானத்தாலா தூய்மைக் கோட்பாட்டைக் கொண்டு இன்னொரு அரசியலை வற்புறுத்தும் நோக்கத்தாலா என பதில் என் ஐயங்கள் அண்மைக் காலங்களில் வலுத்துள்ளன. எனினும் அ.மார்க்ஸும் தீராநதி போன்ற ஏடுகளும் வேறு சிலரும் வலிந்து நோக்கங் கண்டுபிடிப்பதன் மூலம் சுந்தரராமசாமியின் உண்மை யான அரசியலைக் காணாது விடுகின்றனர். அந்த அரசியல், அவரது நெருங்கிய அபிமானிகள் பலருக்குத் தெரியும். அதனாலேயே அவர்கள் அவரது அபிமானிகளாக இருந்து வருகின்றனர். மற்றப்படி, அவரது படைப்பாற்றல் அவர்கட்கு ஒரு வசதி மட்டுமே.

—சிவா—



பேராசிரியர் க.கைலாசபதியின 23வது வருட நினைவாக

# அரசியல் நாவல் என்றால் என்ன?

அரசியல் என்னும் சொல்லைக் கேட்டவுடனேயே அஞ்சிப் பதைபதைத்து அது இலக்கியத்திற்குப் புறம்பானது என எவரும் அஞ்ச வேண்டியதில்லையென்றே நான் நினைக்கின்றேன். அரசியல் என்று கூறும்போது நாம் பொதுவாகக் கருதுவது என்ன? சில அரசியற் கருத்துக்களையே நாம் கருதுகிறோமல்லவா? மனித உணர்ச்சியையும் ஒழுக்கத்தையும் பிண்டப் பிரமாணமாகச் செறிவுடன் காட்டும் நாவலானது, அரசியற் கருத்துக்களையும் காட்டுவது தவிர்க்க முடியாததாகின்றது. உணர்ச்சியும் அனுபவமும் மனிதனது இதயத்திற்கு நெருங்கியவை. அரசியற் கருத்துக்களோ யாவருக்கும் பொதுவானவை. வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையனவல்ல என்று சிலர் கருதக் கூடும். ஆனால் அத்தகைய கருத்துச் சரியானதா என்று சிறிது சிந்தித்துப் பார்த்தல் தகும். நமது காலத்திலே அரசியற் கருத்துக்களும் சித்தாந்தங்களும் எத்தனையோ மனித உள்ளங்களிலே ஆழ்ந்த உணர்ச்சியைக் கிளறிவிட வல்லனவாயுள்ளன. எத்தனையோ மக்களின் குணங்களை நிச்சயிப்பனவாயிருக்கின்றன. எனவே, நேர்மையோடு சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கும் எந்த ஓர் எழுத்தாளனும் அரசியற் சித்தாந்தங்களைப் புறக்கணிக்க முடியாது. ஆனால், அரசியற் கருத்துக்களை நாவலிலே கையாள்வது சுலபமான காரியமன்று. கருத்துக்களை ஒரு நாவலாசிரியன் "தனது" கருத்துக்களாகக் கூற முற்பட்டால்தான் கலைப்பண்பு சீரழிகிறது. ஆனால் அதே கருத்துக்கள் பாத்திரங்களின் புற உலகத்திலே தோன்றி அக உலகத்திலே ஒன்றிவிடும் பொழுது அவற்றைப் பிரித்தெடுப்பது கடினம். பாத்திரங்களின் உணர்ச்சியோடு அவை இரண்டறக் கலந்துவிடின் அதுவே சிறந்த பண்பாகிறது. கருத்துக்களைக் கருத்துக்களாகக் காணாமல் பாத்திரங்களின் வாழ்க்கை நிலையிலே தோன்றும் வாழ்க்கைத் தத்துவமாகக் கண்டால் நாவலாசிரியன் வெற்றியடைகின்றான். இன்றைய நாவலாசிரியனை எதிர் நோக்கும் முக்கியமான வில்லங்கங்களில் ஒன்று இந்தச் சிக்கலே. கருத்துக்கள் எங்கிருந்தோ வந்து புகுந்து பாத்திரங்களைப் பற்றிக் கொள்வதாக இருப்பின் அவை சிறப்பாக அமையா. அன்றி அவை தாமாகவே பாத்திரத்திற்கும் சமுதாய உறவுகளுக்குமிடையேயுள்ள தொடர்பிலே- மோதலிலே- முரண்பாட்டிலே- இயல்பாகத் தோன்றுவனவாக இருப்பின் அவை மிக்க வலிமையுள்ளனவாக விளங்கும். சுருங்கக் கூறின் அரசியல் நாவலிலே சித்தாந்தங்கள் ஊனும் உயிரும் பெற்று உயிர்த்துடிப்புள்ள மனித பாத்திரங்களாக மாறி விடுகின்றன. இந்தத் துறையிலேயே அமைந்துள்ளது இளங்கீரனின் சில நாவல்கள். அவர் இத்துறையில் பூரண வெற்றி பெற்றுள்ளார் எனக் கூறல் முடியாது. ஆயினும் காலத்தின் அறைகூவலை ஏற்றுத் தன்னாலான வன்மையைக் காட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

அரசியற் சார்புள்ள நாவலைப் பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வதற்கு இந்நூலிலே வரும் அன்சாரி என்னும் பாத்திரத்தை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். இந்தக் காலத்திலே "சமூக நாவல்" என்றொரு தொடரையும் இலக்கிய விமர்சகர் அடிக்கடி உபயோகிப்பர். தற்காலத்திலே எழுதப்படும் தமிழ் நாவல்கள் யாவுமே சமூக நாவல்கள் என்ற பெயராலேயே வழங்கப்படுகின்றன. எனினும் உண்மையான சமூக நாவல்கள் நமது காலத்திலே தோன்ற முடியுமா என்ற ஐயம் எனக்குண்டு, சமுதாய நாவல் எழுதுபவர்கள் சமுதாயம் நிலையாகவும் உறுதியாகவும் இருப்பதாகக் கருதிக் கொண்டே அச்சமுதாயத்திலே காணப்படும் மக்களின் ஒழுக்கத்தை நுணுக்கமாக அலசிக்காட்ட முனைகின்றனர். சமுதாய உறுதிப்பாடின்றிச் சமுதாய நாவல் எழுதல் முடியாது. ஆனால், அத்தகைய நிலைபேறுடைமை சமுதாயங்களுக்குக் கிடைப்பது அரிது. ஒரு சில காலங்களிலே சமுதாயம் அமைதியாகச் சலனமற்றிருப்பது போலத் தோன்றும். இங்கிலாந்திலே அவ்வாறு தோன்றிய ஒரு காலப்பகுதியிலே வாழ்ந்த புகழ் பெற்ற நாவலாசிரியை ஜேன் ஒஸ்தின் அற்புதமான சமூக நாவல்களை எழுதினார். ஆனால் சமுதாயங்கள் பெரும்பாலும் ஈடாடிக் கொண்டேயிருப்பன. இந்நிலையில் சமுதாயத்தில் அக அமைப்பை விட முழுச் சமுதாயத்தின் எதிர்காலம் என்ன என்னும் கேள்வியே பலருடைய மனதிலே உதிக்கும். நடைமுறை வழக்கத்திலுள்ள சமுதாய ஒழுக்கத்தைவிட்டுப் பொதுவாகச் சமுதாயத்தின் நலம் பற்றி ஒருவர் சிந்திக்கும் பொழுதும் அச்சிந்தனை அவரின் உணர்விற் கலந்து பல முனைப்பட்ட உணர்ச்சிகளை எழுப்பிவிடும் பொழுதும் அவர்கள் அறிந்தோ அறியாமலோ ஏதாவதொரு அரசியற் சித்தாந்தாத்திலோ, கோட்பாட்டிலோ நம்பிக்கை கொண்டு அதனுடன் ஐக்கியமாகி விடுகின்றனர். சமுதாயத்திலே முரண்பட்டுப் போராடிக் கொண்டிருக்கும் பிரிவுகளில் ஒன்றைச் சார்ந்து தமது ஆதரவை அதற்கு அளிக்கின்றனர். சதா இயங்கிப் பொருதிக் கொண்டிருக்கும் சமுதாய அமைப்பிலே நடுநிலைமை வகிப்பதென்பது மரணத்திற்குச் சமானம். எனவேதான் தமது அரசியற் சித்தாந்தத்திற்கிடையே ஏதாவது ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த தமது ஆதரவை அதற்கு நல்குகின்றனர். அன்சாரி என்னும் பாத்திரத்தின் வாயிலாக நாம் இம்மகத்தான உண்மையை உணரலாம். உழைப்பாளிகளின் வர்க்கத்தைச் சார்ந்த அவன் பூரண பிரக்ஞையோடு பாட்டாளிகளின் சார்பில் போராடிக் கொண்டிருக்கின்றான். இதுதான் அரசியல் நாவலின் அடிப்படை அமிசாமாகும்.

(தமிழ் நாவல் இலக்கியம் என்னும் நூலில் இளங்கீரனின் நீகேள் நாவல் பற்றி க.கைலாசபதி பக் 215-217)

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
புதிய பூமி Puthiya Poomi
சுற்று12 டிசம்பர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 86

## சுனாமிப் பேரழிவின் ஒருவருட துயர நினைவு

*கடந்த வருடம் டிசம்பர் 26ம் திகதி இடம் பெற்ற சுனாமிப் பேரழிவினால் உயிரிழந்த அனைத்து மக்களினதும் துயர நினைவுகளை அவர்களது உற்றார் உறவுகளுடன் இணைந்து பகிர்ந்து கொள்கின்றோம் அதே வேளை அப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளால் இருப்பிடங்கள் வாழ்வாதாரங்களை இழந்து இன்றும் அவதியுற்றுவரும் லட்சக்கணக்கான மக்களுக்கு உரிய புனரமைப்பு புனர்வாழ்வு புனர்நிர்மாணம் முழுமையாக வழங்கப்படுவதை வற்புறுத்துகின்றோம்.*

*- ஆசிரியர் குழு -*

# ஐக்கிய தேசியக் கட்சியின் ஒட்டுண்ண்ணிகள் படும்பாட்டை பாருங்கள்!

சுவரிலிருந்து விழுந்த பல்லிகள் உடனே அசையாது அதிர்ச்சியில் விழுந்த இடத்திலே குறிப்பிட்ட நேரத்திற்கு இருப்பதுண்டு. அதே போன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்ஹ தோல்லியடைந்தவுடன் அவருக்கு ஆதரவளித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி போன்றன செய்வதறியாது திகைத்து இருக்கின்றன. அக்கட்சிகளின் தலைவர்கள் எப்போதும் எம்.பியாகவும், அமைச்சராகவும் இருப்பதை அவர்களின் ஏகபோக உரிமை என எண்ணிக் கொண்டே இருப்பதால் பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர். இருந்தாலும் தம்மை சுதாகரித்துக் கொண்டு ஏதாவது வழியில் பதவி தேட முயற்சிப்பார்கள். அனுபவித்த கைகால்கள் சும்மா இருக்கமாட்டா.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்று விடுவார் என்ற அதீத நம்பிக்கையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஒட்டுண்ணிகள் தோல்வியைத் தாங்க முடியாது கண்டபடி பிதற்றிக் கொண்டிருக்கின்றன. அப்பிதற்றங்களில் அக்கட்சித் தலைவர்களில் குறுகிய நோக்கங்கள், பம்மாத்துக்கள், வக்கிரங்கள் போன்றன தாராளமாகவே வெளிப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்கு தாங்கள் காரணமில்லை என்று கூறும் கட்சிகள் ஏனைய கட்சிகளே காரணம் என்கின்றன.

மலையக மக்கள் முன்னணியின் தலைமையை கடுமையாகச் சாடும் மேல்மாகாண மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஐக்கிய தேசியக் கட்சியின் தவறுகளாலேயே ரணில் விக்கிரசிங்ஹ தோல்வியடைந்தார் என்று ஆணித்தரமாக கூறுவதை தவிர்த்துக் கொண்டு மலையக மக்கள் முன்னணியின் தலைமையின் தவறே காரணம் என்று அழுத்திக் கூறுகிறார். பதிலுக்கு மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணியை கடுமையாகச் சாட்டியுள்ளது.

இவ்வாறு தோல்வியை அடுத்து செய்வதறியாது பிதற்றிக் கொண்டிருப்பதுடன் புதிய ஜனாதிபதியுடன் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் நட்புப் பாராட்டி வருகின்றனர். அவருடைய அரசாங்கத்தில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்ள படாதபாடு படுகின்றனர்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வென்றவர்களுக்கு பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் இடம் கிடைக்குமா என்பது சந்தேகம். அதனால் ஐக்கிய தேசியக் கட்சியிடமும், மஹிந்தவிடமும் மாறி மாறி வித்தியாசம் வித்தியாசமான முகங்களைக் காட்டி கொண்டிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்ஹவின் தோல்வியை அடுத்து எதிர்பார்த்த அரசுப் பதவிகள், அமைச்சுப் பதவிகள் இல்லை என்பதுடன் அடுத்தொரு பொதுத் தேர்தல் நடந்தால் என்ன செய்வதென்பது பாரிய பிரச்சினையாகியுள்ளது.

இ.தொ.கா, ம.ம.மு, மே.மா.ம.மு, மு.கா. ஆகிய உண்மையில் மலையக மக்கள் முஸ்லீம் மக்கள் நலன்களுக்காகத் தான் பதவிகள் பட்டங்கள் பெற்றிருக்கிறார்களா? அல்லது திரை மறைவில் சொத்து சுகம் தேடுவதற்கா? என்பதை தற்போதைய அவர்களது அவல நிலை எடுத்துக்காட்டுகின்றது.

**மலையகத்தில் ............**

1ம் பக்க தொடர்ச்சி.......

என்று கூறி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தே கடந்த ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி பேரணி நடத்தப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட அந்த அதிகாரிகளுக்கு எதிராக அரசியல் பயிலுநர்கள் சாட்சியங்களைச் சமர்ப்பித்திருந்த போதும் இதுவரையும் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் கையாடிய அரச சொத்திற்கும் பதில் இல்லை.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் ஆர்ப்பாட்டப் பேரணியில் சென்றவர்களுக்கு எதிராகவே தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது என்ன நியாயம். கள்ளனை விட்டு துரத்தியவனைப் பிடிப்பது போன்றதாகும்.

மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் சமூகம் சார்ந்த அக்கறைகளுக்கும் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி அவசியமானதாகும். அது பாதுகாத்து வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

அதற்காக ஓட்டுப் பொறுக்கிகளும் தொழிற்சங்க வாதிகளும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதில்லை. அடக்கு முறையாளர்களுக்கு துணைபோகும் அவர்களால் அக் கல்லூரியை பாதுகாக்க முடியாது.

அவர்களுக்கு அப்பால் சமூக அக்கறை கொண்ட அனைவரும் அணி திரண்டு அக்கல்லூரியில் நிலவும் குழப்பங்களையும் அமைதியீனத்தையும் போக்கவும் அக்கல்லூரியை பாதுகாக்கவும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மலையகத் தமிழ் மக்களுக்கென அமைக்கப்பட்ட அக்கல்லூரி பல பேரினவாத சதிகளாலும் அவற்றுக்கு துணை போகும் மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்களாலும் அமைதியற்று இருக்கிறது. அதனை மீட்டெடுத்து அங்கு அமைதியை நிலை நாட்ட அக்கறையுள்ள அனைவரும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும். இதனைச் சாட்டாக வைத்து மலையகத்தில் அமைதி குலைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

**புதிய ஜனாதிபதி.............**

1ம் பக்க தொடர்ச்சி.....

திட்டங்களை முன்னெடுப்பது இலகுவான விடயமல்ல. அத்துடன் சமாதானம் நிலைநாட்டப்படாதவரை பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. பழைய ஜனாதிபதிகள் போன்று சமாதானம் நிலைநாட்டப்படாதபடியால் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்று கூறி பொருளாதாரப் பிரச்சினைகளை உக்கிரமடைய விடுவதும் பாதகமான சூழ்நிலைகளையே ஏற்படுத்தும்.

சமாதான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து முன்னெடுக்கப் போவதாக மஹிந்த சிந்தனை என்ற அவரது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பதவி ஏற்கும் போது அவர்கள் ஆற்றிய உரையிலும் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையிலும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு ஆற்றிய உரையிலும் கூறியிருந் தாலும் தமிழ் மக்களின் சுயாட்சி, சுயநிர்ணய உரிமை சமத்துவம் என்பவற்றை அங்கீகரிக்கும் அடிப்படை நோக்கு அவரிடமில்லை. இவ் வெளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தீர்வுத் திட்டததை சமரப்பிக்கும் படி ஜனாதிபதி மஹிந்தவிற்கு குறுகியகால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுத் திட்டத்தை உரிய காலத்தில் முன் வைத்து பேச்சுவார்த்தைக்குசெல்லும் நிலையில் ஜனாதிபதி இல்லை என்பது உணரக் கூடியாதே. ஜே.வி.பி ஹெல உறுமய என்பவற்றுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவர் செய்து கொண்ட ஒப் பந்தங்கள் அதற்கு இடமளிக்காது. அவரது கோட்பாடான ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பங்கீடு என்பது எப்படி சாத்தியமாகப் போகிறது. அவர் தீர்வுத் திட்டம் எதுவுமில்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் எண்ணத்தை கொண்டுள்ளார் என் றே நம்ப இடமுண்டு. தெற்கில் அரசி யல் கட்சிகளின் மாநாட்டைக் கூட்டி பொது இணக்கப்பாட்டுடன் தீர் வொன்றை முன் வைக்கப் போவ தாகவும கூறுகிறார். அதற்குப் பின்பே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் திற்கு அதனை சமர்ப்பிப் பாராம். இவை நடைமுறைக்கு ஒத்துவராத காலத்தால் கழிக்கப்பட்டு போன விட யங்களாகும்.

சமாதான நடவடிக்கைகளினாடாக அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும இலங்கையின் ஜனாதிபதியாக இருக்கும் மஹிந்த அவற்றுக்கு எதிராக செயற்படும் அரசியல் கொள்கையையோ நடைமுறையையோ உறுதியான தளத்தில் கொண்டிருக்கவில்லை. ஆசிய நாடுகளுடன் நெருங்கிய உறவை வளர்க்கப் போவதாக கூறுனாலும் ஏற்கனவே இருக்கும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று வெளிநாட்டு இரா ஜதந்திரிகளுக்கு உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்தியாவின் கால்களை இறுகப் பற்றிக் கொள்ளும் நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த இருக்கிறார் என்பதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறுவதற்கு எந்த நம்பிக்கையும் இல்லை. இந் நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும் அடக்கப்படும் தேசிய இனங்களுக்ம் அவர்களுக்குரிய புதிய அரசியல் நிலைப்பாட்டிலும் வழிமுறையிலும் நம்பிக்கை வைத்து செயற்படுவதே உரிய மாற்று வழியாகும்.

இவற்றுக்கும் மேலால் சற்றுப் பொறுத்திருந்து யாராவது பார்க்க விரும்பினால் பார்க்கட்டும். குறிப்பாக மஹிந்த சிந்தனை அப்டிபடையில் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் மூன்று மாத காலம் பொறுத்திருந்து பார்ப்போருக்கு போதுமானதாகும்.

## ஜானதிபதியின் கொள்கை விளக்கம் பற்றி புதிய- ஜனநாயக கட்சி அறிக்கை

புதிய இலங்கையைக் கட்டி எழுப்பப் போவதாகப் பதவிக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்குரிய கொள்கை அடிப்படைகள் எதனையும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தனது முதலாவது கொள்கை விளக்க உரையில் முன் வைக்கவில்லை. கடந்த 27 வருடகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த தவறான பொருளாதாரக் கொள்கைகளுக்கு தெளிவான மாற்றுத் திட்டம் எதனையும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன் யுத்தமாக மாற்றப்பட்ட தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு சாதகமான வழிகளில் பேச்சுவார்த்தை சமாதானம் என்பவற்றை நோக்கிச் செல்லக் கூடிய முன் மொழிவுகளையும் புதிய ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை கொண்டிருக்கவில்லை. பழைய விடயங்கள் புதிய பாணியில் மஹிந்த சிந்தனை என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. எனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய சர்வாதிகாரக் கதிரைக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு புதிய பாதையில் பயணிப்பதற்குரிய எந்தவொரு அறிகுறியையும் வெளிப்படுத்தவில்லை என்பதையே அவரது கொள்கை விளக்க உரை எடுத்துக் காட்டியுள்ளது. ஜனாதிபதி புதியவரே தவிர பாதையும் பயணமும் திட்டப் பொதிகளும் பழையனவற்றின் தொடர்ச்சியாகவே இருக்கப் போகின்றன. இந்நிலையில் சகல தரப்பு மக்களினதும் எதிர்பார்ப்புக்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. இவ்வாறு புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது கொள்கை விளக்க உரை பற்றி கருத்து தெரிவித்து புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழுவின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், புதிய ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் முன் வைத்துள்ள தேசிய இனப்பிரச்சினை பற்றிய கருத்துக்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையின் உள்ளடக்கத்திற்குமிடையில் பாரிய இடைவெளியும் நேர் முரணான கருத்துக்களுமே காணப்படுகின்றன. அவ்வாறிந்த போதிலும் யுத்தமல்ல கௌரவமான சமாதானமே தனது வழிமுறை என்ற புதிய ஜனாதிபதி முன்வைத்துள்ள அழைப்புக் குரலை கவனத்தில் கொண்டு புலிகள் இயக்கத்தின் தலைவர் உரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு பந்தை ஜனாதிபதியின் பக்கம் சென்று விழ வைத்துள்ளார். ஆனால் ஒன்றையாட்சி என உரத்துக் கூறிக் கொண்டு தாயகப்பிரதேசம், சுயநிர்ணய உரிமை, சுயாட்சி என்பனவற்றை மறுத்து வரும் புதிய ஜனாதிபதி எவ்வாறு புலிகள் இயக்கத்தின் பந்தைக் கையாளப் போகிறார் என்பது மிக முக்கிய கேள்வியாகும். தன்னைச் சுற்றி நிற்கும் பேரினவாதப் பிசாசுகளின் அழுத்தங்களையும் தடைகளையும் மீறி பழைய நிலைப்பாடுகளைக் கைவிட்டு புரிந்துணர்வு விட்டுக் கொடுப்பு தீர்விற்கான நாட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தையிலும் தீர்விலும் உறுதியாகவும் உளச்சுக்தியோடு செயல்படுவதற்குரிய முதல் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றே கூற வேண்டும். புதிய இலங்கையை அவர் கட்டியெழுப்ப வேண்டுமானால் தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களும் புலிகள் இயக்கமும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வுத் திட்ட யோசனைகளை முன்வைக்க வேண்டும். அதேவேளை தாராளமயம் தனியார்மயத்தால் சின்னாபின்னபடுத்தப்பட்ட நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அர்த்தமுடையதும் நடைமுறைச் சாத்தியமானதுமான மாற்றுத் திட்டம் முன்வைக்கப்படுவது அவசியம். அதன் அடிப்படையிலேயே பொருட்களின் வேகமான விலை உயர்வு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற மக்கள் மீதான பாரிய சுமைகளைக் குறைக்க முடியும். அவ்வாறான முன் முயற்சிகள் இன்றி விவசாயிகளுக்கு உரத்தின் விளையைக் குறைப்பதோ அல்லது தொழிலாளர்களுக்கு ஏதாவது சலுகை வழங்குவதோ அரசாங்க தனியார் ஊழியர்களுக்கு அற்ப சம்பளம் உயர்வைக் கொடுப்பதோ புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப உதவ மாட்டாது என்பதை எமது கட்சி சுட்டிக்காட்டி வலியுறுத்துகின்றது.

ஆதலால் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நிறைவேற்று அதிகாரத்தை நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக சாதகமான வழிகளில் பயன்படுத்த தாயாரானால் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைத்து புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறே தாராளமயம் தனியார்மயம் விளைவித்து வரும் பொருளாதார சமூக பண்பாட்டு ஊடுருவல்கள் நாசங்களைத் தடுத்து நிறுத்த மாற்றுத் திட்டத்தை முன்வைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாதுவிடின் இவை இரண்டுக்குமான மக்களின் வெகுஜனப் போராட்டங்கள் முன் செல்வதை தவிர்க்க முடியாத சூழலே உருவாகும் என்பதையும் எமது புதிய ஜனநாய கட்சி சுட்டிக் காட்டுகின்றது.

**ஜனாதிபதியின் முன்னே.......**

1ம் பக்க தொடச்சி.........

அதேவேளை புலிகளுடனான பேச்சுவார்த்தைக்குரிய ஆரம்பத் தீர்வுத் திட்ட விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்களோ ஆலோசனைகளோ உரிய உயர்மட்டங்களில் இடம் பெற்றதாக அறிய முடியவில்லை. இந்திய ஆலோசனை பெறப்பட்ட பின்பு தான் அவை பற்றிய விடயங்கள் கையாளப்படுமா? அவ்வாறான இந்திய ஆலோசனை வழிகாட்டல் எவ்வாறு அமையப் போகின்றது என்பதும் சிந்திக்க வேண்டியதாகும்.

எனவே ஜனாதிபதி மஹிந்தவின் முன்னெடுப்புக்கள் வெளிப்படைத் தன்மை கொண்ட இதய சுத்தியுடனான சமாதானத்திற்கானவையா? அன்றி சமாதான முன்னெடுப்புக்களின் மறைவில் யுத்தத் தயாரிப்பா? என்றே நோக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் புதிய ஜனாதிபதியின் வரவானது யுத்தத்தை வரவழைக்கும் என்ற பொதுவான கருத்தை இல்லாமல் செய்யும் வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னெடுப்புகள் அமைய வேண்டும். அவர் கூறிய கௌரவமான சமாதானத்திற்கானவைகளாக அவை அமைவதே நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் அவரது ஆறுவருட எதிர்கால ஆட்சிக்கும் பலமும் பயனும் சேர்க்கக் கூடியதாகும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.